தமிழ் வாழ்க.

# தமிழ்ப் பொழில்

துணர் ௩௯

சோபகிருது

1963 - 64

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B.A., B.L.,

# உள்ளுறை.

சோபகிருது துணர் ௩௯ மலர் ௧—௧௨.
1963-64 பக்கம்


| | | |
|---|---|---|
| 1 | வரலாற்றுப்புதினம்<br>ச. செந்தில்நாதன் | 1 |
| 2 | வாலிவதை<br>த. இராமநாத பிள்ளை பி. ஏ. (லண்டன்) | 5 |
| 3 | மதுரை இடம் மாறியதா?<br>அ. அறிவொளி | 9 |
| 4 | இந்திய நெப்போலியன்<br>M. ரெகுபதி எம். ஏ. | 17 |
| 5 | சிங்க நோக்கு<br>சாலை இளந்திரையன் | 20 |
| 6 | ஈடேற்றம்<br>வித்துவான். ந. செகதீசன் | 27 |
| 7 | பாராட்டுவிழா வேண்டுகோள்<br>புலவர் வேலவன் | 35 |
| 8 | களவியல் உரைநலம்<br>திருவாட்டி மேனகை அம்மையார் | 36, 94, 210, 244, 268, 292, 351, 379 |
| 9 | மதுரையில் கண்ணகி<br>K. S. மகாதேவன் எம். ஏ. பி. எஸ்சி | 44 |
| 10 | ஆதிமந்தி (கவிதை நாடகம்)<br>வித்துவான் ச. பாலசுந்தரம் | 51, 113, 153 176, 217, 249, 281, 312, 343 |
| 11 | எழுத்துப்பணி ஓர் அறம்<br>புலவர் தி. நா. அறிவுஒளி | 65 |
| 12 | பழைய வலம் கல்வெட்டுகள்<br>வித்துவான் சி. கோவிந்தராசனர் | 69 |
| 13 | இயற்கையின் இனிமை இலக்கியத்தில்<br>நாமக்கல் வி. ஆர். சௌரிராசன் | 73 |
| 14 | நிற்க அதற்குத் தக<br>வித்துவான். நடேசநாராயணன் | 78 |
| 15 | கொல்லேறு தழுவல்<br>வித்துவான் தே. ப. சின்னசாமி | 89 |
| 16 | வாலி ஒறுக்கப்பட்டமுறை சரியா?<br>வித்துவான் க. இராமசாமி | 103 |
| 17 | திருவள்ளுவரின் குற்றச்சட்டக் கருத்துக்கள்<br>திரு. தி. வேங்கடவரதன் பி. ஏ., பி. எல். | 108 |
| 18 | உலகப் பண்பின் தாய் தமிழ்ப்பண்பே<br>புலவர் தி. நா. அறிவு ஒளி | 130 |

19 மோரியர் யார்?
த. இராமநாதப் பிள்ளை பி. ஏ. (லண்டன்) 133
20 பாண்டியன் கோனேரின்மை கொண்டான்
வித்துவான் க. மாரன் 134
21 காவிரி—காவேரி
திரு. தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி. 140
22 தமிழில் சிறுகதை (வீரமாமுனிவர் முதல்
மு. வரதீராசனுர் வரை) த. செந்தில்நாதன் எம். ஏ. 144
23 'ஆன்' உருபு
திரு. மோ. இசரயேல் எம். ஏ., 144
24 ஓர் இலக்கண விளக்கம்
திருவாட்டி. மேனகை அம்மையார் 161
25 மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்
வித்துவான் நடேசநாராயணன் 164
26 வாலி ஒறுக்கப்பட்ட முறை சரியா
திரு. த. இராமநாதப் பிள்ளை பி. ஏ. (லண்டன்) 171
27 பத்தூரில் பழைய வேள்விச்சாலே
வித்துவான் சி. கோவிந்தராசனுர் 173
28 வளர்ந்து வாழ்வோம்
புலவர் தி. நா. அறிவு ஒளி 184
29 தமிழ் எண்ணம்
இர. குழந்தைவேலு பி.ஏ. (ஆனர்சு) 188
30 கலேயின் கடமை
புலவர் தி. நா. அறிவு ஒளி 193
31 திருக்குறளில் திருத்தமா?
வித்துவான் க. கிருட்டினராசன், புதுவை 195
32 தமிழ் இலக்கியத்தில் நாடகத்தின் நிலே
திரு. த. செந்தில்நாதன் எம். ஏ., 199
33 சாரியை "அத்து"
திரு வித்துவான் மோ. இசரயேல், எம். ஏ., 203
34 இரும்பாழி
வித்துவான் சி. கோவிந்தராசனுர் 207
35 உண்மை வெல்க
புலவர் தி. நா. அறிவு ஒளி 225
36 சுந்தரனுர் செந்தமிழ்ப் பற்றும் சீரியபணியும்
திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ., 227,259
37 கொங்கு நாட்டுச் செங்குன்றூர்
வித்துவான் சி. கோவிந்தராசனுர் 233,265
38 இளங்கோ, இராமன்
திரு. த. இராமநாதப் பிள்ளை பி. ஏ., (லண்டன்) 239
39 பூசல் தோற்க!
புலவர் தி. நா. அறிவு ஒளி 257

40 வள்ளுவரும் கண்ணோட்டமும்
திரு S. இராசு செட்டியார் பி. ஏ., பி. எல். 273,295
41 பாரதத்தின் அருள் விளக்கு
வித்துவான் ச. பாலசுந்தரம் 289
42 வினையாலணையும் பெயர்
வித்துவான் மோ. இசரயேல் எம். ஏ. 309
43 வைப்புமுறையும் பகுப்பும்
வித்துவான் நடேசநாராயணன் 305
44 நீலமலைப் பழங்குடி மக்களும்—மொழியும்
வித்துவான் சி. கோவிந்தராசனார் 308
45 அறம் என்னும் பேராறு
புலவர் தி நா. அறிவு ஒளி 321
46 தமிழகத்திற்கப்பால்
திரு. K. G. கிருட்டினன் எம். ஏ., பி. டி. 324
47 செந்தமிழ்—கொடுந் தமிழ்
திரு. தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி. 327
48 'அச்சம்' (கவிதை)
வித்துவான் ச. பாலசுந்தரம் 331
49 தொல்காப்பியத்தில் அக்கும் இக்கும்
வித்துவான் திரு. மோ. இசரயேல் எம். ஏ. 337
50 தொதுவர் மொழி
வித்துவான் திரு. சி. கோவிந்தராசனார் 341
51 குறளும் சிலம்பும்
புலவர் திரு. வி. சச்சிதானந்தம் 346
52 தாய்மொழிப் பற்று
புலவர் தி. நா. அறிவு ஒளி 353
53 மலை எழுபது
புலவர் மு. சுந்தரேசன் 356
54 'பத்து'
புலவர் S. நடராசன் புதுக்கோட்டை 361
55 திருவள்ளுவரும் பஞ்சசீலங்களும்
திரு. இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை 366
56 மதியநல்லூர்
வித்துவான் சி. கோவிந்தராசனார் 370
57 கண்ணோட்டம்
வித்துவான் பி. மா. சோமசுந்தரனார் 372

---

# தமிழ்ப் பொழில்

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௩௯ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௪ சோபகிருது, சித்திரை, வைகாசி. 1963 ஏப்ரல், மே. | மலர் க, உ. |


## "வரலாற்றுப் புதினம்"

ச. செந்தில் நாதன்,

23, இரங்கபாசியம் செட்டித் தெரு, சைதாப்பேட்டை சென்னை—15.

வளர்ந்துவரும் தமிழ் இலக்கியத்தில் இன்று புதினங்கள் பெருகிவருகின்றன; புதினங்களைப் படிப்பதில்தான் மக்கள் பேரார்வம் உடையவர்களாக இருக்கின்றார்கள். அறிவியற் கலையின் வளர்ச்சியால், அச்சுப்பொறிகளின் தோற்றத்திற்குப் பின் ஒவ்வொரு நாட்டு இலக்கியத்திலும் புதினங்களே ஏனைய வற்றினின்றும் அதிகமாக எழுதப்பட்டன.

இவ்வாறு வளர்ந்துவரும் புதினங்களைப் பலவகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஒன்றே வரலாற்றுப் புதினம்.

பொதுவாக, சிலரிடையே வரலாற்றுப் புதினம் பற்றி ஒரு தவறான எண்ணம் இருந்து வருகின்றது. "இலக்கியம் என்பது வாழ்வைப் பிரதிபலித்துக் காட்டும் ஒரு கண்ணாடி யாகும்; தற்காலச் சமுதாயத்திற்குச் சற்றும் தொடர்பில்லாத வரலாற்றுப் புதினங்களை இலக்கியம் என்று கொள்வதற் கில்லை. யாரோ இரண்டு, மூன்று மன்னர்கள் தம்முள் புரிந்த சண்டையையும், சச்சரவையும் அறிந்து கொள்வ தனால் என்னபயன்? எதிர்காலச் சமுதாயத்திற்கு அவைகள் எந்த வகையிலும் உதவ முடியாது"—இதுதான் சிலரிடையே நிறைந்திருக்கும் அந்தத் தவறான எண்ணம்.

இன்று வெளிவரும் வார ஏடுகளிலும், திங்கள் ஏடுகளி லும் காணப்படுகின்ற அத்தனைக் கதைகளும் வாழ்வைப் பிரதி பலிக்கும் வண்ணம்தான் இருக்கின்றன; வாழ்க்கையில் நிகழும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மையமாகக்கொண்டுதான் அவைகள் எழுதப்படுகின்றன. வாழ்க்கையைப் பிரதி பலிப் பதனாலே அவைகளெல்லாம் இலக்கியங்களாகிவிட முடியுமா?

கடந்த காலத்தை எண்ணிப் பார்க்காதவன் எதிர் காலத்தில் எதையும் சாதிக்க முடியாது. எதிர் காலத்தின் அடிப்படையே கடந்த காலம்தான். கடந்த காலச் சமுதாயத்தையும் பண்பாட்டையும் உணராதவனல் எதிர் காலத்தில் நல்ல சமுதாயத்தை அமைக்க முடியாது. நடந்து முடிந்த நிகழ்ச்சிகளின் நன்மை தீமைகளை நன்குணர்ந்தால் தான் நடக்க இருக்கும் செயல்களை ஒழுங்காகச் செய்ய முடியும்.

மேலும், வரலாற்றுப் புதினங்களைப் படைப்பதன் நோக்கத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் அதைப் புரிந்து கொண்டால் அந்தத் தவருன எண்ணம் மறைந்து விடும். செய்யுள் வடிவிலே அமைந்து கிடக்கும் பண்டைத் தமிழனின் அருமை பெருமைகளைப் பலரும் படிக்கும் உரை நடை வாயிலாகப் பாமரர்களும் "சீரணிக்க"ச் சற்றுக் கற்பனையைக் கூட்டி எழுதுவதே வரலாற்றுப் புதினம் எழுதுவதன் நோக்கமாகும்.

கதையைத் தவிர வேறு இலக்கியம் அறியாதவர்களும் இதன் வாயிலாக அந்நாட்டுப் பண்பாட்டையும் வீரத்தையும் அறிந்துகொள்ள இயலும். இதை முக்கியக் குறிக்கோளாக் கொண்டுதான் வரலாற்றுப் புதினங்கள் படைக்கப்பட வேண்டும்.

பொதுவாக, இருவகையில் வரலாற்றுப் புதினங்கள் உருவாக்கப்படுகின்றன. கதையை வைத்துக் கொண்டு வரலாற்று நிகழ்ச்சிகளைத் தேடி அலைந்து அக்கதைக்கு "வரலாற்று முலாம் பூசுதல்" ஒருவகை, வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு தன் கற்பனையால் அதைக் கதை வடிவில் கொணர்தல் மற்றொருவகை. அதாவது, கவிதைக்கு இசை அமைத்தல் பின்னர் குறிப்பிட்டவகை; இசைக்கு ஏற்பச் சொற்களைத் தேடியலைதல் முன்னர் குறிப்பிட்ட முறை.

"பின்னர்" குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுகிறவர்களே வரலாற்றுப் புதினத்தின் நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டவர்களாக இருக்க முடியும்.

வரலாற்றுப் புதினத்தைப் படைக்கும்போது சில விதிமுறைகளை ஒழுங்காக ஆசிரியர்கள் கடைபிடிப்பதில்லை. தமிழில் வரலாற்றுப் புதினம் எழுதுகின்றவர்கள் மட்டுமல்ல, வால்டர்ஸ்காட் போன்ற ஆங்கில எழுத்தாளர்களும் சில விதிமுறைகளைச் சரியாகக் கடைபிடிப்பதில்லை. விதிமுறைகளுக்குக் கட்டுப்படாததே "இலக்கியம்" என எண்ணினர் போலும். தெளிவாகத் தெரிந்த வரலாற்று நிகழ்ச்சிகளைக்கூட வால்டர்ஸ்காட் மாற்றி எழுதியுள்ளார். "கெனில்வொர்த்"

(Kenilworth) என்ற புதினத்தில், எலிசபெத் அரசியின் வருகை யானது அந்தச் சூழ்நிலையிலிருந்தும், காலத்திலிருந்தும் வேறு பட்டுள்ளது'' என்றி பட்டர் பீல்டு (Butterfield) என்பவர் தம் நூல் ஒன்றினுள் (The Historical Novel) குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் புதினத்திலும் ஒருசான்று பார்ப்போம். ஜெக சிற்பியனின் ''நாயகி நற்சோணை''யில் நெடுஞ்சேரலாதன் இளமையிலேயே இறப்பதாகக் காட்டி முடிக்கப்படுகின்றது. அவலச் சுவையில் புதினத்தை முடித்தால் சுவையாக இருக் கும் என்று கருதிச் செய்யப்பட்ட மாற்றமாகும் அது. ஆனல் அம்முடிவு வரலாற்றைப் படித்த உள்ளத்திற்கு நிறைவைத் தர இயலாது, தெளிவாகத் தெரியாத் நிகழ்ச்சிகளை மாற்றி ஞல் இழுக்கில்லை; தெரிந்த நிகழ்ச்சிகளை மாற்றும்போது தெளிந்த உள்ளங்கள் சோர்வடைகின்றன. வரலாற்றுப் புதினங்களுக்கும், துப்பறியும் கதைகளுக்கும் உள்ள மலை யளவு வேறுபாட்டை மடுவாக்கிக் கொண்டு, ''மர்மமும் மாயமும்'', ''சூதும் சூழ்ச்சியும்'' தான் வரலாற்றுப் புதினங் களில் நிறைந்திருக்க வேண்டும் என்று கருதி அப்புதினங்களை எழுதக் கூடாது. அவ்வாறு எழுதுவது, தொடர் கதையாகத் திங்கள் ஏடுகளில் படிக்கும்போது வேண்டுமானல் சுவையாக இருக்கலாம். அது போன்ற புதினங்களைச் சேர்த்து வைத்துப் படிக்கும்போதோ, அன்றி ஒரு முறைக்கு மேல் மறுமுறை படிக்கும்போதோ அவைகளில் கொஞ்சமும் சுவையின்றி இருப்பதாக தோன்றும். ஏனெனில் அதுபோன்ற புதினங் களின் உயிரோட்டம் அடுத்தடுத்து வரும் திடுக்கிடும் நிகழ்ச்சி களில்தான் உள்ளது; நாம் மறுமுறை அதைப் படிக்கும்போது திடுக்கிடுவதில்லை; எனவே அவைகள் சுவைப்பதும் இல்லை!

இதற்குச் சான்ருக சாண்டில்யனின் கதைகளைக் கூற லாம். மேலும் சாண்டில்யனின் வருணைகள் ''அளவு கடந்து'' செல்லும்போது நாம் வரலாற்றுப் புதினம் படிக்கின்ருேம் என்பதையே மறக்கச் செய்கின்றன. இதனுல்தானே என்னவோ வரலாற்றுப் புதினங்களை ''நல்ல'' இலக்கியமாகக் கொள்ளச் சிலர் தயங்குகின்றனர்.

சிற்சில சமயங்களில் ஆசிரியரின் உளம் அறியாமலேயே சிறுபிழைகள் நேரக்கூடும். அரு. இராமனுதனின் *''இராஜ ராஜ சோழ''னில் இதுபோன்ற ஓர் பிழை உள்ளது. விமலாதித் தன், தமிழ் அன்னையின் சிலை முன்நின்று வணங்கும்போது, ''தமிழ்ப் பேரரசே! உங்கள் தமிழ் அன்னைக்குக் காற்சிலம்பு களாகச் சிலப்பதிகாரத்தையும் கைவளையலாக வளையாபதி யையும் இடைக்கு மணிமேகலையையும், கழுத்துக்குச்சிந்தாமணி யையும்.....தந்தது எங்கள் சமணம்தான்'' என்று கூறு

* பக்கம் 44

கின்றான். இங்கு மணிமேகலையையும் சமண நூலாகக் கொண்டது தவறல்லவா? ஆயினும், இது ஆசிரியர் அறிந்து செய்த பிழையாக இருக்க இயலாது. பொதுவாக, நமது வரலாற்றுப் புதின ஆசிரியர்கள் பெண் பாத்திரங்களை முறையாகப் படைப்பதில்லை. ஜெகசிற்பியனின் "நந்திவர்மன் காதலி" என்ற புதினத்தில் இடம் பெறும் வாருணி என்ற பாத்திரத்தில் பெண்மையைவிட ஆண்மையே மிகுந்து காணப் படுகின்றது. பெண் பாத்திரங்களைப் படைப்பதில் கல்கி தான் உயர்ந்தவர்.

வரலாற்றுப் புதினங்களில் கால இடப் பொருத்தங்கள் **(Unity of Time and Place)** செறிவுடன் இருக்க வேண்டும். ஏனெனில், வரலாற்றுப் புதின நிகழ்ச்சிகள் ஒரே நாட்டில் நடைபெறுவன அல்ல; சிற்சில நிகழ்ச்சிகள் இந்தியாவின் முழுப்பகுதியையும் இணைக்கின்றன. அந்நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு புதினம் புனையும் ஆசிரியர்கள் பொறுப்புடன் எழுத வேண்டும். சற்றுப் பொறுப்புணர்ச்சி குறைந்தாலும் புதினத்தின் அமைப்பு வேறுபட்டு விடும்; அவை மாறுபட்டு விடும். இதற்கு, கோவி. மணிசேகரனின் "அக்கினிக் கோபம்" தக்க சான்றாகும்.

வரலாற்றிலே அறிவுக்குப் பொருத்தமில்லாத பல நிகழ்ச்சிகளும் செய்திகளும் கலந்து கிடக்கின்றன. அந்நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதும் ஆசிரியர்கள் பொறுப்புடன் எழுத வேண்டும். நம்பத்தகாத நிகழ்ச்சிகளை வரலாறு என்று எண்ணி எழுதுவார்களேயானால் அது வரலாற்றுப் புதினமாக இருக்க இயலாது. மாறாக அது "விக்கிரமாதித்தன் கதை"யாகவும் "இராசாதேசிங்குக் கதை"யாகவும்தான் இருக்க முடியும். புதினத்தைப் படைக்கின்ற பொறுப்புள்ள ஆசிரியர்கள் காலத்தை உணர்ந்து, வரலாற்றுப் புதின ஆசிரியர்களுக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி நல்ல முறையில் மாற்றம் செய்து எழுத வேண்டும். அவ்வாறு செய்யப்பட்ட மாற்றத்தில் ஒன்றை இங்கு காண்போம். "அறம்" வைத்துப் பாடப் பெற்ற "நந்திக்கலம்பகத்தை" நந்திவர்மன் கேட்க, பந்தலெல்லாம் பற்றி எரிய அவன் இறந்து போனான் என்பது நாட்டில் வழங்கும் கதையாகும். இதை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே ஜெகசிற்பியனின் "நந்திவர்மன் காதலி"யாகும். "அறம்" வைத்துப் பாட அப்பந்தல் எரிந்து நந்திவர்மன் இறந்து போனான் என்பதை, நம்மைப் போலவே ஆசிரியர் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் அதே சமயம் அந்நிகழ்ச்சியினை மாற்றி நந்தியின் தமிழ்க் காதலை ஆசிரியர் குறைக்கவும் விரும்பவில்லை. நந்தியின் மீது அக்கலம்பகத்தைப் புலவன் பாடும்போது நந்தியின் எதிரிகள் மறைந்திருந்து,—அந்த

# வாலிவதை

த. இராமநாத பிள்ளை, B. A. London.
யாழ்ப்பாணம், பருத்தித்துறை.

வாலி இந்திரனுக்குப் பிறந்தமையால் வரம்பி லாற்றல் உடையவனாயினான். குரங்கு வயிற்றில் பிறந்தபோதிலும் இயற்கையிலுள்ள குரங்குகளிலும் வலிமையால் சிறந்தான். வாலி காலிலும் விரைந்து செல்லும் வேகமுடையவன்; மலைகள் நிலை பெயர்ந்து துளங்கும் வண்ணம் பாயும் வல்லமை உடையவன்; இராவணனைத் தன் வாலினால் கட்டி உலகெங்கும் தாவித் தாவிச் சென்று கலக்கியவன். அவனுடைய புய வலியை நரசிங்கமே எதிர்க்கமாட்டாதெனலாம். மிக்க வலியுடைய மார்பினனாதலினன்றே, அமரரும் அசுரரும் பாற் கடல் கடைதற்கு வேண்டிய வலியில்லாதவராக நின்றுழி, அவர் வேண்டுகோட்கிணங்கி, வாலி வாசுகியைத் தலையாலும் வாலாலும் பற்றி மந்தர கிரியை நிறுத்தி நின்று அமிர்தத்தைக் கடைந்தெடுத்தனன். தன் வலியாற் பெற்ற அமிர்தத்தைத் தான் உண்ணாமல் அமரர்க்களித்த வள்ளல் ஆயினன் வாலி. இத்தகையோனைக் குரங்கெனல் பொருந்தாதென்க.

வாலி தன்னை எதிர்த்த மாயாவி துந்துபி என்னும் அரக்கரைத் தொலைத்து வீரன் எனப் புகழ் பெற்றான். வாயிலைக் காவல் புரியும்படி தன் தம்பி சுக்கிரீவனை ஏவி, வாலி பிலம் புகுந்து மாயாவியைக் கலைத்துப் பொருதான். இருபத்தெட்டு மாசம் போர் நீடித்தது. வாலி போரில் மடிந்தானோ என ஐயமுற்ற சுக்கிரீவன் பிலம்புகுந்து வாலியைத் தேட எண்ணினன். அவ்வேளையில் அரசைக் காத்தலே கடன் என அமைச்சர் வற்புறுத்தினராக, சுக்கிரீவன் அரசியலை நடாத்தியிருந்தனன். மாயாவியை அஞ்சிய வானரங்கள் பிலத்து

---

மூடநம்பிக்கையைக் சாதகமாகக் கொண்டு—பந்தலுக்கு நெருப்பு வைத்ததாகச் சித்தரித்திருப்பது, "இதுதான் உண்மையில் நடந்ததோ" என்று எண்ணும் வண்ணம் அமைந்துள்ளது.

விரும்பத்தகாத மாற்றங்கள் ஒரு சில இருப்பினும், போற்றுதற்குரிய மாற்றங்கள் தமிழ் வரலாற்றுப் புதினங்களில் பல உள்ளன. கல்கி தொடங்கி வைத்த வரலாற்றுப் புதினம் இன்று வளர்ந்து வருகின்றது. அறுபது புதினங்களுக்குமேல் இன்று வெளிவந்து விட்டன. அந்த அறுபது, நூறாய், ஆயிரமாய் விரைவில் வளரும் என்பதில் ஐயமில்லை.

வளர்க, தமிழ்!

வாயிலைக் கற்களால் அடைத்தனர். வாலி வெற்றி பெற்று வந்து கற்களைக் காலால் உதைத்துத் தள்ளி வெளி ஏறினான். இதை அறிந்த சுக்கிரீவன் உடனே தமயனின் அடி வணங்கினன்; தான் அரசை வௌவவில்லை எனக்கிளந்தான்; பிழை செய்திருந்தால் பொறுக்கும்படி வேண்டினன். வாலி சீறிப் பாய்ந்து தம்பியை மூலை முடக்கெல்லாம் கலைத்துப் புடைத்துக் கொல்ல முயன்றான். சுக்கிரீவன் ஓடித் தப்பி இரலைக் குன்றில் ஒளித்திருந்தான். வலியுள்ளவன் செய்வன எல்லாம் நீதியின் பாற்படுமென வாலி எண்ணினன். தன் வலியில் செருக்குற்றுத் தன் வினையைத் தவறெனக் காட்ட வல்லார் இல்லையென எண்ணிய வாலி தன் தம்பியின் மனையாளைக் கவர்ந்தான்.

இல்லாளை இழந்த சுக்கிரீவன் வில்வீரனாகிய இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அறத்தை நாட்டுதலையும் மறத்தை ஒறுத்தலையும் தன் வாழ்க்கை நோக்கமாகக் கொண்ட அரசிளங்குமரன் சரண்புகுந்த சுக்கிரீவனுக்குத் துணைவனானான். சுக்கிரீவன் தமையனோடு போர் செய்துழி, 'தான் வேறாக நின்று' வேண்டிய பொழுதில் துணைபுரிவான் என இராமன் வாக்களித்தனன். சுக்கிரீவன் தன்னுடன் போர் செய்யும்படி வாலியை அறைகூவினனாக, வாலி 'வந்தேன் வந்தேன்' எனத் துள்ளிக் கொண்டு எழுந்தான். இராமனுடைய துணை பெற்றமையாலேயே சுக்கிரீவன் பொருதற்குத் துணிந்து வந்தனனாகலின் போர்க்குப் போகாமல் இருக்கும்படி வாலியின் பெண் தாரை தடுத்தனன். "நீ என் வீரத்தை அறிகின்றிலை என்றான் வாலி. தந்தையின் சொல்லை நிறைவேற்றுவதற்குத் தன்னரசைத் துறந்த கருணை மிக்க பெரியோன் அறநெறி விலகிச் சுக்கிரீவனுக்குத் துணை புரியவரான்; தனக்குத் துணை வேண்டாத வில்வீரன் குரங்கின் துணைபெற விரும்பான்; எனச் சொன்னான் வாலி. மேலும், யானே பாற்கடல் கடைந்த வீரன்; பகைவரின் பலத்தில் பாதி என்னிடம் வந்து சேரும்; என்னை எதிர்ப்பவர் யார்" எனப் பகர்ந்து பெருமிதத்தோடு வாலி பொருதற்குப் புறப்பட்டான்.

வாலியும் சுக்கிரீவனும் விண்மேலினரோ நெடு வெற்பின் மேலினரோ மண்மேலினரோ எனக் கண்டார் வியக்கும் வண்ணம் தாவித் தாவிப் பொருதனர்; ஒருவரை ஒருவர் குத்தினர், புடைத்தனர், கடித்தனர்; ஒருவரை ஒருவர் கைகளாற்பற்றி எடுத்தெறிந்தனர். வாலியின் தோள்களும் சுக்கிரீவனின் உரமும் தகர்ந்தன. போரில் இளைத்த சுக்கிரீவன் வாளா நின்ற இராமனை அடைந்து துணை வேண்டினான். இராமன் அடையாளப் பூமாலை சூட்டிப் பொரும்படி சொன்னான். போர் மறுபடியும் தொடங்கியது. உயிர்நிலைகளில் வாலி தாக்கச் சுக்கிரீவன் சிதைந்தான். வலியிழந்த நிலையிலும் கருணையின்றி வாலி தன் தம்பியைக் கொல்லத் துணிந்தான்.

சுக்கிரீவனைத் தரையில் மோதுதற்கு வாலி எடுத்தனனாக; இராமன் அம்பைத் துரந்தான்.

அம்பு மார்பில் தைத்ததாக வாலி சோர்ந்து சுக்கிரீவனை நெகிழ விட்டான்; அம்பைக் காலாலும் வாலாலும் பிடித்தான், மார்பைக் கல்லி அம்பைப் பறித்தெடுத்து இராமனுடைய அம்பென அறிந்தான். இல்லறத்தைத் துறந்தது போல் வில்லறத்தையும் விட்டனையோ? மறைந்து நின்று கொல்லுதல் வீரமோ? இரு குரங்குகள் பொரும் பொழுது ஒரு பக்கம் சார்தல் நன்னெறியோ? இல்லாளை அரக்கன் கவர்ந்தமை யால் திகைத்தனையோ? என்னைக் கொன்று தீவினை செய்யும் நீ அரக்கனை முனியத் துணிகின்றனையோ? எல்லா உயிர்கண் மாட்டும் அன்புடையனாக இருக்க வேண்டிய நீ வேதநெறி விலகினையோ? என இகழ்ந்து பேசினன் வாலி.

இராமன் வாலியை அஞ்சி மறைந்து நின்று அம்பெய் தான் அல்லன். சுக்கிரீவனே வாலியை ஒறுத்தற்கு உரிய வனாகலின், அவனை வாலியொடு பொர விட்டுப் பார்த்து நின்றான்; சுக்கிரீவனுக்கு ஆபத்து நேர்ந்த தருணத்தில் துணை புரிந்தான். வாலியைப் போர்க்கழைத்துக் கொல்லவில்லை யெனின், கூறுதும். தன் அம்பு இலக்குத் தவறாதென அறிந்த வில்வீரன் அறைகூவி அம்பெய்யின் தன் வல்லமையைப் புகழ்ந்து பேசுதலாகுமன்றோ. வாலியே, இதோ உன்னைக் கொல்லுகின்றேன்; அம்பு வருகின்றது பார் என்று கிளந்து கொல்லுதலில் என்ன வீரம் உண்டெனக. இனி ஆயுதமில் லாத வாலியை அறைகூவி அம்பெய்தல் வீரத்தின் பாற் படாது. இவ்வண்ணம் போர் நீதியை ஆராய்வோமாயின், வில்வீரன் தன் வில்லை எறிந்து குரங்குபோல் புடைத்துக் கடித்தல்லவோ பொர வேண்டும். இத்தகைய நியாயத்தின் வழி நின்றால் குரங்கோடு மனிதன் போர் புரியாதிருத்தலே நன்னெறியாகும். அரசிளங்குமரன் வாலியொடு பொருது தன் போர் வல்லமையைக் காட்ட வந்தவன் அல்லன் என்பது தும் வாலியை ஒறுத்தற்கே அம்பெய்தான் என்பதும் தெளி வாகும். இது நிற்க

இராமன் தான் வாலியைக் கொல்லுதலில் அறநெறி யினின்று வழுவினான் அல்லன் என்பதைக் காட்டுதற்குக் கூறிய நியாயங்களை ஆராய்வோம். சரண் புகுந்த உன் தம்பியை இரக்கமின்றிக் கொல்ல முயன்றாய்; அவன் மனைவி யைக் கவர்ந்தாய்; தீயவரை ஒறுத்தல் என் கடமை. என அரசிளங்குமரன் அழகாக உரைத்தலைக் காண்க. அப்பொழுது தன்னைத் தண்டித்தல் தவறெனக் காட்டுதற்கு வாலி விளம்பிய நியாயம் போலியாதல் இனிது புலப்படும். யான் தீயவன்

அல்லன்; யான் குரங்கு; விரும்பியவாறு வினை செய்தல் வானரங்களின் இயற்கை; வேத விதிப்படி வானரங்கள் மணஞ் செய்கின்றில; என்பவற்றை அறியாயோ? என்றான் வாலி.

"நலங்கொள் தேவரிற் றோன்றிய நவையறக்
கலங்க லாதற நன்னெறி காண்டலின்
விலங்க லாமை விளங்கிய தாதலால்
அலங்க லாற்கி தடுப்பதன் றுமரோ"

பகுத்தறிவுடைய நீ விலங்கன்று; தேவர் குலத்துதித்த நீ அணங்கே; நன்றிது தீதிது என உணரவல்லாய், ஆகலின் ஒறுக்கப்பட்டாய் என அறநெறி தவறாத அரசிளங்குமரன் கூறினான். மேலும் நன்மைக்கும் தீமைக்கும் வேற்றுமை உணர்ந்த நீ தம்பியின் மனைவியைப் புணர்ந்து தவறிழைத்தாய்; என விடை அளிக்கப்பட்டது. 'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம் கருமமே கட்டளைக்கல்'; என இராமன் விளம்புதலைப் பின்வரும் செய்யுளில் காண்க.

"இனைய தாதலின் எக்குலத் தியாவர்க்கும்
வினையி னால்வரு மேன்மையும் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மகிழ்ந்தனை
மனையின் மாட்சியென் றான்மநு நீதியான்"

இங்ஙனம் வாலி கூறிய நியாயம் போலி என்பதைக் காட்டிய இராமன், அணங்கின இயல்பைப் பெற்ற எருவை வேந்தனின் சீரிய ஒழுக்கம் மெச்சுதற்குரியதென எடுத்துக் காட்டினான்.

"சிந்தை நல்லறத் தின்வழிச் சேறலால்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றுறை வீடுபெற் றெய்திய
எந்தை யும்மெரு வைக்கர சல்லனோ"

இவ்வுண்மை அணங்குகள் விலங்குகள் போலன்றித் தம் வினைகளுக்குப் பாத்திரராவர் என அறிநெறி நின்ற இராமன் இனிது விளக்குதலைக் காண்க. அறநெறி விளக்கப்பெற்ற வாலி தன் குற்றத்தை ஏற்று இராமனடிகளில் சரண் புகுந்தான். வலிமையுடையவனுக்கே எதுசரி எதுபிழை அதைத் தீர்க்கும் உரிமை உண்டென்னும் கொள்கை பொருந்தாதென்பது வாலியின் வதையால் இனிது நாட்டப்படுதல் காண்க.

# மதுரை இடம் மாறியதா?

அ. அறிவொளி

மதுரை இடம் மாறியதா? என்னும் இந்தத் தலைப்பிட்ட கட்டுரை, டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் அவர்களால் 1963 பிப்ரவரித் திங்கள் "கலைக்கதிர்" இதழில் நிலைநாட்டப் பெற்ற "சங்ககாலக் கூடல்" என்னும் கட்டுரையின் காரணங்களை ஆய்வு செய்வதற்காக எழுதப்பட்டது. எனவே அறிஞர்கள் மேலும் இதுபற்றி ஆயுமாறு வேண்டுகிறேன்.

## இருந்தையூர்க் காரணம் :

சங்க காலத்தில் மதுரை, இப்போதுள்ள இடத்தில் இருந்ததாகத் தெரியவில்லை; அக்கால மதுரை, இப்போதுள்ள இடத்திற்குத் தெற்கே 2 கல் தொலைவில் இருந்திருக்க வேண்டும் என்று டாக்டரவர்கள் எழுதியுள்ளார்கள். அதற்குக் காட்டப்பெறும் காரணங்கள் பல; அவற்றுள் ஒன்றே இருந்தையூர்க் காரணமாகும்.

இருந்தையூர் என்ற பெயருடைய ஊரொன்று வையைக் கரையில் இருந்ததைப் பரிபாடலால் அறியலாம். அதற்குச் சான்று பகர்வதுபோல் சிலப்பதிகாரமுமுள்ளது. ஆனால் இப்போது அப்பெயருள்ள ஊரில்லை.—ஆயினும் திருமால் இருந்த நிலையில் காட்சி தருவதனாலேயே அவ்வூர்க்கு 'இருந்தையூர்' என்று பெயர் வந்திருக்க வேண்டும் என்றும்; அவ்வாறு இருந்த நிலையில் காட்சி தருவது இன்றுள்ள கூடலழகர் கோயிலாகையினால், அந்தக் கூடலழகர் கோயிலே பழங்காலத்து 'இருந்தையூர்' என்றும் டாக்டரவர்கள் நிலைநாட்டுகிறார்.

அவரால் நிலைநாட்டப் பெறும் அந்த இருந்தையூரிலோ இன்று வையை ஓடவில்லை. அதற்கு மாறுபட்டு அவ்வூரினின்றும் வடக்கே ஒரு கல் தொலைவில் ஓடுகிறது. ஆகவே முன்பு இருந்தையூரைத் தொட்டுச் சென்ற வையையாறு இப்போது விட்டு விலகிச் செல்வதால், வையையாறு காலத்தால் இடமாறிக் குடியேறியதென்றும் அவர் கூறுகிறார். இதுவரையில் அவர் கூறுவதை ஏற்றுக்கொள்வோமாக.

திரு. இராசமாணிக்கனார் வையையாறு இப்போதுள்ள இடத்திலிருந்து தெற்கே ஒருகல் தொலைவு தள்ளியோடுவது போலப் படம்போட்டு, சங்ககால மதுரையின் இருப்பிடத்தை விளக்குகிறார். அந்தப் படத்தின்படி பார்த்தால், இப்போதுள்ள கூடலழகர் கோயிலை—அதாவது அவர் கண்ட பழைய இருந்தையூரை—வையையாறு தொட்டுச் செல்வதாய் அமைகின்றது.

இருந்தையூரைத் தொட்டுச் செல்வதாய் இருந்தாலும் வேறொரு வேறுபாடும் விளைந்திருக்கின்றது. அஃதென்ன வெனில், வையையாற்றின் தெற்குக் கரையில் சங்ககால மதுரையும்; வடகரையில் இருந்தையூரும் இருக்கின்றன. மேலு மவை எதிரெதிரே அமைந்து வையையாற்றால் இடையே பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவையிரண்டும் எதிரெதிரே அமைந்துகிடந்தனவாக இலக்கியங்கள் இயம்பவில்லை.

"வானூர் எழிலி"—எனவரும் பரிபாடலை எடுத்து மேற் கொண்டு, "வையையாறு முதலில் கூடலையடைந்து மேலும் பாய்கிறது; அங்ஙனம் பாயுமிடத்தில் கூடலையடுத்த ஒரு துறையில் இருந்தையூர் பொருந்தியுள்ளது"—என்றுமவர் கூறுகின்றார். கூடலையடைந்த வையை பிறகே இருந்தையூர்க் குப் பாய்ந்து செல்கிறதென்று கூறினால் அவ்விரு ஊர்களும் எதிரெதிரே இருக்க இயலுமோ? வேண்டுமாயின், கூடலும் இருந்தையூரும் ஒரே கரையில் அடுத்தடுத்த துறைகளா யிருந்தபடி அமைந்தாலோ அல்லது மிகவும் தள்ளியபடி எதி ரெதிர்க் கரையில் இருந்தாலோதாம் கூடலைத் தொட்ட பிறகே இருந்தையூரை வையையாறு சென்று தொட்டதெனும் அவர் கூற்றுப் பொருந்தும்.

**சிலப்பதிகாரச் சான்று :**

மேலுமவர், "சிலப்பதிகாரத்தில் மாதரி என்பாள் திரு மாலை வணங்கப் போகின்றாள்; அத்திருமால் கோயில் வையை யாற்றின் கரையில் இருந்ததெனவும் சிலப்பதிகாரமே செப்பு கின்றது. அதுவே இருந்தையூர்"—என்றும் கூறுகின்றார். இஃது ஏற்புடையதே! என்றாலும் சிலம்பில் கூறப்பட்ட கோயில் நகரத்திற்குள்ளேயே இருந்ததாகத்தான் பெறப்படு கின்றது. இதனை.

"வேந்துதலை பணிப்ப ஏந்துவாட் செழியன்
ஓங்குயர் கூடல் ஊர்துயி லெடுப்ப
நுதல்வழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்"

—என்று வரும் சிலப்பதிகார ஊர்காண் காதை வரிகள் நமக் குத் திருமால் கோயில் நகருக்குள் இருந்ததாகவே மெய்ப்பிக் கின்றன. அது வையையாற்றின் கரையில் மேவியதுவேயாம். அக்கோயிலுக்குத்தான் மாதரியும் சென்றாளாதல் வேண்டும்.

டாக்டரவர்கள் கூறும் இருந்தையூர் நகருக்கு வெளியே யும், வையையின் எதிர்க்கரையிலும் அமைந்துள்ளது. வையை யாற்றின் எதிர்க்கரையில் அமைந்த நகரையும் உள்ளடக்கியே சங்ககால மதுரை அமைந்திருந்தது என்று கூறுதல் வாயாது.

அவரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. கூடலும் இருந்தை யூரும் வையையாற்றின் கரையில் அமைந்து கிடந்தமையை நிலைநாட்ட முடியாதோவெனில், முடியும் என்பதாம்.

### மருதமுன்றுறைத் தோற்றம் :

வையையாறு கூடலைத் தொட்டுச் சென்றே இருந்தை யூரைத் தொட்டது என்ற இராசமாணிக்கனாரின் ஆய்வுக் கேற்பவே சான்றுகாட்டவியலும்.

முன்பு மதுரையம்பதியினர் வையையில் நீராடி மகிழ் தற்குப் பொதுவானதும், சிறப்பானதுமான ஒரு துறையிருந் தது; அது மருதத்துறை என்ற பெயரையுடையது. அத் துறைக்கண் மதுரைவாணர் விழாக்கோலம் பூண்டு நீராடினர் என்று சிலப்பதிகாரமும் பரிபாடலும் கூறுகின்றன. அவ்விலக் கியங்கள் அத்துறையை அழைத்த முறையினால் ஓர் உண்மை பெறப்படும்.

"திருமருத முன்றுறை சேர்ப்புனல்கண் துய்ப்பார்"
(பரிபாடல் 7:83)

"தீன்புனல் வையை திருமருத முன்றுறையால்" (பரிபாடல்)

"திருமருத முன்றுறை முற்றங் குறுகி" (பரிபாடல்)

"திருமருத நீர்ப்பூந்துறை" (பரிபாடல்)

"திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை"
(கலித்தொகை)

"குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகின்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரோடு
வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை
விரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை
ஓங்குநீர் மாடமொடு நாவா யியக்கி" (சிலப்பதிகாரம்)

இவ்வாறு இலக்கியங்கள் மருதத்துறை என்று குறிப் பிடுவதொடு முன்றுறையென்றே குறிப்பிடுவதால் இத்துறை முன்னே அமைந்துகிடந்த துறையெனப் படுவது தெளிவாகும். இம் மருதத்துறை கூடலைச் சேர்ந்ததாகையாலும், முதன் முத லில் நிற்குந் துறையாதலாலும் இதனைத் தொட்டுச் செல்லும் வையையாறு அதே கரையில் உள்ள அடுத்தத் துறையுமாகிய இருந்தையூரை இரண்டாவதாகத் தொட்டுச் சென்றது என்று கூறல் இயல்புடைத்தாம்.

இருந்தையூர்த் துறையும், மருதத் துறையும் ஒத்த சிறப் பினவாதலின் இருந்தை யூரினின்றும் மருதத்துறையைப் பிரித்துணர எளிமையாக அக்காலத்தினர் "மருதமுன்றுறை" எனவும் "திருமருத முன்றுரை" என்றும் வழங்கினர். எனவே சங்ககால வையையாறு இன்றுள்ள இடத்தினின்றும் தெற்கே

ஒருகல் தள்ளியவாறு ஓடியதென்றும், அதன் வடகரையில் முதல் துறையாக மருதத்துறையும், இரண்டாந் துறையாக இருந்தையூரும் இருந்தனவென்றும் கோடல் சாலவுஞ் சிறந்ததாம்.

**திருமுருகாற்றுப் படைமேற் கோள்:**

"மாடமலி மறுகிற் கூடல் குடவயின்"—என்ற திருமுருகாற்றுப்படை வரியைக் காட்டி முற்காலத்தில் மதுரைக்கு மேற்கிலிருந்த திருப்பரங்குன்று இன்று தென்மேற்காக மாறி விட்டது; எனவே மதுரை இன்று மாற்றப்பட்டு விட்டது என்று கூறுகிறார் டாக்டர்.

தென்மேற்கிலுள்ளதொரு ஊரினை மேற்கிலுள்ளது என்று கவிஞர் பாடியிருப்பதும் இலக்கிய வழக்கிற்கு ஏற்புடையதேயாம். மேலும் அவ்விலக்கியம் ஓர் ஆற்றுப்படை யிலக்கியம்; ஆறுசெல்வானொருவனுக்கு ஆற்றுப்படுத்தும் புலவர் மேற்காய் இலங்கியதொரு அரசபாட்டையினைக் காட்டி மேற்கே செல்" என்னும் பொருண்மொழி படைத்த தாயுமிருக்கலாம். அக்காலத்திலுள்ள அரசபாட்டை மேற்கு நோக்கிய தாயுமிருக்கலாம். மேற்கு என்பது கொண்டு அது நேர் மேற்கேதான் என்பதில்லை; என்னை?

"செங்குணக் கொழுகும் அந்தண்
காவிரி போல"

—என்று அகப்பாட்டில் நேர்கிழக்கு என்பதனைத் தவறாமல் புலப்படுத்த "செங்குணக்கு" என்ற சொல் குறிக்கப்பட்டுளது. அதுபோலின்றி முருகாற்றுப் படையில் வறிதே "குடவயின்" என்று குறிக்கப்படுதலின் அஃது தென்மேற்கெனவும் கொள்ளல் தவறன்று.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தில் பாண்டியன் வகுத்த மதுரையின் தெற்குக் கோட்டை வாயிலுக்கு எதிரேதான் திருப்பரங்குன்றமிருந்தது என்று கூறுகிறார். அவ்வடி வருமாறு—"தென்றிசைப் பரங்குன் றமும்"—என்பதாம்.

பரஞ்சோதியார் 250 யாண்டுகட்கு முன்னுள்ளவரேனும், தென்மேற்காய திருப்பரங்குன்றத்தைத் தெற்கு என்று ஏன் பாடினர். அதுபோல் திருமுருகாற்றுப் படையிலும் தென்மேற்கை மேற்கு என்றே பாடியிருத்தல் வேண்டும். அல்லாக்கால் சங்க காலத்தில் மேற்கிலிருந்த குன்றம், 250 யாண்டுகட்கு முன் தெற்கிலிருந்தது, இக்காலத்து அது தென் மேற்கிலிருக்கிறது என்றெல்லாம் மூவகையில் மாற்றமுற்ற தாய்க் கொண்டு இடர்ப்படுவதல்லது வேற்றுவழியில்லையாம்.

**பரிபாடல் பாடுகிறது :**

பரிபாடலில் திருப்பரங்குன்றிலிருந்து மதுரைக்குத் தென்றற் காற்று அசைந்து வரும் தலைமைப்பாடுடையது என்று கூறப்பட்டுள்ளது.

> "தென்றல் அசைவரூஉஞ் செம்மற்றே யம்மநின்
> குன்றத்தாற் கூடல் வரவு" (பரிபாடல்)

—இவ்வாறு கூறப்பட்டதால் சங்க காலத்தில் திருப்பரங்குன்றம் மதுரைக்குத் தென் மேற்கில் இருந்ததென்பது சாலும். ஏனெனில் தென்றல் தென்புறத்திருந்தும், தென் மேற்கினின்றும் வருமென்பது வழக்கமாகுமே யல்லாது மேற்கே இருந்துதான் வந்தது என்பது வாயாது. எனவே திருமுருகாற்றுப் படையில் தென்மேற்கையே மேற்கு என்று கூறப்பட்டிருத்தல் வேண்டும்.

**புதிய இடர்ப்பாடும் தெளிவும் :**

சங்க காலத்தில் வையையாறு இப்போதுள்ள இடத்தினின்றும் தெற்கே ஒருகல் தொலைவு தள்ளியோடியதெனவும், மதுரை மட்டும் என்றும் இடமாறாது இப்போதுள்ள இடத்திலேயே இருந்ததெனவும் கொண்டால் திருப்பரங் குன்றிற்கும் மதுரைக்கும் இடையே வையையாறு ஓடிற்று என்றேற்றுக் கோடல் வேண்டும். வடகரையில் மதுரையும் தென்கரையில் திருப்பரங்குன்றுமென வமையுமன்றே! இப்புதிய விடர்ப் பாட்டிற்கும் நந்தமிழிலக்கியங்கள் தெளிவு தருவனவாகும்.

**முதற் சான்று :**

> வரையழி வாலருவி வாதா லாட்டக்
> கரையழி வாலருவிக் கால்பா ராட்ட
> இரவிற் புணர்ந்தோர் இடைமுலை யல்கல்
> புரைவது பூந்தாரான் குன்றெனக் கூடார்க்
> குரையோ டிழிந்துராய் ஊரிடை யோடி (பரிபாடல் 6)

திருப்பரங் குன்றில் அருவி தாலாட்டவும் காற்று பாராட்டவும் ஆடவரும் பெண்டிரும் இன்புற்றிருக்குஞ் செய்தியை அங்குச் செல்லாது மதுரையிலிருப்பவரிடத்துச் சொல்வது போல வையையாறு திருப்பரங்குன்றினின்றும் மதுரைக்கு ஓடி வருகிறதென்று கூறப்பட்டுளது. இதனல் திருப்பரங்குன்று வையைக் கரையில் அமைந்திருந்தமையும், மதுரையை அடையுமுன்பே திருப்பரங் குன்றத்தை வையையாறு அடைந்ததையும் ஒருங்கே அறியலாம். ஏறத்தாழ நான்குகல் தொலைவில் திருப்பரங் குன்றத்தைத் தொட்ட வையை பிறகு மதுரையைத் தொட்டவையை பிறகு மதுரையில் தொட்டதென் பதையும் வட கரையில் மதுரையும் தென்கரையில் திருப்பரங்

குன்றும் அமைந்து கிடந்தன வென்றும் அறியத்தகும் இக் கருத்தே பற்றித்தான் திருப்பரங்குன்றம் "தென் திருப்பரங் குன்று"—என வழங்கப்பட்டது போலும்.

புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடல்
கலப்போ டியைந்த விரவுத்தீர் எல்லை
அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார்
சிறந்தோர் உலகம் படருநர் போல
உரிமாண் புனைகல மொண்டுகில் தாங்கிப்
புரிமாண் புரவியர் போக்கமை தேரர்
தெரிமலர்த் தாரர் தெருவிருள் சீப்பநின்
குன்றொடு கூட லிடையெல்லா மொன்றுபு
நேர்பூ நிறைபெய் திருநிலம் பூட்டிய
தார்போலும் மாலைத் தலைநிறையாற் றண்மணல்
ஆர்வேலை யாத்திரைசெல் யாறு (பரிபாடல் 11)

—என்ற பாட்டில் வரும் 'யாறு' என்ற சொற்குப் பரிமேலழகர் வழியென்றே பொருள் கொண்டுள்ளார். சங்கவிலக்கியங்களில் வழியென்பதை 'ஆறு' என்றும், நீர் போகும் ஆற்றை யாறு என்றுமே மிகுதியும் குறித்துள்ளனர்.

"ஆறே அருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பிணிக்கும் சூருடை முதலைய"

என்ற அகப்பாட்டிலிருந்து வழிக்கு ஆறெனவும், ஆற்றுக்கு யாறெனவும் வழங்கியமை தெளிவுறும். அன்றியும், "நாறுபு நிகழும் யாறுவர லாறு" என்று வரும் பரிபாடலுக்கு ஆறு னது வரும் வழி என்றே பொருள் கூறப்பட்டுளது.

பரிமேலழகர் காலத்தில் மதுரைக்கும் திருப்பரங்குன்றிற் கும் நடுவே வையை செல்லாத காரணத்தால் வழியென்றே பொருள் கூறினர். அதனை நாம் மாற்றி வழங்குதல் வேண்டும்.

**இரண்டாஞ் சான்று :**

பரிபாடலில் வரும் காதல் நிகழ்ச்சியும் நமக்குக் கரியா யிருப்பது காண்பாம் :

இற்பரத்தை ஒருத்தியொடு ஒருதலைமகன் வையையில் நீராடினன். அதனையறிந்த காதற்பரத்தை ஊடிக் கொண் டாள். அவளின் ஊடலைத் தணிவிக்கும் பொருட்டுத் தளி ரைக் கையுறையாகக் கொண்டு அவளிடம் வந்தான். தளி ரைத் தருவதற்குமுன் அவளுக்கு வையையில் நடந்த நீர்விழா வின் பெருமையை எடுத்துக் கூறினன்.

"வையையானது ஒன்றுபட்ட காதலரின் உள்ளத்தில் நின்ற நிறையை யுடைத்ததுபோல் அணைகளையும் உடைத்தது. அதன் அலைகள் கரையை யுடைத்தன"—என்றும், "மகளிரும் மைந்தரும் நீராடியதால் சந்தனமும், பத்து வகைத் துவர்ப்புச் சாறும், வாசனைப் பொடிகளும், மலரும் சேர்ந்து வையை நீரானது கலங்கித் தோன்றியதால் அந்தணர்கள் அதுகண்டு மருண்டு நீராடாது விலகினர்"—என்றும், "திருப்பரங் குன்றிடத்து ஆடவரும் பெண்டிரும், இன்பந் துய்ப்பதை மதுரையிலுள்ளார்க்குச் சொல்வதேபோல் வையை ஓடி வருகின்றது"—என்றும் அவளிடம் வையையின் பெருமை பலவும் கூறித் தளிரைக் கொடுத்தான்.

அதனைப் பெற்றவள் "இத்தளிர் ஏன் வாடியது. இஃது எனக்காகப் பறித்ததில்லை. வேறு யாரோ புதிய மகளுக்குப் பறித்தது. அவளிதனை மறுத்ததால் மீண்டும் அதனை என்னிடங் கொண்டு வந்தாய் அதனாற்றான் வாடிவிட்டது" என்று கூறினள்.

அதுகேட்ட தலைமகன் "உனக்காகத் தான் தளிரைக் கொய்தேன்; வேறு காரணமில்லை; வரும் வழியில் வையையில் நீர் பெருகிய காரணத்தால் தெப்பத்திலேறிவர நேர்ந்தது; அதனால் காலந்தாழ்ந்து தளிர் வாடிற்று; திருப்பரங் குன்றின்மீது ஆணை"—என்று கூறினன்.

இக்காட்சியுள், வையையின் நீர்விழா பற்றி எடுத்துக் கூறியதும், திருப்பரங் குன்றிலிருந்து மதுரைக்குச் செய்தி கூற வருவதுபோல் வையையாறு வருகிறது என்று கூறியதும், தலைமகனும் காதற் பரத்தையும் மதுரையில் சந்தித்தனர் என்பது தெளிவுபடும்.

தளிர் முதலிய கையுறைகள் கொய்யுமிடம் குன்றமேயாகையால் இந்தத் தலைமகனும் திருப்பரங் குன்றிலேயே தளிர் கொய்தான் என்றுணரத் தகும். மேலுமவன் திருப்பரங் குன்றின்மேல் ஆணையிடுவதனின்றும் அவன் தளிர் கொய்த குன்றத்துக் கடவுளையே சாட்சியாகக் காட்டினன் என்பதுவும் பெறப்படும். இவ்வாறு நிகழ்ச்சி நடந்த களத்துப் பொருள் களையே கரியாக்கிக் கூறல் இலக்கியமரபாம்.

இவ்வாறு திருப்பரங் குன்றிலிருந்து தளிர்கொய்து மதுரைக்கு மீண்டவன் நடுவே வையைக் கடந்ததாகக் கூறுவதிலிருந்து கூடற்கும் குன்றிற்கும் இடையே வையை ஓடியது நிலைபெறும்.

தெய்வ விழவும் திருந்து விருந்தயர்வும்
அவ்வெள் ளருவி யணிபரங் குன்றிற்கும்
தொய்யா விழுச்சீர் வளங்கெழு வையைக்கும்
கொய்யுளை மான்றேர்க் கொடித்தேரான் கூடற்கும்
கையூழ் தடுமாற்றம் நன்று. (பரிபாடல் 17)

—இவ்வண்ணம் குன்றத்தையும் அடுத்து வையையும் பிறகு கூடலேயும் வைத்தெண்ணியதும் நமக்குச் சான்று பகர்வன போல் தோன்றுகின்றது.

எனவே வையையாறு மட்டும் காலத்தால் இடம் பெயர்ந்தது; அது சங்க காலத்தில் இன்றுள்ள இடத்தினின்றும் தெற்கே ஒருகல் தள்ளி ஓடியது. மதுரை மட்டும் இடம் பெயராது இன்றுள்ள இடத்திலேயே அன்றுமிருந்தது என்றறியத் தகும்.

நாயக்க மன்னர் காலத்தில் மதுரை புதுப்பிக்கப்பட்டது உண்மையேனும் அம்மதுரை சங்ககாலக் கூடல் நகரமே என்பதில் எள்ளளவும் ஐயமில்லே. தொன்றுதொட்டு வரும் பொற்றாமரைக் குளமும், அண்ணலார் கோயிலும் பிறவும் காலத்தால் மாற்றப்படவும் மாறவும் எளிமையுடையனவாகா. அண்ணலார் கோயில் தாமரை மலருள் கொட்டை போலவும் பிறவிடங்கள் இதழ் போலவும் காணப்படுமெனப் பரிபாடல் மதுரையைத் தாமரை மலராகக் காட்டுவதற் கேற்ப இன்றைய மதுரை அமைந்து கிடப்பதும் அறியத் தகும்.

இத்தகு காரணங்களேயும் கரியாகக் கிடைப்பனவற்றையும் ஆயுந்தொறும் ஆயுந்தொறும் "பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்"—என்று இளங்கோவடிகள் கூறிய பொன்மொழி ஏற்றம்பெற்று உண்மை விளக்குகின்றது.

---

## புகழ்ச்சியா இகழ்ச்சியா

என்று பிறந்தாள் எனத்தெரியா தோங்கிநிறை
நின்றறிவு சேர்க்கும் நெறியினுள்—துன்றுசுவை
எட்டும் கலேகளோர் எட்டெட்டும் செந்தமிழாள்
தட்டுப் படாதளிக்குந் தாய்

தாயைப் பரிவோடு தாங்கும் தனயர்கொடும்
பேயைப் பணிசெய்யப் பேசுவரோ—நோயை
அலங்கலெனச் சூட்டி ஆக்கமெலாம் போக்கிக்
கலங்கவைப்ப தென்ன கருத்து.

கருத்தழிந்து வாழ்வின் கடன்மறந்து தாய்க்கு
வருத்தமிகச் செய்பவர்வாழ் வாரோ—பெருத்த
புகழ்பொருளே எண்ணிப் பொய்யாகச் செய்வார்க்
கிகழ் வருதலன்றிபிற ஏது.

# இந்திய நெப்போலியன்

M. RAGHUPATHY, M. A.,
Curator Government Museum, Pudukkottai-2.

இந்தியாவின் வரலாற்றில் பொற்காலமெனப் பெயர் பெற்ற பேரரசுகள் மிகச்சில. அவற்றில் ஒன்றுதான் குப்த பேரரசு. இக்குப்த பேரரசைத் தோற்றுவித்தவர் ஸ்ரீகுப்தர் என்பவர். ஆனால் இக்குப்த அரசை பேரரசாக ஆக்கிய பெருமை சமுந்திரகுப்தருக்கே உரித்தாகும். அப்பேரரசின் புகழையும் பரப்பையும் குறையாமல் சரியாமல் கட்டிக்காத்து வந்தவர் இரண்டாம் சந்திரகுப்தராவார்.

சமுந்திரகுப்தரின் அரசவையை அலங்கரித்த கவிகளில் புகழ்பெற்றவர் ஹரிசேனர் என்னும் கவிராயர். இவர் சமுந்திர குப்தரின் அருமைகளையும் பெருமைகளையும், வீரச் செயல்களையும் அலகாபாத் ஸ்தூபியில் பொறித்துள்ளார். இவ்வெழுத்துக்கள் பொதுவாக குப்தர் கால அரசர்களைப் பற்றியும், அன்றைய அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைப் பற்றியும், முக்கியமாக சமுந்திரகுப்தரைப் பற்றியும் தெளிவாகப் பகருகின்றன.

சமுந்திரகுப்தர் எல்லாக் கலைகளிலும் வல்லவர். இவர் பல சிறந்த கவிதைகளை உருவாக்கி, கவிராஜர் என்னும் பட்டத்தைப் பெற்றவர். மேலும், ஆடல் கலையை ஆதரித்தவர் என்பதும், பாடல் கலையில் பற்றுள்ளவர் என்பதும், இவரின் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள யாழ் என்னும் இசைக் கருவி எடுத்துக் காட்டுகிறது. இவர் கல்வி கேள்விகளில் சிறந்திருந்ததோடு, கவிஞர்களையும், கலைஞர்களையும், அறிஞர்களையும் அன்புடன் ஆதரித்து வந்தாரென்பதை இவர்கள் இயற்றிய கவிதைகளும், காவியங்களும் சான்று பகருகின்றன.

சமுந்திரகுப்தர் போர்க் கலையிலும் புகழ்பெற்றவர். போருக்கு எழுந்த பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யும் போர் வீரர். இவர் உடலில் புகழ்க் கண்களாகத் திகழும் நூறு போர்ப் புண்கள் இதற்கு சான்றாகும்.

கி. பி. நான்காம் நூற்றாண்டில் இத்துணைப் பேரும் புகழும் வல்லமையும் ஆற்றலும் படைத்த சமுந்திரகுப்தரை, கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவை அலற வைத்தவரும், அடுத்து ஆசியாவை அஞ்ச வைத்தவருமான பிரெஞ்சு போர் வீரர் நெப்போலியனுக்குச் சமமாக சில சரித்திர ஆசிரியர்கள் ஒப்பிட்டு, சமுந்திரகுப்தரை 'இந்திய நெப்போலியன்' என அழைக்கின்றனர், ஆனால் இப்பெயர் சமுந்திரகுப்தருக்குச் சிறிதும் பொருத்தமற்றதாகும்.

பிரெஞ்சு போர்வீரர் நெப்போலியன் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். படையில் சாதாரண போர் வீரராகச் சேர்ந்தார். இவர் தன் திறமைகளோடு பல சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்திப் போர்க் களத்தில் பல குறிப்பிடத்தக்க வீரச் செயல்களைப் புரிந்தார்; அதன் மூலம் பல வெற்றிகள் பெற்று, புகழ் ஏணியின் உச்சியை அடைந்து, பிரெஞ்சு நாட்டின் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார். பிரெஞ்சு நாட்டைப் பரம்பரையாக ஆண்டுவந்த அரச வம்சத்திலோ, அல்லது அவர்களின் உறவு முறையிலோ தோன்றியவர் அல்லர். ஆனால் இந்திய நெப்போலியன் என அழைக்கப்படும் சமுந்திரகுப்தரோ, குப்த அரசைத் தோற்றுவித்த ஸ்ரீகுப்தர் பரம்பரையில் உதித்தவர். நெப்போலியன் போல் பிரெஞ்சு மக்களின் பிரதிநிதிகளால் நாட்டின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் வம்சாவளி வழக்கமாக, தந்தைக்குப்பின் தனயன் என்ற ரீதியில் அரச பீடத்தில் அமர்ந்தவர். மக்களின் தலைவராக இல்லாமல், மக்களின் தந்தையாக இருந்தார், நெப்போலியன் ஆட்சியோ குடியாட்சி; ஆனால் சமுந்திரகுப்தருடையதோ, முடியாட்சி.

நெப்போலியன் தன் போர்த்திறத்தாலும், படை பலத்தாலும் பல பெரு நாடுகளை வெற்றிகொண்டு, அவற்றைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டதோடல்லாமல், அவற்றின் சுதந்திரத்தைப் பறித்து, படைபலத்தைக் குறைத்து, தன் பிரதிநிதிகளை அவற்றின் தலைவர்களாக அமர்த்தி, அம்மக்களின் வெறுப்புகளையும், ஏச்சுக்களையும் பெற்றுக் கொண்டான். பல நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக வெற்றி கொண்டு ஓர் நிலையில்லா பிரெஞ்சு பேரரசை நிறுவினானேயொழிய, அம்மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டு அவற்றில் நிரந்தர அரசை அமைக்க முடியவில்லை.

சமுந்திரகுப்தரும், தம் படைபலத்தாலும், போர்த் திறத்தாலும் பேரரசுகளையும், சிற்றரசுகளையும் பணியவைத்தார். ஆனால் அவ்வரசுகளையெல்லாம் தம் பேரரசில் சேர்த்து ஒன்றாகக் கட்டிக்காக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு எழவில்லை. போரில் வெற்றி கொண்ட நாட்டை, அப்போரில் தோற்றுவிட்ட அவ்வரசனுக்கே திருப்பிக் கொடுத்து, அவ்வரசனின் அன்பையும் ஆதரவையும், மக்களின் நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் பெற்றதோடு, தன் புகழையும் அந்நாடுகளில் நாட்டினர். தென் இந்திய படையெடுப்பே இதற்குப் போதிய அத்தாட்சியாகும். நெப்போலியன்போல் சமுந்திரகுப்தர் தான் வென்ற நாடுகளை படை பலம்கொண்டு, பீரங்கி முனையில் கட்டிக் காக்காமல். இந்து தர்ம சாஸ்திர விதிப்படி அன்பு பலத்தாலும் ஆன்மீக சக்தியாலும் கட்டிக் காத்தார்.

நாட்டின் தலைவன் 'அரசன்' என்றால், அவன் அன்னிய நாடுகளின்மீது படையெடுத்து அவற்றை வெற்றி கொண்டு, அடிமைப்படுத்தி ஆளவேண்டும். இதுதான் 'அரசன்' என்ற சொல்லிற்கு அமைந்த பொருள் என்ற தவறான எண்ணத்தை நெப்போலியன் கொண்டிருந்தான். ஆனால் சமுத்திரகுப்தரோ அன்னிய நாடுகளை அடிமைகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை அறவே வெறுத்தவர்.

நாட்டின் தலைவன் மதத் தலைவனுக்கவும் இருக்க வேண்டுமென்பது நெப்போலியனின் எண்ணம். ஆகவே, பிரெஞ்சு நாட்டின் தலைவனைப் பொறுப்பேற்றுக் கொண்டவுடனே, மத விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தான். முடிசூட்டு விழாவின்போது, பாதிரியார் தன் தலையில் முடி சூட்டினால், அரசனை ஆக்கிய பெருமையும், அரசனைவிட அதிக அதிகாரமும் பாதிரியாருக்கு ஏற்பட்டுவிடுமெனக் கருதி, பாதிரியார் கையிலிருந்த மணி மகுடத்தை லாவகமாக தன் கைகளில் பெற்று தானே முடிசூட்டிக்கொண்டவன் நெப்போலியன். மேலும் தியோபிலாந்திரபி (**Theophilanthropy**) என்னும் புது மதத்தைத் தோற்றுவித்து, மதத் தலைவர்களின் அதிருப்திக்கும் கோபத்திற்கும் ஆளானவன். ஆனால் சமுந்திரகுப்தர், நெப்போலியன் போல் மத விவகாரங்களில் தலையிடாதவர். மக்களுக்காக மதங்களேயன்றி, மதங்களுக்காக மக்களில்லை என்னும் சிறந்த கருத்தை அறிந்தவர். மதங்களில் பற்றுக் கொள்வதின் மூலம் மக்கள் தங்கள் மதத்தை (திமிரை) ஒழிக்கின்றனர் என்ற உண்மையை உணர்ந்தவர். எம்மதமும் சம்மதம் என்ற உயர்ந்த நீதியை அறிந்திருந்தவர். அதனால் சமுந்திரகுப்தர் தான் வைணவராக இருந்த போதிலும், மற்ற மதங்களில் பற்றுக்கொண்டோரையும் ஆதரித்து, போற்றி வந்தார்.

மேற்கூறிய இருவரின் செயல்களைக் கூர்ந்து நோக்குங்கால், கி. பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சமுந்திரகுப்தருக்கும், கி. பி. 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நெப்போலியனுக்கும் காலத்தால் மட்டுமன்றிக் கருத்திலும் செயலிலும் பெரும் இடைவெளி இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகிறது. ஆகவே பொற்காலத்தில் வாழ்ந்த சமுந்திரகுப்தரைப் பிற்காலத்தில் வாழ்ந்த நெப்போலியனுக்கு ஈடு கட்டி, 'இந்திய நெப்போலியன்' என அழைப்பது, சமுந்திர குப்தருக்கு பொருந்தாது மட்டுமின்றி, தவறாகப் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

# சிங்க நோக்கு

## சாலை இளந்திரையன்

நாம் எலிகளும் நரிகளும் போல வாழ விரும்புவில்லை சிங்கத்தைப் போலவே வாழ விரும்புகிறோம். இந்த விருப்பம் நிறைவேற வேண்டுமானால் நமக்குத் தெளிவும் திறனும் வேண்டும்; நம்மை நாம் அவைகளுக்குத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். காரணம், விலங்கு—பிராணிகளில் எலி, புலி, நரி என்று தனித்தனியே இருப்பது போல மனிதர்களில் தனித்தனிச் சாதிகள் இல்லையே தவிர, அத்தனை இயல்பு களும் மனிதர்களிடம் வெவ்வேறு விகிதங்களில் உள்ளன. மனிதர்களிலே எலி மனிதர் உண்டு; நரிமனிதர் உண்டு, சிங்க மனிதரும் உண்டு. இவர்களைத் 'தட்டிக் கொட்டிச் சரிக் கட்டி' எல்லாரையும் சிங்க மனிதர்களாக்கி,—நாம் எல்லாரும் மனிதச் சிங்கங்களாக வாழ்வதே நமது நோக்கம். அதற்கு நிறைந்த முயற்சியும், நிதானமும் தெளிவும் வேண்டும் என்பதில் ஐயமில்லை.

ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டை அடிமைப்படுத்தும் போது, அதில் உள்ள சிங்கமனிதர்களை எலி—நரி மனிதர் களாக மாற்றுவதே அவர்களின் முதல்வேலை. தண்டோராப் போட்டு எல்லாருக்கும் அறிவித்துவிட்டு இதைச் செய்ய மாட்டார்கள்; தாங்கள் வகுக்கும் ஒவ்வொரு திட்டமும் சிங்கங் களைச் சிறுநரிகளாக்கும் திட்டங்களாகவே அமையும்படி பார்த்துக் கொள்வார்கள். ஒவ்வொரு சிறு செயலையும் இந்த அடிப்படை நோக்கத்தோடேயே செய்து வருவார்கள். நமக்கு இதில் நிறைந்த அனுபவம் இருக்கிறது; நமது வரலாறும் இதற்கு ஆதாரமாக நிற்கிறது. பழந்தமிழ் ஆட்சியில் ஒரு பெருந்தகைமை நிலவியது: ஆற்றல் மிக்கது தங்கள் ஆட்சி என்று காட்டத் தமிழர்கள் எந்த நாட்டையும் வெற்றி கொள் வார்கள். ஆயினும் அந்த நாட்டில் தங்கள் மொழி, கலை, நாகரிகங்களைக் கொண்டு திணிக்கமாட்டார்கள் அதனால் தான் தமிழனின் வெற்றிப் புகழ் இமயத்தில் எழுந்து கடா ரத்தில் எதிரொலித்தாலும் அவனுடைய ஆட்சி அறமும் மொழியும் தமிழகத்தோடேயே நின்றன. அதனைப் புரிந்து கொள்ளாத பலர் இன்று தமிழனைப் பழித்தாலும் அதற்காக நாம் வருந்த வேண்டியதில்லை. "அவர்கள் தாங்கள் செய்வது இன்னது என்று அறியாமலே செய்கிறார்கள்."

இஸ்லாமியர், தெலுங்கர், ஆங்கிலேயர் முதலானோர் ஆட்சி, அவரவர் மொழியையும் கலைகளையும் பிறர்மேல் புகுத்தியுள்ளதைக் கவனித்தால் இந்த வேறுபாடு விளங்கும்

இவர்களின் ஆட்சிக் காலங்களிலேதான் இவர்களின் ஆட்சிக் குட்பட்ட (பிற) நிலங்களில் நரி மனிதர்களும் எலி மனிதர்களும் பெருவாரியாகத் தோன்றினர்கள். பல துறைகளில் பெரிய மனிதர்களாகப் போற்றப்படுகின்றவர்களில் பலர் இந்த வகையில் உருவானவர்களே...

மனிதர்களுக்குள்ளே நரிகளையும் எலிகளையும் உருவாக்கும் திட்டத்தில் முதல்வேலை மொழித்திணிப்பு; இரண்டாவது, அங்கங்கு இருந்துவரும் ஆட்சி அமைப்புக்களை அடியோடு மாற்றுவது; மூன்ருவது, ஆள்வோர் மொழியில் தேர்ச்சி பெறுவோர்க்குப் பாராட்டுகள் வழங்குவது. "அறிவுத்திறமை, அதற்குப் பாராட்டு"—என்று தோன்றுகிற அந்த நிகழ்ச்சி, மறைமுகமாக, மக்களே தங்கள் மொழி, கலை, நாகரிகங்களைப் புறக்கணிக்குமாறு தூண்டும் திட்டமே. இத்தகைய திட்டங்களைச் சிங்க நோக்கினர் உணர்வார்கள்; மற்றவர்கள் எளிதில் சிக்கிக் கொள்வார்கள்.

இன்றைய இந்தியாவில் "சிக்கிக் கொண்டார்" திருக் கூட்டமே அதிகம். சுமார் 150 ஆண்டுகளாக ஆட்சியில், ஆங்கிலேயர் அறிந்தும் அறியாமலும் நம்மனேரில் பெரும் பாலரை நரிமனிதர்களாக்கி விட்டார்கள். அவர்களின் ஆட்சிக் காலத்தில் நமது மொழி, கலை, நாகரிகங்களுக்கு எதிலும் முதலிடம் தரப்பட்டதில்லை; பெரியவனுக மதிக்கப்பட வேண்டுமானல் ஆங்கிலம் படித்திருக்க வேண்டும்; அவர்களின் கலைகளை உணர்ந்து தெளிந்திருக்க வேண்டும்; அவர்களைப் போல ஆகிக் கொள்ள வேண்டும்.

ஆங்கில மொழித் தொடர்பால் நமது மொழி இலக்கியத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டதாகப் பலர் சொல்லி வருகிருர்கள் அது வளர்ச்சியல்ல, மாறுதல் மட்டுமே என்பதை அவர்கள் உணரவில்லை. நாம் அவர்களுக்குச் சமமாக நின்று தொடர்பு கொள்ளாமல், அவர்களிலும் தாழ்ந்து நின்றே தொடர்பு கொண்டோம் இணைந்து செயல்படுவது வேறு, பணிந்து செயல்படுவது வேறு. நண்பனுக நின்று கைகுலுக்கு வதற்கும் சேவகனுக நின்று வணக்கம் செலுத்துவதற்கும் வேறுபாடு உண்டல்லவா? நம்மவர்கள் சுதந்திரமாக நமது மொழி கலை நாகரிகங்களைப் பயின்று தேர்ந்து ஆங்கிலத்தோடு நட்பு முறையில் தொடர்பு கொண்டிருந்தால் நமது கலைக்குப் புதிய ஊட்டம் ஏற்பட்டிருக்கலாம். அது இல்லாததால் புதியது புகுத்தப்பட்ட ஒரு மாறுதல் மட்டுமே ஏற்பட்டுள்ளது.

இதை நரிமனிதர்கள் இன்றும் தெளிவாக உணரவில்லை. அதற்கும் ஆங்கிலேயர் செய்த ஒரு தந்திரமே காரணம். "செத்தும் கெடுத்தான் செவலைக்காட்டான்" என்று ஒரு

பழமொழி உண்டு. தாங்கள் போனபின்னும் தங்கள் பழஞ் செயல்களின் விளைவுகளை இந்தியர்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே ஆங்கிலேயர் அமைதியாக (ச்சுதந்திரம் தந்துவிட்டு!) வெளியேறினார்கள். அவர்கள்மேல் நமக்கு ஏற்பட்ட புதிய அன்பு அவர்களின் பழஞ் செயல்களை ஆய்ந்து காணாதவர்களாக நம்மை ஆக்கிவிட்டதல்லவா?

தொடர்ந்து நாம் அமைத்துக் கொண்ட கட்சி அரசியல் முறை நம்மில் பலரை எலிகளாக்கிக் கொண்டு வருகிறது. இன்றைய அரசியலில் ஒவ்வொரு அரசியல் வாதியும் தனக்கும் தன் கட்சிக்கும் முதல் இடம் கொடுக்கிறான்; மக்களுக்கு இரண்டாவது இடமே கொடுக்கிறான். ஆள்வோர்—ஆளப் படுவோர் என்ற பழைய போக்கு, அமைப்பு முறையில் மாறியதே தவிர அடிப்படையில் மாறவில்லை. முன்பு அந்நிய ஆட்சிக்கு வால்பிடித்துக் கொண்டு மக்களைப் புறக்கணித்த "நரிகள்" இப்போது ஏதாவதொரு கட்சிக்கு வால்பிடித்துக் கொண்டு மக்களைப் புறக்கணிக்கிறார்கள். காரணம், அவர்களுக் கென்று தனித்திறனோ பெருமையோ இல்லை; கட்சி இருந்தால்தான் அவர்களுக்குப் பொதுவாழ்வில் இடமும் பேரும் பெருமையும் உண்டு. அதற்காகவே மக்கள் நலனைப் பலியிட்டும் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ள முன் நிற்கிறார்கள்.

இந்த வரலாற்றில் ஒரு கட்டம் தான் ஆட்சிமொழிகள் சட்டம். முன்பு ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் இந்தியே இந்த நாட்டின் ஆட்சிமொழி என்று முடிவு செய்துவிட்டார்கள். அங்கே சிங்கநோக்குக்கு இடமிருந்ததில்லை; முன்பு செய்திருந்த முடிவுகளை எண்ணினார்களே தவிர, சுதந்திர நாட்டில் அப்பிரச்சினை எப்படித் தீர்க்கப்பட வேண்டும் என்ற பின்னோக்கு அவர்களுக்கு இல்லை. அது இல்லை என்பதை இப்போது (*1963*) வந்துள்ள ஆட்சிமொழிகள் சட்டம் காட்டி விட்டது; இனிவரும் காலமும் இன்னும் தெளிவாக உணர்த்தப் போகிறது.

இந்தக் கட்டத்திலாவது, 'நம்மில் ஏதோ குறை இருக்கிறது, நாம் சிங்கங்களாகச் செயற்படவில்லை' என்பதை நாம் உணரவேண்டும். பலர் உணர்வதாகவே தெரியவில்லை. வருந்தத்தக்கதிலை.

காலக்காற்றில் வற்றிக் கரைந்து எலும்புக்கூடாக நிற்பதைப் பற்றி நரிமனிதர்கள் கவலைப்படமாட்டார்கள். சிங்க மனிதர்கள் அப்படியல்ல; காலத்தை உருவாக்கி நிறுத்தவே அவர்கள் விரும்புவார்கள். முன்னும் பின்னும் நோக்கவல்ல அவர்களால் அதை எளிதாகச் சாதிக்கவும் முடிகிறது. நமது ஆட்சிமொழிச் சிக்கலைப் பாருங்கள்; பலர் நடந்து போன

நிகழ்ச்சிகளை மனத்திற்கொண்டே பேசுகிறார்கள்; தங்களுக்குப் பிறகு இந்தியாவில் (அடுத்த தலைமுறை) மக்கள் வாழப் போவதாகவே அவர்கள் எண்ணவில்லை. பொதுமொழிச் சிக்கலை அவர்கள் அணுகும் முறையிலுள்ள பெரிய குறை இது. அதாவது நேற்றைப் பார்க்கிற நாம், நாளை என்று ஒன்று தொடர இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறோம்.

மொழி சம்பந்தமாக நாம் அமைக்கப் போகும் திட்டம் நம்மைவிட நமது எதிர்காலத் தலைமுறையினருக்கே மிக முக்கியம் என்பதை நாம் ஏனோ மறந்து விடுகிறோம். நமது கண்ணோட்டமும் இன்று வளர்ந்துவரும் தலைமுறையினரின் கண்ணோட்டமும் பலவகைகளில் ஒத்துப்போக முடியாது. நமது கண்ணோட்டத்தை உருவாக்கிய சூழ்நிலை வேறு; அவர்களின் கண்ணோட்டத்தை உருவாக்கிவரும் சூழ்நிலை வேறு; நம்மைப் பொறுத்தவரை ஆங்கிலம் நமது எதிரிகளின் மொழி; நமது மக்களுக்கோ, தங்களைப் போல் உலகின் வேறொரு பகுதியில் வாழும் மக்கட்கூட்டத்தின் ஒருமொழி. நாம் ஆங்கிலேயரிடம் சண்டைக்கு நின்றவர்கள்; அவர்கள் ஆங்கிலேயரிடம் நட்பு முறையில் கைகுலுக்குகின்றவர்கள். நாம் விடுதலைப்போரில் விழுப்புண் பட்டவர்கள்; நமது மக்கள் அதை எல்லாம் கதைகளாக மட்டுமே படிக்கின்றவர்கள். ஆகையால் ஆங்கிலமொழியை நாம் நோக்குவது போன்ற காழ்ப்போடும் கடுகடுப்போடும் நமது மக்கள் நோக்கவே மாட்டார்கள்.

ஆங்கிலமொழி நம்மிடம் வரும்போது துப்பாக்கியோடு வந்தது; நம் மக்களோ, அதன் கையிலிருக்கும் அறிவு என்னும் மலரை நோக்கித் தாங்களாகவே அதனிடம் ஓடுகிறார்கள். ஆட்சியை ஏற்றுக் கொள்ளத் தயங்குவது மனித இயற்கை; அறிவை ஏற்றுக் கொள்ள யாரும் தயங்கமாட்டார்கள். தயங்கினால் அவர்களிடம் ஏதோ குறை இருக்கிறது என்று பொருள். அன்புக்குத்தான் உறவு வேண்டும்; அறிவைப் பெறுவதற்கு உறவு தேவை இல்லை. தாய் என்று நமக்கு ஒருத்திதான் இருக்க முடியும்; ஆசிரியர் ஒருவராகவே இருக்க வேண்டும் என்பதில்லை. அவர் நமது உறவினராகவே இருக்கவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

நல்ல ஆசிரியர் எங்கே இருந்தாலும், அவர் யாராக இருந்தாலும் அவரிடம் சென்று அறிவைப் பெறுவதே முறை. இன்று, அந்த நிலையில் அறிவுத்துறை மொழியாக வளர்ந்துள்ளது ஆங்கிலமொழி. அதை நாமும் அத்துறையில் பயன்படுத்திக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

மொழிப்பற்று, நாட்டுப்பற்று போன்றவைகளைக் கூட ஓர் அளவோடு வைத்துக்கொண்டு உலக நலப்பற்றுக்கொள்

ளும் திசையை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம். நாகரிகங்களும் கலைகளும் தனித்தனியே பிரித்துவைத்துப் பேணப்பட்ட பழைய காலத்தை நினைத்து அதற்கேற்பச் செயல்படுவதில் இனிப் பயனில்லை. நம்முடைய சரக்கு, நம்நாட்டுப் பொருள் என்றெல்லாம் எண்ணிப் பிரிந்திருக்க இனி நேரமில்லை; உலகெங்கிலும் உள்ளவற்றில் உயர்ந்ததையும் வசதியானவற்றையுமே ஏற்றுப் போற்றி உலக மனிதர்களாக வளரவேண்டிய கட்டாயநிலையில் நாம் வாழ்கிறோம். அதனால் பகைமைகளும், இன-நாகரிக வெறுப்புக்களும் கூட விரைவிலேயே மாறிவருகின்றன. முன்பெல்லாம் குடும்பங்களிடையே தலைமுறை தலைமுறையாகப் பகைமை இருக்கும்; தொடர்ந்து கூட்டச் சண்டைகளும் கொலைகளும் நடக்கும், நாடுகளிடையேயும் பகைமை வாழையடி வாழையாக வந்து கொண்டேயிருக்கும். அந்த நிலை எல்லாம் இப்போது மாறி விட்டது. நேற்று நம்மை அடக்கி ஆண்டு நம் முன்னோரில் பலரை ஈவிரக்கமின்றிச் சுட்டுக்கொன்றவர்களின் மக்களோடு நாம் விருந்து உண்கிறோம்: அவர்களிடம் அரசியல் நட்பும் கலை இயல் நட்பும் கொண்டு மகிழ்கிறோம்.

இவைகளுக்கெல்லாம் என்ன பொருள்? உலகச்சமுதாய அடிப்படைச் சிந்தனையே மாறுபட்டிருக்கிறது என்றுதானே பொருள்? நமது வழிமக்கள் இன்னும் அதிகமாக நெருங்கி வரப்போகிறார்கள். எதனையும் அதனை உடையவர்களைக் கொண்டு கணக்கிடாமல் அதன் தகுதியை மட்டும் கொண்டு கணக்கிடப் போகிறார்கள் என்றுதானே பொருள்? இதை நன்கு உணர்ந்தும் நாம் நமது போர்த்தழும்புகளைக் காட்டி நமது மக்களை உலகச் சமுதாயத்தில் சேராதபடி தடுக்கலாமா? "யாரையோ எதிர்ப்பதாக எண்ணிக் கொண்டு நம் பெற்றோர் நன்மையே எதிர்த்திருக்கிறார்கள்" என்று நாளை நம்மக்கள் நம்மையே பழிக்கமாட்டார்களா?—'நிமிர்ந்து நின்று நோக்கவேண்டிய சிக்கலைக் குனிந்து நின்று கணித்திருக்கிறார்களே' என்று வருந்த மாட்டார்களா?

நம் அனைவரின் மொழியும் அல்லாத ஒருமொழியை ஆட்சி மொழியாக வைத்துக்கொள்வதில் வேறுபல நன்மைகளும் உண்டு. அது நமது மொழியாக இல்லாததால், கூடியவரை இன்றியமையாத இடங்களில் மட்டுமே அதைப் பயன்படுத்திக்கொள்வோம். மற்றெல்லாவற்றிலும் நமது தாய்மொழிக்கே முதல் இடம் கொடுப்போம். நமது வசதிக்கென்று நாமே தேர்ந்தெடுத்துக்கொள்வதால் அம்மொழி நம்மை அடக்கி ஆள இடமில்லை. வேலைக்காரன் எசமானனை ஆள முடியுமா?

'எந்த நாட்டில ஓர் அந்நியமொழி ஆட்சிமொழியாக இருக்கிறது? என்று காரசாரமாக சிலர் கேட்கிறார்கள். இது

சென்றுபோன நிகழ்ச்சிகளை நினைத்துப் பேசுகின்ற பேச்சு இதற்கு முன் என்பதாலோ, வேறு இடங்களில் இல்லை என்பதாலோ ஒன்றைச் செய்யக் கூடாது என்று எண்ணுவது சுதந்திர மனப்பான்மையே ஆகாது. நாம் புழங்கிவரும் பொருள்களில் பல முன்பு இல்லாதவை. ஏன் நமது பாராளு மன்றமே முன்பு இல்லாததுதான். முன்பு இல்லை என்பதால் அணுகுண்டு செய்யப்படவில்லையா? முன்பு இல்லை என்பதால் விமானம் செய்யப்படவில்லையா? நம் (உலக) முன்னோர்கள் விமானத்தில் செல்லவில்லை என்பதால் நாம் அதில் ஏறிப் பறக்கவில்லையா? முன்பு இல்லை என்பதால் பாகிஸ்தான் ஏற்படவில்லையா? அவ்வளவு ஏன்? இந்தநாடு முன்புஎன்றுமே ஒன்றுபட்டு இருந்ததில்லை. அதனால் நாம் இப்போது ஒன்றுபட்டு இருக்கக் கூடாதா?

நம்நாட்டில் ஏற்பட்டுள்ளது போன்ற மொழிச்சிக்கல் வேறு எந்த நாட்டிலும் இதற்குமுன் ஏற்பட்டதில்லை. புதிய நோய்க்குப் புதிய மருந்து வேண்டும். இப்படி ஒரு நோய் முன்பு ஏற்பட்டதில்லை என்பதால் வேறொரு நோய்க்குரிய மருந்தை இதற்குக் கொடுக்க முடியுமா? இந்த உண்மைகளை எல்லாம் வாழ்வில் அன்றாடம் கண்டு வந்தும், இதற்கு மாறாக மக்கள் பேசுகிறார்களென்றால் அவர்களுக்குச் சிங்க நோக்கு இல்லை என்பதே பொருள்.

"துணிந்து செயலாற்றி உலகிலேயே புதிய வரலாற்றை நாம் ஏன் ஏற்படுத்தக் கூடாது?"—இந்த எண்ணம் சிங்கங்களுக்கு வரும்; நரிகளுக்கு வராது. நரிகள் குழிகளைத் தேடிப் பதுங்கிக்கொள்ளவே விரும்பும்; சிங்கம் எங்கும் திரிந்து வீரப் பெருமித முழக்கமிடத் தயங்காது.

"அரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ?"

என்று கேட்டாள் நம்முடைய பெண் ஒருத்தி. நாமோ, ஆடாமல் அசையாமல் பிரயாணம் செய்யும் பொறுப்பற்ற வழிகளையே விரும்புகிறோம்.

நம் வீரத்தையும் வினைத்தீரத்தையும் நாம் இழந்து நிற்கிறோம். அதனால் எதிலும் நமது சிந்தனை எட்டி நடக்கத் தயங்கிப் பின் வாங்குகிறது. இப்படிக் குண்டு சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டிக் கொண்டிருந்தால் நாம் அருஞ் சாதனைகள் புரிவது எப்போது? என்றைக்கும் பழைய கறுப்பனே கறுப்பன்தானா?

நாம் தொலைகிறோம்; நமது பிள்ளைகளும் நரிகளாகத்தான் பெருக வேண்டுமா? பிறக்குமுன்பே அவர்களின் காலுக்கு விலங்கு மாட்டிவிட வேண்டுமா? அடிமை வாழ்வில் சுவை கண்டவர்கள் சுதந்திர வாழ்வில் எளிதாக நாட்டம் கொள்ள

மாட்டார்கள்... சீதையின்மேல் கொண்ட மையல் உள்ளே இருக்கும். அதைத் துடைத்துவிட வேண்டும் என்று, இராமனின் அம்புகள் இராவணனின் உடம்பெல்லாம் துளைத்துத் துளைத்துத் தேடின என்று பாடுகிறுன் கம்பன். இன்றைய இந்தியர்களின் உள்ளத்தில் உள்ள குளிவு மனப்பான்மை, கோழைமைகளைத் துடைக்கவும் ஒரு பெரிய அதிர்ச்சி நிகழ்ச்சி நடைபெற வேண்டும். அது நடந்தால்தான், மொழிச் சிக்கல் போன்ற இந்தியப்பொதுச் சிக்கல்களுக்கு நல்ல தீர்ப்பு காணும் தெம்பு நமக்கு ஏற்படும். அதுவரை நாம் சிங்கங்களாவது என்பது சிலரின் பகற்கனவே.

சிக்கல்களைக் கண்டு ஒதுங்கவும் பதுங்கவும் பார்ப்பது நரித்தனம், எலித்தனம்; அவைகளை எதிர்நோக்கி ஏற்றுச் சமாளிப்பதுதான் சிங்கத்தனம். இவற்றுள் நமக்கு எது வேண்டும் என்பதை நாம் விரைவிலேயே முடிவு செய்வது நமக்கும் உலகுக்கும் நல்லது.

---

## பேராசிரியர் திரு. மெ. சுந்தரந்திற்கு டாக்டர் பட்டம்

மதுரை, மார்ச் 31.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் மதுரைக் கிளையில் தமிழ்ப் பணி ஆற்றிவரும் பேராசிரியர் திரு. மெ. சுந்தரம் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம், டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

"சங்க இலக்கியத்தில் சரித்திரச் சான்றுகள்" என்ற தலைப்பில் இவர் செய்த ஆராய்ச்சிக்காக இப்பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் "கல்லாடம்" பற்றி இவர் செய்த ஆராய்ச்சிக்கு அண்ணுமலைப் பல்கலைக்கழகம் எம். லிட். பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

பேராசிரியர் மெ. சுந்தரம் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைத் தியாகராசர் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

டாக்டர் மெ. சுந்தரம் கிழக்குச் ஜெர்மனில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்ற, இந்திய அரசினரால் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார். அப்பதவியினை ஏற்க இன்னும் சில மதியங்களில் செர்மனி செல்லவிருக்கிறுர்.

ஏழு தமிழ் டாக்டர்களில் இவரே ஆண்டில் மிகவும் இளையவர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

புலவர். வேலவன்
தமிழாசிரியர், மதுரை.

## "ஈடேற்றம்"

ந. செகதீசன்,

ம. இ. உ. பள்ளி, ஈரோடு.

**மக்களும் மாக்களும் :**

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றித்தாய்' இறைநலம் வாய்ந்து துலங்கும் இனியநந் தாய்மொழிக்கண் இருக்கின்ற இலக்கண நூல்களுள் தலைமை சிறக்கின்ற தொல்காப்பியத்தின் சொல்லதிகார முதல் நூற்பா திணைப் பகுப்பை எடுத்தோதுகின்றது.

> உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை யென்மனார் அவரல பிறவே
> ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே"

இந்நூற்பாவின் பொதுப்பொருளாய், "மக்களென்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணையென்று சொல்லுவர். மக்களென்று கருதப்படாத பிறபொருளை அஃறிணையென்று சொல்லுவர்; அவ்விரு திணைமேலும் சொற்கள் நிகழும் என்றவாறு" என ஆறு அறிவுடைச் சேனாவரையர் எழுதிச் செல்வர். இந்நூற்பாவின்கண்ணே அமைந்த 'மக்கள்' என்பதற்கு அவர் சிறப்புரை செய்யுங்கால், "ஈண்டு மக்கள் என்றது மக்கள் உணர்வை" என எழுதுகின்றமை நோக்குவார்க்கு ஓர் உண்மை புலப்படுதல் வேண்டும். மக்கள் என்னும் கருத்து அல்லது பெயர் உணர்விற் கிடப்பதுவதேயன்றி உடலுக் கிடப்படுவதன்று என்பதே அவ்வுண்மை!

> "மாவும் மாக்களும் ஐயறிவினவே
> பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே"

எனும் மரபியல் நூற்பாவிற்கு உரை வரைந்த பேராசிரியர்— 'மாக்கள் எனப்படுவார் மனவுணர்ச்சி யில்லாதார்' எனக் குறிப்பிடுவதை உற்று நோக்குமிடத்தும் மக்கள் எனும் பெயர் விழுமிய மனவுணர்ச்சியைச் சுட்டி நிற்பது தென்றென விளங்கும். இவ்வுணர்வே மக்கட்டன்மையை உருவாக்கி மெருகேற்றி வளர்த்து வளமூட்டி வண்புகழ் பெற்றுத்தர வல்லதாம். இவ்வுணர்வுநிலை அற்ற மக்கள் யாக்கையினர் விலங்கொடு ஒருங்கு வைத்து எண்ணப் பெறுவர் என்பதைப் பேராசிரியர் வரையும் 'ஐயறிவுடையன விலங்கும் அவைபோல்வன ஒருசார் மானிடங்களுமாம்' எனும் உரைத்தொடர் தெருட்டும்.

தொல்காப்பியர் வழிநின்று எண்ணி எண்ணி ஆய்ந்து தேர்ந்த ஆசிரியர் திருவள்ளுவனார் இவ்வுண்மையைத் தம் அறிவப் படையலில் ஆங்காங்கு அழகுறச் சுட்டிச் செல்கின்றார். "என்புதோல் போர்த்த உடம்பு; உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால்'; 'மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'; 'பயவாக் களரனையர்'; 'மண்ணோடியைந்த மரத்தனையர், மக்களே போல்வர் கயவர்' எனவரும் தொடர்களில் மக்கள் யாக்கை பெற்றும் மக்கள் உணர்விலாதோரை இழித்தும் பழித்தும் அவர் ஏசுவாராயினர்.

இனி, இம்மக்கள் என்னும் உணர்வு எத்தகைத்து என ஆராய்வுழி, அது வளர்ச்சிக்குரியது, மாற்றத்திற்குரியது, ஏற்றத்திற்குரியது என அறிதல் இயலும். வளர்ச்சி, மாற்றம், ஏற்றம் ஆகிய பண்புகளை இயற்கையிலேயே எய்துதற்குரிய "மக்கள் உணர்வு" சிற்சில சமயங்களில் அடங்கி ஒடுங்கி மழுங்கிப் போதலும், திரிந்து, குலைந்து திசைமாறிப் போதலும் உண்டு. மண்ணோடு மண்ணாய், புழுதி படிந்து ஒளி விளக்கம் பெறாது கிடக்கும் வயிரம், புழுதி போக்கப் பெற்று, ஒளி விளக்கம் பெறப் பட்டைத் தீட்டப் பெறுதல் போலவே இவ்வுணர்வும் தெளிவும் ஒளியும் பெற்றுத்திகழப் பிறமுயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அம்முயற்சிகளுள் முன்னிற்பது கல்வி கற்றலே! கல்வியே விலங்குநிலை யொழித்து நலங்கிளரச் செய்யும் அருகாச் சிறப்புடைக் கருவியாகும். எனவேதான் வள்ளுவனார் கல்வியின் இன்றியமையாமையை உடன்பாட்டு முறையினாலும் எதிர்மறை வகையினாலும் வற்புறுத்துகின்றார்: அங்ஙனம் வற்புறுத்துகின்ற அவர், 'விலங்கிற்கும் மக்கட்கும் எத்துணை வேறுபாடுண்டோ அத்துணை வேறுபாடு கல்வி கற்றோர்க்கும், அஃது அற்றோர்க்கும் உண்டெனக் கூறுகின்றார்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

'விலங்கின் மக்கட்கு ஏற்றமாய உணர்வு மிகுதி காணப்படுவது கற்றோர்கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினர் அல்லர் என்பதாம்' எனப் பரிமேலழகர் தரும் விளக்கமும் உன்னுதற்குரியது. கல்வியே மக்கள் எனும் தகுதியைத் தரவல்லது என்பதே வள்ளுவர் உள்ளம். "கல்வி மனிதனை ஆக்குகின்றது"* என்று, காவ்தார்ன் எனும் ஆங்கில அறிஞர் ஒருவர் கூறியதையும் ஈண்டு ஒப்பிட்டுணரல் வேண்டும். நூல்கள் எனும் பெயருடையனவற்றையெல்லாம் கற்றல் வேண்டும் என்று அவர் கூறாது கற்றற்குரிய நூலையும் குறிப்பிடுவாராகி, 'இலங்குநூல்' என மொழிந்த நுட்பம் வியத்தற்குரியது. உணர்வைத் திரிப்பனவும் மழுக்குவனவுமாகிய

*Education makes the man. Cawthorne.

நூல்கள் நூல்களாகா! 'கற்பவை கற்க' எனப் பிறிதோரிடத்தும் வரையறுத்துதவினர் வள்ளுவர். கற்போர்களைச் சொல்லியதோடமையாது நூலாக்குவோர்க்கும் அறிவுரை வழங்கி நெறிப்படுத்தும் தமிழ்ப்பெருந்தகை இலங்கு நூலையும், கற்கத் தகுந்த நூல்களையும், நவில்தொறும் நயம் பயக்கும் நூல்களையுமே இயற்றுக எனச் சொல்லாமற் சொல்லிய திறம் அவர்க்கேயன்றிப் பிறர் எல்லோர்க்கும் வாய்த்தற் பாலதோ?

**கல்விப்பயன் :**

கல்வி கற்குந்தொறும் அறிவு, துலக்கமும் வளப்பமும் பெறுதல் வேண்டும். அறிவினைத் தொடுமணற்கேணியென வள்ளுவர் விள்ளும் நுண்மையைக் கூர்ந்து பார்க்குங்கால், அறிவு உண்டாக்கப்படுவதன்றெனவும் இயல்பாக அமையப் பெற்றவொன்றென்பதும் அதனைப் பெருக்கும் முயற்சியே கல்வியென்பதும் விளக்கமுறும். மணலின்கட்கேணி அறியாமைபடிந்த மாந்தர் மனம்; அக்கேணிப்புனல் அம்மனத்திடை அமையும் அறிவு; மணலைத் தோண்டி அகற்ற அகற்ற ஊறும் நன்னீர் அறியாமையை அகழ்ந்து எடுக்க எடுக்கப் பெருகும் அறிவு; தோண்டும் முயற்சியே கற்றலாம். திருவள்ளுவனாரின் இக்கருத்தைக் கல்வி உளநூற்றுறை வல்லார் உடன்பட்டேற்கின்றனர். விவேகானந்த அடிகளாரும் அறிவு ஒரு போதும் உண்டாக்கப்படுவதன்று; அது கண்டறிதற்கியலுவதொன்றே"* எனக் கூறுவாராயினர். எனவே கல்விப்பயன் அறிவுப் பெருக்கமும் விளக்கமுமாம்.

திருவள்ளுவனார் கல்வியின் முடிந்த பயனையும் தம் அருங் குறட்பாவில் எடுத்தோதுகின்றார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

தூய அறிவு வடிவினனாகிய இறையுண்மை தெளிந்து வழிபடமாட்டாதார்க்கு கல்வி என்ன பயனைச் செய்யும் என வினவுகின்றார். இறைவனை அறிவு வடிவினன் எனச் சொல்லி அவனை அறியவல்லது அறிவென்பதையும் குறித்து, அவ்வறிவடையாதார் கற்றும் பயனற்றுப்போவர் என்பதையும் குறித்த நயம் இன்பம் விளைக்கின்றது.

"பற்றுங்கவை யற்றீர் பற்றும்
பற்றுங்கது பற்றி
நற்றுங்கதி யடைவோ மெனிற்
கெடுவீ ரோடி வம்மின்
தெற்றார்சடை முடிகான் மற்று
திருப்பெருந் துறை யிறைசீர்

*Knowledge can never be created, it can only be discovered—Complete works of Swamy Vivekananda. (Vol. VII)

கற்றுங்கவன் கழல் பேணின
ரொடுங் கூடுமின் கலந்தே''

எனும் மணிவாசகரின் அணிவாசகமும் கற்றவாறு இறைகழல் போறும் கடனை வற்புறுத்தல் காண்மின்.

கற்றவர் இறைவனைத் தொழுதேத்தும் பண்பினர் என்பதைச் செந்தமிழ்வல்ல சுந்தரமூர்த்தியடிகளாரும்,

''கற்றவர்தொழு தேத்தும் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா! ...... ......

எனக் குறித்துள்ளமை உணரற்பாலது. கற்றுங் கடவுளை வழிபடாதோர் கல்லாதாராகி விலங்கொடு ஒருங்கு வைத்துப் பேசப்படுவர் என்பது, கல்விபற்றி முன்னே குறித்த குறட்பாவையும், கடவுள் வாழ்த்தில் அமைந்த—இங்கே சுட்டப் பெற்ற குறட்பாவையும் இணைத்து நோக்குவார்க்கு இனிது புலப்படும். மேலைப்புலக் கவிஞர் பெருமானாகிய தென்னிசன் என்பார் வழிபாட்டின் விழுமிய பயனைத் தெரிவித்து விரிக்குமிடத்து, *கண்மூடி வாழ்வு நடாத்தும் விலங்கினத்தைவிடக் கடவுள் வழிபாடியற்றாதோர் எவ்வகையிற் சிறந்தவர்? என வினவுகின்றார். கல்விப்பயனாகிய நல்லதன நலனும் தீயதன் தீமையும் அறியலுறாதவரைக் கம்பநாடரும் விலங்கென்றே குறிக்கின்றார்.

"தக்க இன்ன தகாதன இன்னவென்று
ஒக்க உன்ன லராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே ...... ...... "

எனவரும் அவர் பாத் தொடர் இவ்வுண்மையைப் பகர்கின்றது.

கல்விக்குப் பயன் அறிவு. எனவே அறிவைப் பெருக்காத கல்வி கல்வியன்று என வள்ளுவர் கருதுகின்றவராகிக் 'கற்றமூடரும்' மாந்தருள் உண்டெனச் சொல்கின்றார். யார் அக்கற்ற கசடர்? பல நூல்களைக் கற்றிருந்தும் உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் எவரோ அவரேதாம்!

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

---

*More things are wrought by prayer
Than this world dreams of. Wherefore, let thy voice
Rise like a fountain for me night and day.
For what are now better than sleep or goats
That nourish a blind life within the brain,
If knowing God, they lift not Lands of prayer,
Both for themselves and those who call then friends?
(—Tennyson. Merte-d' Arthur.)

இக்குறள் மணியால் ஒழுக்கத்தை அறிந்து கடைப்பிடிக்க வல்லோன் "கற்றவன்" எனும் நிலையினின்றும். 'அறிஞன்' எனும் நிலைக்கு உயர்கின்றனன் என்பது தேற்றம்!

திருவள்ளுவனார் அறிவின் தன்மையை 'அறிவுடைமை' எனும் அதிகாரத்தின்கண்ணே விளக்குமிடத்து, உலகம் யாதொரு வழியில் ஒழுகுகின்றதோ அவ்வழியில் அவ்வுலகத்தோடு மேவித் தானும் ஒழுகுவதே அறிவு எனச் சாற்றுவதையும் நாம் அறிதல் வேண்டும்.

''எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு''

அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாகும் கல்வி எதனைக் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுவும் இக்குறட் புதையலில் அமைந்திருத்தல் அறிவாளர்க்குத் தொடத்தொட விளக்கமாதல் திண்ணம் ''வாழ்வினை வெற்றியுற நடாத்திச் செல்லத் தகுந்த திறமைகளை நல்காக் கல்வியால் என்ன பயன்? அக்கல்வி வளர்க்கும் வெற்றறிவு வீணே யன்றோ?

அறிவுப்பயன் :

அறங்காக்கும் அறிவின் வெற்றியைப் பலபட வகுத்தும் தொகுத்தும் விரித்தும் விளக்கியும் உணர்த்துகின்ற திருவள்ளுவப் பெருந்தகை பயன் நோக்கில் (Utilitaien point of view) ஆயும் திறலுடையராகக் கருதுகின்ற பான்மை அவர் நூல் பயில்வார்க்கு எளிதில் புலனாகும். திருவள்ளுவரின் பல்கலைக் கழகத்தில் 'கற்றவர்' எனும் பட்டம், அறிவு பெருகாதவிடத்தும், அறிவுக்குப் பயன் விளையாத விடத்தும், கற்றவரிடமிருந்து பறிமுதல் செய்யப்படும். கல்வி வாழ்வோடொன்றி நலம் பயப்பதாய் இருந்தால் மட்டுமே பட்டம் நிலைக்கும்.

பொருள்நாட்டம் மக்களின் பொது இயல்பு. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லையென்பதும் தெள்ளத் தெளிந்த உண்மை. பொருள்மீதுள்ள விருப்பினால் அதனைத் தகாத வழிகளில் சென்று பெற முயலுதல் கற்றறிவில்லாத ஒருவரின் செயலாக இருப்பின் அதனைப் பிழையெனப் பேசற்கில்லை. ஆயின் 'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என அவர் இசை பெற, கற்றோன் கல்வியறிவு கயமைக்குத் துணைபோதலால் வசைபெறுதலைத்தான் நல்லறிஞர் கண்டு நாணுகின்றனர். கல்லாதவன் அறமறியமாட்டாமையால் தவறிழைத்தலான் அவன் சான்றோரால் பொறை காட்டப் பெறுகின்றான். கற்றவன் பிறரை ஏய்த்து, வஞ்சித்து நரிவாழ்வு நடாத்தித் தன்னலம் பேண அறிவைப் பயன்படுத்துதல் கண்டு அவனை வெறுத்தொதுக்கின்றனர் மேலோர்.

அறைகுறையாய்க் கற்றவன் பிழைநெறி படர்தலை ஒரு பெருங்குற்றமென வள்ளுவர் எடுத்துக் கொள்ளவில்லை. அறிவுக்கழகு ஆழமும் விரிவுமாகும் (Intensive and Extensive) பிறர் பொருளை விரும்பி யாவர் மாட்டும் அறிவொடுபடர்த

செயல்களைச் செய்வராயின் அவருடைய இத்தகைய நுண்ணி தாய் எல்லா நூல்களிலும் சென்ற அறிவு என்னபயத்ததாம் என்று குறளுடையார் அக்குறையுடையாரை வினவுகின்றார்.

" அஃகி யகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின் " என்பது குறள்

தமக்கு ஓர் இடர் செய்யாவிடத்தும் பிறருக்குத் துன்பஞ் செய்து அதனால் இன்பங் காண்பவர் மக்களுள் கடையாயவர்; தமக்கு இடர் செய்தார்க்குத் தாமும் இடர் செய்து பழி தீர்த்துக் கொள்பவர் இடையாயவர்; தமக்கு இடர் செய் தோர்க்குத் தாமும் அதனையே செய்து தோலாத மேலோரோ தலைமையானவர் ஆவர். அத்தலைமை நிலைமையினரினும் விழுமிய சீர்மை கெழுமியவர் இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்பினராவர்.

அறிவிலாதோன் எக்காலத்தும் பிறர்க்கு வருத்தஞ் செய்வான். அறிவு முதிராதோன் தம்மை வருத்தி யோரை வருத்தி, நலஞ்செய்தோர்க்கு நலஞ்செய்வான். ஆயின் அறிவு முதிர்ந்தோன் தன்னைச் செறுவார் மாட்டும் தீவினைகளைச் செய்யமாட்டான்.

அறிவினுள் எல்லாத் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

இக்குறட்பாவால் பேரறிவின்பயன் இன்னா செய்தார்க்கு இன்னா செய்யாமையாம் என்பது பெறப்படும்.

மிகவுயரிய அறிவு நிலைபற்றியும் வள்ளுவனார் அழகுற எடுத்தோதி அறிவின்பயன் முதிர்ச்சியைப் படிப்படியாக உயர்த்திக்காட்டும் முறைமை சிந்திப்போர்க்கு இன்பஞ் செய்ய வல்லதாகின்றது. முன்னே கிளந்தவாறு தீய செறு வார்க்குஞ் செய்யாவிடல் மட்டும் பேரறிவின் முழுப்பயன் ஆகமாட்டாது. "பிறர் உயிர்க்குவரும் ஊறுபாடு கண்டு அவை தமக்கு வந்தன போலக் குறிக்கொண்டு காத்தலும் வேண்டும்" என இன்னா செய்யாமை எனும் அதிகாரத்தில் இயம்புகின்றார்.

" அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை " என்பது குறள்

பேரறிவு உண்டாயபின் இன்னார் இனியர் என்ற வேறு பாடோ, அஃறிணை உயர்திணை என்ற பாகுபாடோ மனத்த கத்தே எழமாட்டா! இங்குப் 'பிறரின் நோய்' என்னாது 'பிறதின் நோய்' என்று குறித்த நுட்பத்தால் பேரறிவு பேரன்பை உண்டாக்கி அஃறிணை மாட்டும் அருளாகப் பரவு கின்றதை நாம் உணரல் வேண்டும். முதிர்ந்த அன்பும் உயர்ந்த அறிவும் *ஒன்றே என விவேகானந்த அடிகள் எடுத்துச் சொல்லிய உண்மையும் இதுவேயாம்.

* "Extensive love and highest knowledge are one."—The complete works of Swamy Vivekananda. (Vol. VII)

"பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன்"

எனப் புலவர் நல்லந்துவனார் நெய்தற்கலியுட் பெய்து வைத்த கருத்தினை உளங்கொண்டு வள்ளுவத்தோடு ஒப்பிட்டுணர்க.

இவ்வாறு அறிவு, மனப்பண்புகளை மலரச்செய்து, நினைவு சொல் செயல் திருத்தங்களை மக்கள் மாட்டுண்டாக்கி அறிவுடையோரை ஒழுக்கமுடையோராக உயர்த்துகின்றது.

## பண்பின் பயன்

நன்னெறிக்கண் ஒழுக ஒழுக உளச் செம்மை உண்டாகிப் பண்பாடு தோற்றங் கொள்கின்றது. உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகும் ஒழுக்கமே பண்பாடு என்பதனை, 'பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்' எனும் நெய்தற் கலிப் பாடலடி தெரிவிக்கின்றது. ஆசிரியர் திருவள்ளுவனார் அறிவு, பண்பு இரண்டின் தன்மை நன்மைகளை நன்கு ஐயந்திரிபறத் தெளிந்தபின் உலக நிலைபேற்றிற்குப் பண்பே அடிப்படை என முடிவு கட்டுகின்றார்.

'அறிவுடையர் எல்லாம் உடையர்' எனக் கூறிய அவர்க்கு அறிவின் மீது எதனாலோ முழுநம்பிக்கை உண்டாகாமற் போயிற்று. அறிவையும் பண்பையும் ஒன்றாகக் கண்ட அவர் நம் காலத்திலேயே அவை தனித்தனியாகப் பிரிந்து போன காட்சியையும் கண்டவராதல் வேண்டும். அறிவுச் செறிவுடையார் அவர் எதிர் பார்த்ததற்கு மாறாகப் பண்பிலிகளாக உலவுதலை அவர் பலகாலும் கண்டமையோடு, அறிவிலாதாருங்கூடப் பண்புநலன் உடையவராக இருப்பதையும் அவர் நன்கு கண்டிருப்பாராதல் வேண்டும். பண்புடையோரால் தான் உலகநடை தப்பாமல் வருதலை விளங்கிக் கொண்டமையால் அவர் பண்புடைமையைப் போற்றிச் செல்வாராயினர்.

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வதுமன் இப்பாவால் உலகம் மண்புக்கு மாயாமைக்குக் காரணம் அது பண்புடையோர் கண்ணே படுதலே என்பது போதரும். பண்புடையோரைப் பாராட்டும் திருவள்ளுவர் இதற்கு அடுத்த குறட்பாவிலேயே கூரிய அறிவிருந்தும் சீரிய பண்பிலாதவரை மரக்கட்டைகளென இடித்துரைக்கின்றார்.

அரம்பேரும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

திருவள்ளுவனார் திருவுள்ளத்திற்கொப்ப—பண்புடையோருண்மையான் பாருண்டென்பதைக் கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதியும் பாடியுள்ளதைப்பார்மின்.

'உண்டாலம்ம இவ்வுலக மிந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே! முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!

(புறம்—182)

## இசைபெறலும் இறைநிலை மருவுதலும்

பண்பாடுடையர்தம் உள, உரை, உடற் செயல்களால் உயிர்க்கு ஊதியமாகிய புகழைப் பெறுகின்றனர். கடமை வழியே புகழ்நிலைக்கு * இட்டுச் செல்லும் வழி 'எனத்' தென்னிசன் எனும் மேலைப்புலப் புலவரும் புகழ்நிலை பண்புடைய செயல்களால் உருவாவதைக் கூறியுள்ளார். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் ஆவதை உணரவல்லார் உயரிய செயற்கருஞ் செயல்களைச் செய்து பெரியர் எனப் பிறரால் பெருஞ்சுட்டு பெறுவர்.

உலகில் வாழ்ந்தும் வாழாமற்போவோர் பலராகச் சிலரே வாழ்வுண்மை தெரிந்து, வாழும் வழி தெளிந்து வாழ்கின்றவராகின்றனர். முறையறிந்து நெறிவழி நின்று தூய அன்பு நலன் கனிந்த பண்புடை வாழ்வு வாழ்வோர்—வாழ்வது வையத்திலே எனினும் வானத்துத் தெய்வமாகப் போற்றப் பெறுவர் என்பதனை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

—எனும் திருக்குறள் புலப்படுத்துகின்றது.

## முடிவு

திருவள்ளுவப் பெருந்தகை விலங்கு நிலையிலிருந்து மக்களைக் கல்வியுடையவராக்கி, கல்வியுடையவரை அறிவுடையோராக வளர்த்து, அவ்வறிவுடையோரை ஒழுங்குடையவராக உயர்த்தி, ஒழுக்கத்தால் பழுத்த பண்புடையவராக உருவாக்கி, வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்து, வசையொழித்து இசை நல்கி, வானுறையும் தெய்வ நிலைக்கு ஏற்ற வைக்கின்ற பெருந்திறனை என்னென்று வியப்பது! என்னென்று வியப்பது!

'உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குகின்ற வள்ளுவர் வாய்மொழி மாண்பினை'த் தெள்ளத் தெளிந்து வாழ்வீடேற்றம் பெற வம்மினோ வையத்தீர் வள்ளுவ நெறிக்கே!

---

* The path of duty is the way to glory—Tennyson.

# மதுரையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுக
# பாராட்டுவிழாவில் டாக்டர் மெ. சுந்தரம் வேண்டுகோள்

மதுரை மார்ச் 31.

'சங்கம் இருந்து தமிழ் வளர்த்த மதுரையில், இப்பொழுது தமிழ்ப் பண்பாட்டினையும் நாகரிகத்தினையும் போற்றி வளர்க்க, ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும்' என்று பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் இன்று மாலை கூறினார்.

தாம் டாக்டர் பட்டம் பெற்றதை முன்னிட்டு மதுரை எழுத்தாளர் மன்றச் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :

'இளைஞர்கள் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் நன்கு மொழிபெயர்த்து வெளியிட வேண்டும். மேனாடுகளுக்குச் சென்று தமிழ் மொழியின் சிறப்பினைப் பரப்ப வேண்டும். வரலாற்றுச் சிறப்புடைய இடங்களுக்குச் சென்று உண்மைகளைத் திரட்டித் தமிழக வரலாற்றைப் பிழையற எழுத வேண்டும். இத்துறையில் இறங்கி வேலை செய்வோர்க்கு அரசினர் உதவிபுரிய வேண்டும்.'

பாராட்டு விழாவிற்கு, மன்றப் புரவலர் திரு. தி. சுந்தரம் செட்டியார் தலைமை தாங்கினார். பேராசிரியர் மெ. சுந்தரத்தின் மதி நலத்தினையும், இனிய பண்புகளையும் பாராட்டிப் பேசினார்.

அமெரிக்கன் கல்லூரி முதல்வர் திரு. சவரிராயன், தியாகராசர் கல்லூரி முதல்வர் திரு. வரதாச்சாரியார், டாக்டர் சண்முகம், லெ. அழகுசுந்தரஞ் செட்டியார், பிளுங்கு பிச்சை முத்து, இராம. அரு. சுப்பிரமணியன் செட்டியார், 'தமிழ்நாடு' ஆசிரியர் மு. ஏழுமலை, ஆவி. க. தியாகராசன், பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், திருவாட்டிகள் இந்திரா, தே. தியாகராசன், இரகுபதி சுவாமிநாதன் ஆகியோரும் மற்றும் பலரும் டாக்டர் மெ. சுந்தரத்தின் ஆராய்ச்சி வலிமையினையும், இனிய பண்பினையும், விடா முயற்சியினையும் பாராட்டிப் பேசினர். அவர்கள் பேசுகையில், தமிழும் ஆங்கிலமும் அறிந்தோர் மேல் நாடுகளில் தமிழை நன்முறையில் பரப்ப இயலும் என்றும், தமிழ்ப் பண்பாடு எல்லா இடங்களிலும் பரவ அறிஞர்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

தேநீர் விருந்துடன் விழாத் தொடங்கியது. திரு. சுப. சந்தானம் அனைவரையும் வரவேற்றார். செயலாளர் திரு. புலவர் வேலவன் நன்றி கூறினார். மன்றச் சார்பில் டாக்டர் மெ. சுந்தரத்திற்கு ஒரு வாழ்த்துப்பா படித்து அளிக்கப்பட்டது.

**புலவர். வேலவன்**
மன்றச் செயலாளர்.

## களவியல் உரை நலம்

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை.)

### க. களவியல் நூற் சிறப்பு

மண்ணகத்து மாந்தர்களாய்ப் பிறந்த மாண்புடையார் முயலல் வேண்டும் முதன்மையாய பொருள்களை யெல்லாம் நம் தொன்னூலார் ஒருசேரத் திரட்டி, அகம், புறம் என்ற இரண்டனுள் பெய்தடக்கி யுணர்த்தினர். அகம், புறம் என்ற அவ்விரண்டனுள்ளும், அகத்திணையினை விதந்தோதும் நூல்களுள் தலையாய விழுப்பந் தங்கியது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமே யென்க. அதனையடுத் தெண்ணப்படும் அருமையும் பெருமையுஞ் சான்றது களவியல் என்று வழங்கும் இறையனா ரகப்பொருளாம். ஏனைய நூற்களோ காலத்தான் மட்டுமன்றிப் பெருமையினும் பிந்தியனவே. என்னை? அவை வழிநூல் என்னும் வாய்ப்பாட்டின வாகலானும் வழிநூலாய் அமைந்தும் முதல்நூ லத்துணைப் பீடுஞ் சுவையும் பெற்றிலவாகலானு மென்க.

இறையனா ரகப்பொருள் இளம்பிறை சூடிய இறையவனா லருளப்பட்ட தென்ப. இஃது, களவியல், கற்பிய லென்ற இரண்டியல் கொண்டு இயல்வதாயினும்,

> "முற்படப் புணராச் சொல்லின் மையிற்
> கற்பெனப் படுவது களவின் வழித்தே"

என்று களவினையே சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியனாகலின் 'களவியல்' எனச் சிறப்பாற் பெயர் பெற்றது. அறுபது நூற்பாக்கள் கொண்டது. ஆழியினளவை அங்கையடக்கிய அகத்தியனே யொப்ப, பரந்துபட்ட அகப்பொரு ளிலக்கணங்களை யெல்லாம் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சீர்மையது.

### உ. உரைச் சிறப்பு

இத்தகைய விழுமிய நூற்கு, வளம்பல கெழுமிய உரையொன்று "நக்கீரனார் உரை" என்னும் பெயரான் பயின்கின்றது. அவ்வுரைதான் நூற்பாக்களின் கருத்தைத் தெள்ளத் தெளிய விளக்குந் தகைமைத்து. சிந்தைக்குஞ் செவிக்கும் நாவிற்கும் இன்பத்தேன் ஊட்டுஞ் செஞ்சொற்சுவை சேர்ந்தது. தன்னைப் பயில்வார்க்கு, மீட்டும் மீட்டும் பயிலல் வேண்டும் என்னும் வேட்கை மீதூரச் செய்வது.

> "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்"

என்ற குறட்பாவினுக் கிலக்கியமா யமைந்ததிவ் வுரையெனல் மிகையன்று. நவில்தொறும் நூல்நயம் காட்டும் இவ்வுரையின் வரலாற்றைத் துணிதலும் உரையின் நலத்தினை ஆய்தலும் இக்கட்டுரையின் குறிக்கோளென உணர்க.

## ௩. உரை வரலாறு

களவிய லுரையால் பெறப்படும் களவியல் தோற்ற வரலாற்றையும் அதற்குரை கண்டமைந்த செய்தியையும் ஈண்டு நோக்குவாம்:

பாண்டியன் நாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, ஆசிரியன்மார் அப்பதி விடுத்து அயற்புலம் படர்ந்தனர். பின்னர் மழைபெய்து நாடு மலிந்தது. அக்காலை அரசன் 'நூல் வல்லாரைக் கொணர்க' என எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலே மென்று வந்தார். வர, அரசனும் எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டாகலின் பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம் எனக் கவன்றனன். அக் கவற்சி களைவான் கருதிய கருணையாற் கண்ணுதற் பெருமான் இவ்வறுபது நூற்பாக்களையும் அருளினன். இது களவியல் தோற்ற வரலாறு.

வேம்பணிந்த வேந்தன் ஆணைவழி நின்று பாம்பணிந்த பரமன்றன் நூற்பாக்களுக்கு உரைகாண முற்பட்ட புலவர் தாம் தாம் உரைத்த உரையே சிறந்ததென்று சில நாளெல்லாஞ் சென்றன. பின்னர்க் கயற்கண்ணி கேள்வனுர் கழறிய வண்ணம் உருத்திரசன்மனென் பானைத் துணைக்கொண்டு உரைகளைத் திறனாய்வு செய்தனர். அக்காலை மதுரை மருதனிள நாகனுர் உரை ஒரோவிடத்துச் சிறந்ததென்றும் மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் உரை சொற்றோறுஞ் சுவை மிக்கு நூற்பொருளை விளக்கும் நீர்மைத் தென்றுந்தேறினர். கேட்டார்ப் பிணித்துக் கேண்மைகொள் கிழமை தழுவிய அவ்வுரையே அன்று தொட்டுப் பயில்வதாயது. இது உரை கண்ட வரலாறு.

## ச. உரைக்கண் சொல்லாக்கம்

உரை தீம்பாலுந் தேம்பழமுமென இன்சுவையளாவிய நடைத்தே யாயினும் அதன் சொல்லமைப்புகள் நக்கீரனுர் கண்டதன்றிவ்வுரை யென்னுங் கருத்தையே வலியுறுத்துவன. என்னை ? இவ்வுரை மணிமிடை பவளமென்ன வடசொற்கள் விரவிவரும் தன்மையது, எடுத்துக்காட்டாகச் சில காட்டுதும்:

(அ) "சிட்டரை யெல்லாங்கூவி" என்பதிற் "சிட்டர்" எனவும்,

(ஆ) "பிராமணன் சிந்திப்பான்" என்புழிப் "பிராமணன்" எனவும்,

(இ) "காரணிகனைத்தரல் வேண்டும்" என்பதிற் "காரணிகன்" எனவும்,

(ஈ) "குமாரசுவாமியாற் கேட்கப்பட்டது" என்பதிற் "குமாரசுவாமி" எனவும்,

(உ) "சுவர்க்கம் புகுவர்" என்பதிற் "சுவர்க்கம" எனவும்,

(ஊ) "சனநீக்கத்துக்கண்" என்பதிற் "சனம்" எனவும்,

(எ) "நரம்பும் மூத்திரபுரீடங்களும்" என்பதில் "மூத்திர புரீடம்" எனவும்,

(ஏ) "அசுபத்தன்மை" என்பதில் "அசுபம்" எனவும்,

(ஐ) "பன்மை வாசகத்தாற் சொன்னுர்" என்பதில் "வாசகம்" எனவும்,

(ஒ) "அருத்தத்தினெடுபட்டு வாழ்வானும்" என்பதில் "அருத்தம்"

எனவும் வடசொற்களாட்சி செய்தலை நோக்குக.

அத்துடனமையாது, 'தந்திரம் என்னும் வடமொழிப் பொருளை நூல்என வழங்குதல் தமிழ்வழக்கு' என வேண்டா கூறிதலினுலும் இவ்வுரைகாரர் வடமொழிப்பற்றுள்ளம் வாய்ந்து ஆரியத்துக்கும் தமிழுக்கும் இயைபு கற்பிக்கப் புகுவார் என்பதும் வடவர் நெறியிற் படிந்தொழுகுஞ் சீலத்தினர் என்பதும் பெறுதும்.

மற்று, நக்கீரரோவெனில் தாமருளிய திருமுருகாற்றுப்படை, நெடு நல்வாடை போன்ற தனி நூல்களிலும் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள தனிப்பாடல்களிலும் நூற்றுக்கு ஓரிரு விழுக்காடுகூட வேற்றுச்சொல் விரவ நூல் செய்திலர். சாம்பூநதம் என்ற வேற்றுச்சொல் பெய்தலைக் கடிந்து

"நாவலம் பெயரிய பொலம்புனை யவிரிழை"

யெனத் தாமருளிய திருமுருகாற்றுப்படையின்கண் அச்சொற் பொருளை விரித்துக் கூறித் தமிழின் தூய்மை பேணுந் தூயாளராய்த் திகழ்கின்ருர்.

இளங்கோ வடிகளாரும் இதே சொற்பொருள் விரிப்பான் கருதித் தாமருளிய சிலப்பதிகாரத்தே

"நாவலம் பொலந்தகட் டிடைநிலம் போக்கி"

(அறங்கேற்றுகாதை எகஎ வதுவரி).

யெனப்புகன்று தமிழின் தூய்மை பேணியவர்,

"சாத ரூபங் கிளிச்சிறை யாடகம்
சாம்பூ நதமென வோங்கிய கொள்கையில்"
(ஊர்காண் காதை—உளக—வதுவரி)

யென்றுரைத்து தமிழ்ச்சொல் மரபினின்றும் பிறழ்ந்து ஆரிய மொழி பெய்தமைகின்றார். எனவே, நக்கீரனார் காலமாய கடைச்சங்க நாட்களில் ஏற்புடைய வடவர் கருத்துக்களைத் தூய தமிழாலேயே விளக்கும் நெறி உரம் பெற்றிருந்தமையும் இளங்கோவடிகளார் காலமாய சங்கமருவிய நாட்களில் அந்நெறி சாய்ந்து வேற்றுப் புலத்தினர் கருத்தை மட்டுமன்றி அவர்தம் சொல்லையும் தழீஇக் கொண்ட நெறி தோற்றுவாய் கொண்டமையும் பெறப்படும்.

ஆகலின், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் நூற்குரை கண்டார் என்ற செய்தியை உரையின்கண் பயிலும்—கடைச்சங்க காலத்துப் பயிலாத—வடசொல் லாட்சியே நன்கு மறுத்துரைக்கும் சான்றாகும் என்க.

ரு. பாயிர விளக்கம்

எந்நூலுரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்கற் பாற்று என்னும் விதி அகத்தியமுந் தொல்காப்பியமும் அரசோச்சிய கடைச்சங்க நாட்கள் கேட்டறியாதது. சங்கம் மருவிய நாளிலும் மருவாதது. பாயிரம் நக்கீரனார் காலத்தும் புதுவதாகத் தோற்றமுற்றதெனக் கொளற்கும் இடனின்று. என்னை? பாயிரத்தின் சிறப்பை அத்துணை விரித்துப்,

"பாயிரம் இல்லது பனுவல் அன்றே"

எனப் பகர்வார் நக்கீரனாராயின் அவர் தாமருளிய திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை முதலிய தனி நூல்களுக்குப் பாயிர மருளிச் செய்யாதிரார் என்க. பிறசான்றோரும் பாயிரம் பகரா தொழிந்தமை அஃது அவர் காலத்து வழக்குப் பயிற்சி யின்மையையே உணர்த்தும். அன்றியும், தொகை நூல்களைத் தொகுத்தோர் தாமும் அவற்றிற்குப் பாயிரஞ் செய்யாது பாரதம் பாடிய பெருந்தேவனாரது கடவுள் வாழ்த்தினையே முதற்கண் வைத்தமைத்தமையும் இக்கருத்தை அரண் செய்யும். பதிற்றுப்பத்திற் காணலுறும் பதிகங்கள் இதற்கு விதிவிலக்காயுள்ளமையால், இது மற்ற நூல்களினும் மிகப் பிந்திய காலத்தே தொகுக்கப்பட்ட தென்னுஞ் செய்தியை யுணர்த்தும்.

தொல்காப்பியத்துக் காணலுறும் பாயிரம்பற்றி ஆய்தற்கு இஃதிடனின்று. ஆயினும்,

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

என்ற வரிகளை யெடுத்துக்காட்டு மிடத்துக்களவியலுரையில் "தொல்காப்பியரும்" என்ற பாடமும் "தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரங் கூறிய பனம்பாரனும்" என்ற வேறோர் பாடமும் காணப்படல் ஈண்டு உன்னற்பாலது. இதுகுறித்து வேறோர் கட்டுரையிற் காண்பாம் இனி, சங்க மருவிய நூலான சிலப்பதிகாரத்துக் காணப்படும் பதிகம் இளங்கோவடிக ளருளியதன்றென நாவலர் சோமசுந்தர பாரதியார் நன்கு நாட்டிப் போந்தார்.

உரைகாரரும் உரைப்பாயிர முறையாது சென்றமையால் பாயிர வழக்கே அவர் காலத்துப் புகுந்ததெனல் வேண்டும் என்க. எனவேதான் உரையாசிரியர் தம் உரைக்குப் பாயிரம் இன்றியமையாததெனக் கொண்டிலர். பாயிரத் திலக்கணத்தை அத்துணை விரித்துப் புகன்றமையும் புதுவது புகுத்தல் என்பதையே காட்டும். அன்றியும் பாயிர விளக்கமும் உரைவரலாறும் கூறினமை பாயிரம் பகர்ந்ததோ டொக்கு மெனினும் ஒருவாறு அமையும்.

ஆகப் பாயிரத் திலக்கணங் கூறி விளக்கஞ் செய்த பான்மை இஃது நக்கீரனாருரையன் றென்னும் துணிபுணர்த்தும்.

சு. **நூற்பெயர் விகற்பங்கள்**

நூற்பெயர் விகற்பங்களை உணர்த்துங்காலை உரைகாரர்,

"இடுகுறியாற் பெயர் பெற்றன: நிகண்டு; நூல்,
கலைக்கோட்டுத் தண்டு என இவை"

என்பர். ஆயின் இந்நூல்கள் கடைச்சங்க காலத்துப் பயின்றனவோ? அன்றென்றே கோடல் வேண்டும். என்னை? களவியல் உரைகாரரே முச்சங்க வரலாறு கூறுவான் புக்கார் நிகண்டு எழுந்தமையை யாண்டுங் குறித்திலர். நிகண்டு தமிழ் கற்கப் புகுவார்க்கு இன்றியமையாத நூலாகலின், இவ்வகை நூற்கள் அக்காலத்து வழங்கியிருப்பின் உரைகாரர் அதனை உணர்த்தா தொழியாரென்க. அடியார்க்கு நல்லாரும் கடைச்சங்க காலத்து நிகண்டுப் பயிற்சி யுண்மையினை உரைத்திலரென்பதையும் ஈண்டுக் கருதுக.

மற்றும் நூல் என்பது இடுகுறியாற் பெயர் பெற்ற தென்றூர் பிறிதோரிடத்து நூல் என்னும் சொற்குப் பொருள் உரைத்துப் பெயர்க் காரணமும் உரைத்தார். ஆயின் அஃது இடுகுறியாமாறு பொருந்தாது. என்னை? கடைச்சங்க நாட்

களில் நூல் எனப் பெயர் பெறுவண இலக்கண முணர்த் துவன்வே யாதலின் என்க.

ஆசிரியர் தொல்காப்பியனர் முதல் நூல் வழிநூல் என நூல்களின் வகை இரண்டே யெடுத்தோதி யிருப்பவும் உரை காரர் சார்பு நூல் எதிர்நூல் என மற்று மிரண்டு மிகுதிபடக் காட்டிப் பிறர் மதங் கூறின்மையும் இவ்வுரை கடைச்சங்க காலத்து நக்கீரனரதன்று என நனி விளக்கும்.

எ. "என்ப" வாய்பாடு

சங்க வரலாறு கூறும் உரைகாரர் "அவருள் தலைச்சங்க மிருந்தார் அகத்தியனரும் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும் முரஞ்சியூர் முடிநாக ராயரும் நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ் ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப" எனத் தொடங்கி முச்சங்க வரலாறு முடியுங்காறும் ஒவ்வொரு தொடர் மொழியின் ஈற்றின் கண்ணும் 'என்ப' என்ற வாய்பாடிட்டே முற்றுவிப்பர். தலைச்சங்க இடைச்சங்க வரலாற்றுக்கு இவ் வாய்பாடு ஏற்புடைத்தே ஆயினும் கடைச்சங்க வரலாற்றுக் கியையாதன்றே! என்னை? அஃது நக்கீரனர்க்கு நிகழ்கால மாதலின் "என்ப"தொல்லாசிரியர் என்னும் கருத்துப்பட இவ்வாய்ப்பாடு கூறல் இசையாதாகலின்.

அன்றியும், கடைச்சங்க ஆண்டு வரையறையைக் கணிக் குங்காலத்து 'அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப" எனவும் "அவர்களைச் சங்கமிரீ இயினர் கடல்கொள்ளப்பட்டு போந்திருந்த முடத் திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி யீருக நாற்பத் தொன்பதின்மர் என்ப" எனவும் அறுதியிட்டோதுகின்றுர். இஃதும் கடைச்சங்கம் முடிவெய்திச் சில காலங்கழித்தே இவ்வுரை யெழுதப்பட்ட தென்பதையும் இவ்வரலாறுந் தொல்லாசிரியர் உணர்த்த உணரப்பட்ட தென்பதையும் காட்டும்.

இவ்வுரை நக்கீரனரதே யென்று கொண்டால் கடைச் சங்கம் அவர் காலத்துக்கு முன்பே—அஃதும் உருத்திர சன்மனைக் கொண்டு களவியலுரைத் திறனாய்வு நிகழ்த்து முன்பே—முடிவுற்றிருத்தல் வேண்டும். எனவே சங்கத் துக்கும் அவருக்கும் யாதொரு தொடர்பு மின்றெனல் வேண்டும். இம்முடிபு நக்கீரனர் கடைச்சங்கத்திருந்து தமிழாராய்ந்தாரென்ற களவியலுரைகாரரையே மாறு கொள்ளும். சங்கத் தமிழின் தலைமைப் புலவராய நக்கீரரும் சங்கமிரீஇய உக்கிரப் பெருவழுதியு மிருப்ப சங்கம் முடிவுற்ற தாகக் கொள்ளல் அறிவின்பாற் படாது. என்னையோ காரண மெனின் இக்களவிய லுரைகண்ட ஞான்று நக்கீரனரும்

அவரொத்த நாற்பத் தொன்பதின்மரும் கன்மாப்பலகையேறி யிருந்து தமிழாய்ந்தனரே அச்சங்கம் எதன்பாற் படுமென விளைவந் தெய்துமென்க. இச்சங்கமும் கடைச்சங்கத்தையே சார்ந்திருப்ப அதன் ஆயுளை அறுதியிட்டு முன்கூட்டியே யுரைத்தல் இயலாதென்க.

அல்லதூஉம், கடைச்சங்கத்தார் நூலாக 'நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப் பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலுமெனத் தொகை நூல்களை இவ்வுரை வரிசைப் படுத்திக் கூறுகின்றது. ஆயின் களவியல் தோன்றுமுன்பே இவை தொகுக்கப்பட்டு விட்டனவோ? தொகுக்கப்பட்டன என்றே கொள்ளின் களவியற் காலப் புலவர்தம் செந்நா கறிச்சுவைகண்ட மிதப்பாற் கவிச்சுவை காண விழையாது வாளா சோம்பியிருந்தன போலும். மேலும் நெடுந்தொகை நானூற்றைத் தொகுத்த உருத்திரசன்மன் ஐயாட்டைப் பருவம் பலபெற்றன்றோ தொகுத்திருத்தல் வேண்டும்! ஆகவே உரையின்கண் நெடுந்தொகை நானூறு என எண்ணிய செய்தியும் ஏனைத் தொகை நூல்களையுரைத்த பாங்கும் இவ்வுரைகாரர் திருமுருகாற்றுப்படை யருளிய நக்கீரனாரல்லரெனவே வற்புறுத்தும் என்க.

அ. உரைகாரரை நக்கீரனாரே அறியாரோ?

"அதனால் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் செய்தது இந்நூற்குரை யென்பாருமுளர் அவர் செய்திலர், மெய்யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு குமார சுவாமியார் கேட்கப்பட்டது என்க."

என உரையின்கண் பயிலுஞ் செய்தியே இவ்வுரை நக்கீரனாரால் காணப்பட்டதன்றென்பதற்குச் சான்று பகரும். என்னை? உரைகூறுவார் அவராக, அவ்வுரை கற்றோர்பால் நன்கு வழங்கா முன்னமே அவ்வுரைக்காசிரியர் வேறொருவர் என்னும் செய்தி வழங்காதன்றே! நக்கீரனார் தம் முரையில் அச்செய்தியைக் கூறலும் இயலுவதொன்றாகாதன்றே!

மேலும் இந்நூலின்கண் வரும் "உரை நடந்துவந்த முறை"யும் நக்கீரனாரது ஒன்பதாவது தலைமுறையில் முசிறியாசிரியர் நீலகண்டனார் காலத்தே இவ்வுரை வரிவடிவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதை யுணர்த்தும்.

அன்றியும் ஏழாம் நூற்பாவிற்கு விளக்கம் உரைக்கும் போது செலவுச் சொல் கொடுத்துக் கூறல் வேண்டும் என்பதற்கு இலக்கியங் காட்டுவானெழுந்து நெடுந்தொகை முப்பத்தாறாவது பாட்டிலிருந்து.

"தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது"

என்ற அடியைக் காட்டி "என்று சான்றோர் சொல்லியது என்பது" என்பர். அச்செய்யுளாசிரியர் தாமேயாகலும்

தம்மைத்தாமே "சான்றோர்" எனச் சீர்பரவிக் கோடல் ஆசிரியர் . நக்கீரனார்க்கு அவம் விளைப்ப தொன்றன்றே! என்னை ?

"தோன்றாத் தோன்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே"

என்ப வாகலின் இதனாற் தற்புகழ்ச்சி யென்னுங் குற்றஞ் சாரும் என்பது. எனவே நக்கீரனாரே உரைகண்டா ரென்றல் உண்மையாயின் "சான்றோர் சொல்லிய" தென்னாது "யாம் சொல்லியது" எனவும் "நக்கீரனாரால் உரைகண்" டென்னாது "யாம் உரைகண்" டெனவுமே உரைத்திருப்பர்.

கூ. எடுத்துக்காட்டுச் செய்யுட்கள்

இந்நூற்கண் ஆளப்பட்டுள்ள எடுத்துக்காட்டுச் செய்யுட் களனைத்துங் கட்டளைக் கலித்துறையானமைந்த கோவைப் பாக்களே. இவ்வகை செய்யுட்கள் சங்க காலச் சான்றோர் பாடல்களி லமைந்தில. தொல்காப்பியத்தும் இவைகட்கு விதி கூறப்பட்டிலது. நக்கீரனாரே இவ்வகைப்பாக்களைப் புதுவதாகப் புனைந்தமைத்தாரென்றலும் பொருந்துவதன்று. என்னை? நக்கீரனார் வடசொல்விரவாது செய்யுள் யாக்குந் திறனுடையாரென்பது மேலே கண்டாம். அத்தகைய வித்தகர் தாம் சிறிதும் எண்ணாது.

"செம்மைத் தனிக்கோல் திறல்மன்னன் சேவூர்ச்
செருமலைந்தார்
தம்மைப் புறங்கண்ட சத்துருதுரந்தரன்"

என வேற்றுச் சொல் பெய்தமைத்துப் பாடுவரோ என்க. அன்றியும்,

"இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே"

யென அருவியின் ஓசைபோன்றே செவிக்கின்ப மூட்டும் செய்யுள் யாக்கும் திறலமைந்தார்.

"ஆமா றறிபவர் யாரே விதியையந் தீந்தமிழ்சார்"

என இசை இடையறுந்திசைக்கும் பொருணலம் புணராப் பாக்களையோ யாப்பர் என்க. அன்றியும் இச்செய்யுட்கள் கற்பனை வளம் பெறுதனவாய் தொகைநூற் செய்யுட் கருத்துக்களையே நுதலுந் தன்மையான் இவை நக்கீரனார் பாக்களே எனத் துணிதற்கு நடுநின்ற நெஞ்சம் நடுங்கும் உரைகாரர் இவற்றை எடுத்துக் காட்டாக அமைத்தமையால் இச்செய்யுட்கள் அவர்காலத்து வழக்காறுள்ளன வாகவோ அன்றி அவரே புனைந்ததாகவோ ஆதல் வேண்டும். கடைச் சங்கத்து நக்கீரனார் காலத்து வழக்காற்றிலிருந்தன வெனின் நந்தொல்லாசிரியன்மார்மீது இதனினும் மிகுதி இழுக்கேற்று மாறில்லை யென்க. இதற்கு எம்முள்ளமும் துணியாது. பிற சான்றோருள்ளமும் துணியாதென்க. [தொடரும்]

# மதுரையில் கண்ணகி

கே. எஸ். மகாதேவன், M.A., B.Sc.

காப்பியம் எழுதும் புலவர்கள் காப்பிய நிகழ்ச்சிகளைக் கூற முற்படும்பொழுது கதைக்குத் திருப்பு மையங்களாக அமையும் நிகழ்ச்சிகளை முன்னரும், ஏனைய நிகழ்ச்சிகளைப் பின்னரும் சொல்லியாக வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் நிறுத்தப்படுகிறார்கள்; இதனால் காப்பியத்தில் காதைகளின் வரிசை கால வரிசையினின்றும் பெரிதும் மாறுபட்டு விடுகிறது; இருந்தாலும், இத்தகைய இடங்களில் கதையின் போக்கில் குழப்பம் நேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்வது காப்பிய ஆசிரியரின் தலைசிறந்த பொறுப்பாகும். வியக்கத்தக்க நினைவாற்றலோடு, விவரிக்காது விட்டவற்றை அச்சாணி போன்ற சொற்களைக் கொண்டு மீண்டும் ஓரிடத்தில் விவரிப்பதன் மூலம், காப்பிய ஆசிரியர்கள் அந்தப் பொறுப்பினை நிறைவேற்றி வைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, நம் இளங்கோவடிகளாரையே கொள்ளலாம்!

## மதுரை வாழ்க்கை எத்தனை நாள்?

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கொலைக் களக் காதையிலும், ஆயர்பாடியில் நிகழ்ந்த உற்பாதங்களை அடுத்து வரும் 'ஆய்ச்சியர் குரவை'யிலும் இளங்கோவடிகளார் அறிவிக்கின்றார். அவ்வாறே, வெட்டுண்ட கோவலனின் உடலைச், சென்று கண்ட கண்ணகியின் செய்தியை 'ஊர்சூழ்வரி'யிலும் கோப்பெருந்தேவி தீக்கனவு கண்ட செய்தியை அடுத்து வரும் 'வழக்குரை காதை'யிலும் கூறுகின்றார். இளங்கோவடிகள் அமைத்திருக்கும் இந்நிகழ்ச்சி வரிசையை அப்படியே கால வரிசையாகக் கருதிக் கொள்வோரும் உளர்! இவர்கள், கோவலன் இறந்த மறுநாள் தான் குரவைக் கூத்து நடைபெற்றது என்றும், குரவை முடிந்த பின்னரே கோவலன் இறந்த செய்தி கண்ணகிக்கு எட்டுவதால், கோவலன் இறந்த மறுநாள்தான் கண்ணகி அவன் உடலைச் சென்று கண்டாள் என்றும் முடிவு செய்து விடுவர்! அவ்வாறே, கண்ணகி கோவலன் உடலைக் கண்டதனை அடுத்து வந்த இரவிலேயே கோப்பெருந்தேவி தீக்கனவு கண்டாள் என்றும், கனவு கண்ட மறுநாள் கண்ணகி வழக்குரைப்பதற்காகப் பாண்டியன் அவைக்களம் சென்றாள் என்றும் கொள்வர்! எனவே, இவர்கள் கோவலன் இறப்பதற்கு ஒரு நாளும் கண்ணகி சென்று அவன் உடலை காண்பதற்கு ஒரு நாளும், வழக்காடி மதுரையை அவள் எரிப்பதற்கு ஒரு நாளும் ஆக மூன்று நாட்களை எடுத்துக் கொள்கின்றனர்!

மன்னனும் மதுரையும் அழிந்தது வெள்ளிக்கிழமை என்ற உண்மையை வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண உரைசால் மதுரையொடு அரசு கேடுறும்......(கட்டுரைக்காதை) என்ற அடிகள் தெரிவிப்பதால், புதன்கிழமை கோவலன் கொலையுண்டான் என்றும், வியாழனன்று கோவலன் கொலையுண்ட செய்தி அறிந்த கண்ணகி கொலைக்களம் சென்று அன்றிரவை அங்கேயே கழித்தாள் என்றும், பின்னர் வெள்ளிக்கிழமை மன்னனை வழக்கில் வென்று மதுரைக்கு தீ மூட்டினுள் என்றும் முடிவு கட்டி விடுவர்!

இனி இத்தகைய தவருன முடிவுக்கு வருவதைத் தடுக்கும் பொறுப்பினைக் காப்பிய ஆசிரியர் என்ற முறையில் இளங்கோவடிகளார் எவ்வாறு வியக்கத் தகுந்த நினைவாற்றலுடன் மேற்கொண்டு நிறைவேற்றுகிருர் என்பதனையும் பார்ப்போம்!

## மதுரை சேர்ந்த நாள்

"காதலி தன்னெடு கதிர்செல்வதன் முன் மாட மதுரை மாநகர் புகுக" என்று கோவலனுக்கு அறிவுரை கவுந்தியடிகள் கூறுதலானும், கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக் கொண்டு மாதரி தன் மனை புக்கது "சென்ற ஞாயிற்றுச் செல்சுடர் அமயத்து" ஆதலானும் ஒரு நாள் கதிரவன் மறைந்து கொண்டிருக்கும் நேரத்தில் கண்ணகியும் கோவலனும் மதுரை புக்கனர் என்பது பெறப்படுகின்றது. எனவே அன்றிரவை அவர்கள் ஆயர்பாடியிலே கழித்தனர்.

## மறுநாட் காலையில்......

பொழுது விடிந்ததும், மாதரி மற்ற ஆய்ச்சியரைப் பார்த்துச் "சாவக நோன்பிகள் அடிகளாதலின்.........நாள் வழிப்படும் அடிசிலாக்குதற்கு அமைந்த நற்கலங்கள் நெடியாதளிமின் நீர் எனக்கூற" அவர்கள் கொடுத்த கலங்களையும் பண்டங்களையும் கொண்டு 'காலைப் பொழுதில்' கண்ணகி சமைத்த உணவினைக் கோவலன் உண்டான் என்பதும் தெளிவாகின்றது. இங்குச் 'சாவக நோன்பிகள்' என்பதற்கு 'இரவில் உண்ணுதார்' என்றும், 'நாள் வழிப்படும் அடிசில்' என்பதற்குப் பகல் பொழுதே உண்ணும் அடிசில் சமைத்தற்கு எனவும் பொருள் கொள்ளப்படுவதால் மாதரி மனை புகுந்த மறுநாள் காலையே கண்ணகி கோவலனுக்கு உணவு படைத்தாள் என்பது தெளிவு.

## மாதரி கொடுக்கவில்லை!

இருந்தாலும், மாதரிதானே முன் வந்து மடைக் கலங்களைக் கொடுக்காமல் 'நீர்' என்று மற்றவர்களை விளித்து ஏன் ஏவுதல் வேண்டும்? அன்றைய நாளில் மாதரிக்கு இன்றியமையாது கவனிக்க வேண்டிய வேறு ஒரு வேலை இருக்கும்

போலும்; ஆனால் அது என்ன என்பதை ஆசிரியர் இங்கு கொலைக்களக் காதையில் விவரித்துக் கூறவில்லை!

## கண்ணகியின் தனிமை

இனி, கண்ணகியைத் தழுவிப் பிரியும் காலத்தில், கோவலன், "......உழையோர் இல்லா ஒரு தனி கண்டு தன் உள்ளகம் வெதும்பிக்" கண்ணீர் பெருக்குகின்றான் என்று அடிகளார் அறிவிக்கின்றார். கண்ணகி ஏன் தனியே இருத்தல் வேண்டும்? ஐயை முதலிய ஆய்ச்சியர் எங்கே போயினர்? ஆய்ச்சியர் எல்லோரும் வேறு ஒரு வேலையில் ஒருங்கே ஈடு படச் சென்று விட்டனரோ? இவை பற்றியும் ஆசிரியர் இக் காதையில் விளக்கவில்லை! கண்ணகி கோவலன் தலை மாலையை வாங்கித் தன் குழலில் சூட்டிக் கொள்கிறாள். கோவலன் விடைபெற்றுச் செல்கிறான். எதிரிலே இமிலேறு வந்ததையும் இழுக்கென்று அறியாதவனாய் நடந்து சென்று பொற் கொல்லன் விரித்த வலையிலே சிக்கிக் கொள்கிறான்.

## தேவியின் கனவு

இனி, இதே பொற்கொல்லன் இதே நாளில் அரசன்முன் சென்று எதிர்ப்படுகிறான். அப்பொழுது அரசன் இருந்த நிலையைக் கூறும் முகத்தான் அரசியின் நிலைமை பற்றியும் இளங்கோ நமக்கு அறிவிக்கின்றார் "கடல் மகளிர் ஆடல் தோற்றமும், பாடற் பகுதியும் பண்ணின் பயன்களும், காவலன் உள்ளம் கவர்ந்தன" என்று பாண்டியன் தேவி "தலை நோய் வருத்தம் தன் மேலிட்டு" மன்னனைக் கூடாது தன் கோயில் புகுந்து முந்திய நாள் இரவைத் தனியே கழித்தாள். அவளுக்கு அந்த இரவில் உறக்கம் இனிது வந்து பொருந் தியதா? அன்றித் தீக்கனவுகள் ஏதாவதேனும் தோன்றி உறக்கத்தைக் கெடுத்தனவா? இவற்றையும் இளங்கோ வடிகள் இந்தக் கதையில் (கொலைக்களக் காதையில்) சொல்ல வில்லை. ஆனால், அரசி அருகில் இல்லாமலேயே ஓரிரவைத் தனியே கழித்து மன்னன் தன் மந்திரச் சுற்றம் நீங்கிச் 'சிந்தரி நெடுங்கண் சிலதியர் தம்மொடு, கோப்பெருந்தேவி யின் கோவிலை நெருங்கிக் கொண்டிருந்த செய்தியை மட்டும் கூறி நிறுத்துகின்றார். பொற்கொல்லன் மன்னனை அந்த நிலையில், அந்த இடத்தில் கண்டு விழுந்து பணிந்து "கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்" தன் வீட்டில் வந்து மறைந்திருப் பதாகக் கூறுகின்றான். அரசன் பொற்கொல்லனின் சூழ்ச்சி யினை உணராமல் அவன் விரித்த வலையில் சிக்கி விடுகின்றான்; காவலர்களைக் கூப்பிட்டுக் 'கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென'க் கட்டளை பிறப்பிப்பது விடுகின்றான்.

காப்பியத்தின் திருப்புமையாகிய கோவலன் வெட்டுண்ட நிகழ்ச்சியை இவ்வாறு முதன்மை தந்து கூறி முடித்த ஆசிரி

யர் இனிமேல் விரித்துக் கூற இருக்கும் சில நிகழ்ச்சிகள் கோவலன் கொலைப்படுவதற்கு முன்பாகவே நடந்துபோன நிகழ்ச்சிகள் என்பதை எவ்வாறு மறவாமல் வலியுறுத்திக் காட்டுகிருர் என்பதும் மிகவும் சுவை பயக்கும் ஒன்ருகும்.

## மாதரியின் நெய் முறை

அடிசிலாக்குவதற்கு உரிய கலங்களைத் தானே முன் வந்து தராது 'நெடியாதளிமின்நீர்' என்று மற்ற ஆய்ச்சியரை விளித்து மாதரி இட்ட கட்டளைக்கு இங்கு ஆசிரியர் விளக்கம் தருகிருர்! "மாலை வெண் குடைப் பாண்டியன் கோயிலிற் காலை முரசம் கனை குரல் இயம்புமாகலின் நெய்முறை நமக்கு இன்று ஆம் என்று" மாதரி தன் மகளாகிய ஐயையைக் கூப்பிட்டுச் சொல்வதால், கண்ணகி உணவு சமைத்த அந்த நாளே மாதரிக்கு நெய்முறை நாள் என்பது விளக்குகின்றது; எனவே, அவள் நெய்முறையன்று கண்ட "குடப்பால் உறை யா குவி இமிலேற்றின் மடக்கண் நீர் சோரும்......" போன்ற உற்பாதங்களும், கோவலன் சிலம்பு விற்கப் புறப்பட இருக்கும் அந்த நாள் அதிகாலையில் நிகழ்ந்தவையே யாகும். ஆனல், ஆச்சியர் அறிந்தது போன்று வருவது ஒன்று உண்டு' என்று அறிந்து கொள்ளும் ஆற்றல் கோவலனுக்கோ, கண்ண கிக்கோ இல்லாமல் போனதில், வியப்பதற்கொன்றுமில்லை. இளங்கோவடிகள் "தன் குலம் அறியும் தகுதி அன்ருகலின்" என்று மற்ருெரு இடத்தில் இமிலேற்று நிகழ்ச்சி பற்றிக் கூறும் விளக்கத்தையே இங்கும் நாம் கொள்ளலாம்! எனவே, கண்ணகி தன் கணவனுக்கு உணவு படைத்து உறையாடிக் கொண்டிருந்தாலும், ஆய்ச்சியர்கள் எல்லோரும் ஒருங்கே திரண்டு, வருகின்ற தீங்கை வராமல் தடுக்க விரும்பி யவராய்க் குரவையாடப் போயினர்! இங்கு கண்ணகியைக் கோவலன் பிரியும்போது 'உழையோரில்லா ஒரு தனி கண்டு' வருந்தியதற்கு உரிய விளக்கத்தினை மறவாமல் அமைத்து வைத்திருக்கின்ருர். எனவே, கோவலன் கண்ணகியைப் பிரியும் நேரத்திலேயே ஆய்ச்சியர் குரவையாடத் தொடங்கி விட்டனர் என்பது தெளிவாகிறது. குரவையாடி முடிந்த நேரத்திலேயே கோவலன் கொலையுண்டிறந்த செய்தி கண்ணகிக்கு எட்டி விடுகிறது.

## தேவிக்கு வாய்ப்பில்லை

இனி, கொலைக்களக் காதையிலேயே கோப்பெருந்தேவி யின் நிலை பற்றிக் கூற வந்த ஆசிரியர் மன்னனைப் பொற் கொல்லன் சந்திப்பதற்கு முந்திய நாள் இரவை அவள் "தலை நோய் வருத்தம் தன் மேலிட்டு"......மன்னனேடு ஊடிய நிலையில் கழித்தாள் என்று மட்டும் கூறி அந்த இரவில் அவள் நல்லுறக்கம் கொண்டாளா என்பதுபற்றி ஒன்றும் சொல்லாது விடுத்ததனல், பின்னர் வழக்குரை காதையில் அவள் அந்த

இரவில் கண்ட தீக்கனவுபற்றி மறவாமல் விவரிக்கத் தொடங்குகிறார்! இங்கு நாம் சிந்திக்க வேண்டியது கனவைக் கூறுவதற்குக் கோப்பெருந்தேவி அரசன் அவைக் களத்திற்கு ஏன் வருதல் வேண்டும் என்பதேயாகும். கோவலன் இறந்த பின் அவன் கையத்திருந்த சிலம்பு பாண்டியன் தேவியிடம் சென்று சேர்ந்திருக்கலாம். ஆனால், அரசனே சிலம்பைக் கையில் எடுத்துச் சென்று தேவியைக் கண்டான் என்றோ, அவள் கையில் கொடுத்தான் என்றோ, ஊடல் தீர்த்தான் என்றோ, சிலப்பதிகாரத்தில் செய்தியில்லை. ஒரு வேளை கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பினைச் 'சிந்தரி நெடுங்கண் சிலதியர்' இடம் தந்து தேவியிடம் சேர்ப்பிக்கவும் செய்திருக்கலாம். அவள் ஊடல் தீர்ந்த செய்தியை அவர்களே மீண்டும் வந்து அறிவிக்கட்டும் என்றும் அரசன் தன் அவைக்குத் திரும்பியிருக்கலாம். எது எப்படியிருந்தாலும், தான் இரவில் கண்ட கனவை (மன்னன் அருகில் இல்லாது போன நிலையில் தனியே உறங்கியவள் ஆதலால்) விழித்ததும் மன்னனிடம் தெரிவிக்கத் தேவிக்கு வாய்ப்பில்லாமல் போயிற்று! மேலும், தீக்கனவைத் தெரிவிக்கலாமா கூடாதா என்று மனக் குழப்பத்திலும் சிறிது காலம் கழிந்திருக்கலாம்! இங்குக் கண்ணகி தன் கனவைத் தேவந்தியிடம் மாலையில் சொல்வதையும் கோவலன் தான் கண்ட கனவை மறுநாள் மாலை நேரத்தில் கவுந்தியடிகளிடம் கூறுவதையும் மனத்தில் கொள்ள வேண்டும்! தன் பரிவாரங்களாகிய "கூனும் குறளும் ஊமுங்கூடிய குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர" மன்னனைச் சென்று அவைக்களத்தில் காண்பதற்குள், கோவலன் கொலை உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் 'விடுவிடு' என்று நடந்தேறிவிட்டன.

## செங்கண்ணும் கருங்கண்ணும்

கோவலன் கண்ணகியிடம் விடைபெற்றுச் சென்ற அன்றே குரவைக் கூத்தினை ஆய்ச்சியர் ஆடினர் என்பதை மேலே கண்டோம். குரவை முடிந்த நேரத்திலும் கோவலன் வீடு திரும்பாதது கண்டு கண்ணகி கலக்கம் கொள்கின்றாள். அதற்குள் ஊரார் சிலர் கண்ணகியை இரக்கத்துடன் பார்த்துத் தம்முள் ஏதோ பேசிக் கொள்வதைக் கண்டதும் அவளுக்கு ஐயமும் அச்சமும் உண்டாகின்றன. அந்நிலையில் "நண்பகற் போதே நடுக்கு நோய் கைம்மிகும், அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சன்றே" என்று கூறிக் கணவன் அவளைப் பிரிந்து சென்ற காலம் அதே நாளின் முற்பகுதியாகிய காலை நேரம் என்பதை வெளிப்படுத்துகின்றாள். ஆம்! காலையில் கணவனுக்கும் விடை கொடுத்தவள் மாலை வருவதற்குள் அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேள்விப் படுகின்றாள். அந்தோ இரக்கம்! காலையில் கணவனைத்

தழுவியதால் பெற்ற சிலப்பு கூட இன்னும் அவள் கண்களி லிருந்து மாறவில்லை என்பதை அடிகளார் கணவன் இறந்த செய்தி கேட்டுச் 'செங்கண் சிவப்ப அழுதாள்' என்று கூறுகின்றார் : மகளிர்க்குக்குக் கூட்ட முண்மையைச் 'செங்கண்' என்ற சொல்லாலும், கூட்டமின்மையைக் 'கருங்கண்' என்ற சொல்லாலும் வழக்கமாக விளக்கும் மரபினை மேற்கொண்ட அடிகளார், இங்குக் கோவலனுக்கு விடை கொடுத்து அனுப்பிய அன்றைய நாளே அவன் இறந்த செய்தியையும் கேட்டாள் என்பதை உணர்த்துவதற் காக 'செங்கண்' என்ற சொல்லை அச்சாணிச் சொல்லாகப் பயன்படுத்திக் கொள்கின்றார் !

## ஓர் உடலியல் உண்மை

உடனே, கண்ணகி கணவன் இறந்து கிடக்கும் இடத் திற்குச் சென்று அவன் உடலைக் காண்கின்றாள். இங்கு இளங்கோவடிகள் சிறந்த உடலியல் உண்மை ஒன்றைக் கூறிக் கோவலன் வெட்டுண்டு வீழ்ந்த சிறிது காலத்திற்குள் கண்ணகி அவன் உடலைச் சென்று கண்டாள் என்பதை வலியுறுத்துகின்றார் ! கொலைப்பட்ட உடலிலிருந்து சிறிது காலம் வரையில் தான் குருதி வழிந்தோடிக் கொண்டிருக்கும். பின்னர் அது உறைந்து நின்று விடும் ; ஆனால் கண்ணகி சென்று கணவனுடலைக் கண்ட செய்தியைக் கூறும் அடிகளார் "புண் தாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க் கண்டாள்" என்று கூறுவதோடு மன நிறைவு கொள்ளாது "புண்பொழி குருதியராய்ப் பொடியாடிக் கிடப்பதோ" என்று கண்ணகியையும் பேசி அழச் செய்கின்றார் !

இதனால், கண்ணகி கோவலனுக்கு விடை தந்து அனுப் பியது காலை நேரம் என்பதனையும், அவன் வெட்டுண்ட உடலை சென்று கண்டது அதே நாளின் மாலைக் காலம் என்பதனையும் தெளிவாக அறிகின்றோம். இவ்வுண்மையினையே அடிகளாரும் மிகுந்த இரக்கத்துடன் "வண்டார் இருங்குஞ்சி மாலை தன்வார் குழல்மேல் கொண்டாள் தழிஇக் கொழுநன்பால் காலை வாய்ப் புண்தாழ் குருதிபுறஞ் சோர மாலை வாய்க் கண்டாள் அவன் தன்னைக் காணக் கடுந்துயரம்" என்று கூறுகிறார். இப்பகுதியை இளங்கோவின் நினைவாற்றலின் சிகரம் என்று சொன்னாலும் மிகையாகாது !

## அன்றே சென்றாள் !
## அன்றே வென்றாள் !

இனி, வெட்டுண்டு கிடக்கும் கோவலன் உடலைக் கண்ணகி தழுவிய அளவிலே, அவன் எழுந்து நின்று அவள் கண்ணீரைக் கையால் மாற்றி 'இரு' என்று சொல்லி வானுல கெய்தினன் என்று கூறிய அடிகளார் ; கண்ணகி சிறிதும்

காலம் தாழ்த்தாமல் அப்பொழுதே "தீவேந்தன் தனைக் கண்டு இத்திறம் கேட்பல் யான்" என்று அரசன் அவைக் களம் நோக்கிச் சென்றாள் என்பதை வலியுறுத்த "நின்றாள்: நினைந்தாள்; நெடுங்கயற் கண் நீர் துடையாச் சென்றாள்; அரசன் செழுங்கோயில் வாயில் முன்" என்று சிறு சிறு தொடர்களைப் பயன்படுத்தி அவள் சென்ற விரைவினை நம் மனக்கண்முன் கொண்டுவந்து காட்டுகிறார். கண்ணகி அரசன் அவையினைச் சென்று அடையும் பொழுதுதான் கோப்பெருந்தேவி, முன்னாள் இரவில் (ஆயர்பாடியில் குடப் பால் உறையாமல் போன அதே இரவில்—கோவலன் கண்ணகியோடு மாதரி மனையில் தங்கிக் கழித்த அதே இரவில்) கண்ட தீக்கனவை அரசனிடம் கூறி முடித்துக் கொண்டிருந்தாள்! கண்ணகி வழக்காடினாள்; வென்றாள்; மதுரை துஞ்சுவோர் அஞ்சியோட எரியுண்டழிந்தது. ஆம்! வெள்ளிக்கிழமை முன்னிரவுக் காலத்திற்குள் எல்லாம் நடந்தேறிவிட்டன!

## ஈரேழ் நாள் எல்லை

இறுதியாக, இன்னும் ஒரு முறையாலும் கோவலனைக் கொன்று மாபத்தினியாம் கண்ணகியை "மாணப் பிழைத்த நாளே" மதுரை எரியுண்ட நாள், என்பதனை இளங்கோவடி களார்நமக்குத் தெளிவு படுத்துகின்றார். மதுரை எரிகின்ற நேரத்திலே கண்ணகிக்குக் கட்டுரை கூறும் மதுராபதித் தெய் வம் அவள் கோவலனை "ஈரேழ் நாளகத்து எல்லை நீங்கி வானோர் தங்கள் வடிவின்..." மட்டுமே கண்டு கூட முடியும் என்று கூறி அதற்கு விளக்கம் தரும் வகையில் முற்பிறப்பில் கோவலனால் பொய்க்குற்ற மேற்றிக் கொல்லப்பட்ட சங்க மனின் மனைவி கணவன் இறந்து "எழுநாள் இரட்டி எல்லை சென்றபின்" அவனைச் சென்று கூடிய செய்தியைக் கூறுகின்றது. ஊழ்வினை செய்தாரைச் செய்தவாறே வந்து பொருந்துவது உண்மையாதலால் கண்ணகி கணவனைக் கூடும் நாள், மதுரை எரிந்து கொண்டிருக்கும் வெள்ளிக் கிழமையிலிருந்து பதினான்காம் நாள் என்பதோடு, கோவலன் இறந்ததிலிருந்து பதினான்காம் நாள் ஆதல் வேண்டும் என்றும் பெறப்படுகிறது. எனவே, கோவலன் கொலையுண்ட நாளும், கண்ணகி மதுரையை எரித்த நாளும் ஒரே நாள்—வெள்ளிக்கிழமை நாள்—என்பதில் ஐயம் பிறப்பதற்கு இடம் இல்லாது இளங்கோவடிகள் நன்கு தெளிவுபடுத்தி விடுகின்றார். இவ்வகையில் அடிகளாரின் நினைவாற்றல் திறம் எவரும் வியந்து பாராட்டும் ஒன்றாக இருக்கின்றது!

# ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

## காட்சி 9.

நடிகர்: மருதி, ஆதிமந்தி, ஆட்டனத்தி, சரத்குமாரன், இசைமுகிலோன்.
இடம்: சோலை வழி
காலம்: பிற்பகல்

[பள்ளியிலிருந்து செல்லும் மாணவர்கள் சோலை வழியே செல்லுகிறார்கள் சரத்குமாரனும் இசைமுகிலோனும் வருகின்றனர் முன்னே மருதியும் ஆதிமந்தியும் செல்லுகின்றனர்.]

மருதி :—
ஆட்டனத்தி பேசியதைக் கேட்டாயா நீ?
அரியபல செய்திகளை எடுத்துச் சொன்னார்!
போட்டிஎன்றால் இதுவன்றோ போட்டி ஆஆ!

ஆதிமந்தி :—
போடீ நீ பேசாமல் வரமாட் டாயே
கேட்டதற்கு விடையளித்தேன் ... நீயுந்தானே?

மருதி :—
கேள்வியொன்று விடையிரண்டு கிளந்தேனா நான்?

ஆதிமந்தி :—
பூட்டகமாகப் பேசுவதே உனக்கி யற்கை

மருதி :—
புரியாமற் பேசஎனக் கியலா தம்மா! (87)

[ஆண்டு வளர்ந்திருந்த முல்லைக் கொடி ஒரு கொழுகொம் பிற்படர்வதைக் காட்டி]

கொம்பின்றித் தத்தளித்த இந்த முல்லைக்
கொடியின்று நறுங்கொம்பில் படர்தல் பாரேன்!

ஆதிமந்தி :—
வம்பின்றி வரமாட்டாய் மருதி? வாவா
வரவரஉன் போக்கெனக்குப் பிடிக்க வில்லை

மருதி :—
தும்பிக்கு 'மலர்' விரிந்து தேனளிக்கும்
தோகைமயில் கார்மழையைக் கண்டால் ஆடும்

ஆதிமந்தி :—
நம்பிக்கை இல்லாமற் பேசுகின்றாய்

மருதி :—
நானென்ன பேசிவிட்டேன்? பொறுத் தருள்க (88)

ஆதிமந்தி :—
இப்பொழுது நானென்ன செய்தேன் ... ...

**மருதி :—**

…… …… …… நெஞ்சில்
இருப்பதைநான் மறைத்துவைத்துப் பழக்க மில்லை

**ஆதிமந்தி :—**

தப்பாக எண்ணிவிட்டாய்! சலிக்கா மற்சொல்

**மருதி :—**

தமிழ்மகளாய்ப் பிறந்தாய்செந் தமிழைக் கற்ருய்
முப்பொழுதும் இலக்கியத்துள் மூழ்குகின்ருய்
முன்னைவிட இலக்கணத்தை ஆராய் கின்ருய்
எப்படியும் வருங்காலக் கவியா வாய்நீ
எனச்சொன்ஞல் வெகுளிவரக் காரணம் ஏன்? (89)
ஆதிமந்தி பெரும்புலமை உடையாள் என்ருல்
அரைப்பங்கு பெருமைஎனக் கன்ருே தோழீ?

**ஆதிமந்தி :—**

ஏதேது! சுற்றிவளைக் கின்ருயே நீ!

**மருதி :—**

இங்கேநீ சுற்ருமல் வளைத்து விட்டாய்

[அப்போது முகிலோனும் சரத்குமாரனும் வருதலைப் பார்த்து இருவரும் விரைந்து செல்கின்றனர்]

**சரத்குமாரன் :—**

பாதிக்குமேல் அவனும் அவளுந் தானே
பதில்சொல்லி முடித்தார்கள் …… ……

**இசைமுகிலன் :—**

…… …… ஆமாம் போடா
மாதத்திற் கொருமுறையா வதும்நாம் ஏட்டை
மறந்துங்கை யால்தொடுவ தில்லை நன்கு (90)
படித்தவர்கள் விடையுரைத்தார் …… ……

**சரத்குமாரன்**

…… …… போடா முட்டாள்
பாலையிந்தப் பூனைஎன்ன செயுமென் பார்போல்
எடுத்ததற்கெல் லாம் நான்தான் என்று முன்னே
ஏனிற்கின் ருனுனக்குத் தெரியு மாடா?
நடிக்கின்ருள் அப்படியே ஆதிமந்தி
நன்ருகச் சிந்தித்துப் பார்நீ நாளை
தடுத்தொழிக்க முடியாது தம்பி! நீதான்
தாலிகட்டும் முறையுடையோன் …… ……

**இசைமுகிலன் :—**

…… …… அதனு லென்ன? (91)

**சரத்குமாரன் :—**

என்னுவா? இனியடுத்துக் காதல்—பின்னர்
இல்லறத்தில் இணையில்லா இரட்டை யாவார்
பின்ஞல்நீ இஞ்சிதின்ற குரங்கைப் போல
ஏங்கியிருப் பாய்போடா! …… ……

**இசைமுகிலன் :—** [புரியாதவனாய்]
...... ...... ஏக்கம் ஏன்டா?
பொன்னான கொடிஆதி மந்திக்கு அத்தி
புருடனென வந்துவிட்டால் ...... ......
...... ...... வந்தால் என்ன?

**இசைமுகிலன் :—**
தன்னாலே இருவருளம் ஒத்தால் நாம்ஏன்
தடைசெய்ய வேண்டும்;அது தானே பண்பு? (92)

**சரத்குமாரன் :—**
பண்பையள்ளிக் குப்பையிலே போடு! முட்டாள்
பாவையவள் அழகுக்கிவ் வுலகீ டாமா?
கண்பொழியும் அமுதும்அவள் கனிவாய் ஊறும்
கற்கண்டுப் பேச்சும் நறுங்கவினே பூக்கும்
விண்பொருந்தும் முழுநிலவு முகமும், காந்தள்
வேட்கையுறுங் கையும்அன்ன நடையும், ஆடும்
பெண்மயிலாம்; அவளை நீ பெறுதற் கிங்கே
பெரியதவம் செய்திருக்க வேண்டு மேடா (93)

**இசைமுகிலன் :—**
தவஞ்செய்தால் தானே? நான் செய்யவில்லை
சரிதானே? ...... ...... ......

**சரத்குமாரன் :—** [வெறுப்பாய்]
...... வடித்தெடுத்த முட்டாளே கேள்
அவஞ்சொல்வார் பேச்சினை நீ நம்பி வீட்டாய்
அவளழகை அரைநாழி நுகர்ந்தாற் போதும்
நவஞ்செய்யும் மேனிமருக் கொழுந்தை ஒக்கும்
நகைமுத்தம் வாய்பவழம் நறும்பூ ஒப்பக்
கவின்செய்யும் தளிர்க்கொடியைக் காதல் ஊற்றைக்
களிமயிலைக் குயிலைகிளி யைத்தேன்சிட்டை (94)
மணப்பதற்கு நீயிருக்க மாற்றான் வந்து
மடக்குவதாற் சொல்ல வந்தேன் நண்பனென்று;

**இசைமுகிலன் :—** [எள்ளி]
குணக்குன்றே! கோயிலிலே வைத்துப் பார்க்கும்
குறையற்ற அழகினளாய் இருந்தா லென்ன?
வணக்கமுடன் இருமனமும் ஒன்றா விட்டால்
வாழ்வெரியுஞ் சுடுகாடாய் அமையும் நாளும்
பிணக்கோல மாய்க்கொல்லும் வேண்டாம் தம்பீ!
பெண்ணென்றால் கடைப்பொருளா? காயா பூவா? (95)
என்னிடத்தில் அவளுக்கோ உள்ளம் இல்லை
எவ்வாறோ எனக்குமவள் மீதில் இல்லை

[இவ்வளவு எடுத்துரைத்தும் கலங்காத அவன் நிலையைக் கண்ட சரத்குமாரன் அவன் யாரை விரும்புகிறான் என்று அறிய ஆவலுற்று]

சரத்குமாரன் :—

உன்மனத்தைக் கவர்ந்தமயில் யாரோ ......

இசைமுகிலன் :— [நாணி]

...... ...... ...... போடா

உணர்வில்லா மடையன்நீ ...... ......

சரத்குமாரன் —

...... ...... தெரியும் இந்தச்

சென்மத்தில் உன்விருப்பம் நிறைவே ருது

இசைமுகிலன் :— [சினந்து]

சீச்சீச்சி உன்னிடம்யார் கேட்க வந்தார்?

சரத்குமாரன் :—

பன்முறையும் சொல்கின்றேன் ...... ......

இசைமுகிலன் :—

...... ...... தெரியும் போடா

பழந்தமிழர் கொள்கையெலாம் பழகிப் பார்நீ! (96)

சரத்குமாரன் :—

படித்த முட்டாள் நீதான்மாம் பழத்தைவிட்டு

பாழும் எட்டிக் காய்கறிக்க எண்ணுகின்ருய்

இசைமுகிலன் :—

மடத்தனமாய் உளறுகின்ருய் மனம் ஒன்ருமல்

மணம்நடப்ப தில்லையிந்தத் தமிழகத் தில்

[இருவரும் போகின்ருர்கள் ஆட்டனத்தி தனியே பேசிக் கொண்டு வருகிருன்]

ஆட்டனத்தி :—

நொடிப் பொழுதில் வாள்வீச்சு—பின்மருந்து

நோய்நீக்கும் அமிழ்தம் பின்பசி மயக்கம்

தடைப்படுத்தும் தாலாட்டு ''காதல்'' என்னும்

தனிப்பொருளே உன்பெருமை என்ன சொல்வேன் (97)

பாடல்

காதலென்ற பெரு பேறே—உனை

யாதுநிகர்த் திடும் கூறே —(காத)

ஓதுமன்பினிற் ருேன்றி உடம்பினில்

ஊறியுள்ளுயிர் யாவும் நிறைந்துபூம்

போதெனக் கமழ்ந் தேற்பவர் தன்னலம்

போக்கி நற்செயல் ஊக்கி விரிந்திடும் —(காத)

காற்ருற நெருப்பொடுங் கூட்டிக்—கனிச்

சாற்றில் குழைத்துரு ஆட்டி—ஒளி

ஏற்றி உணர்வினைப் பூட்டித்—தமிழ்

ஊற்றில் விளைந்தநற் பாட்டில்—நிகழ் —(காத)

[பாடிக்கொண்டே போகிருன்]

ஒன்பதாம் காட்சி முடிவு

———

## காட்சி 10.

நடிகர் : **மாணவன் 1, 2, அழுமூஞ்சி, சரத்குமாரன், இசைமுகிலன்.** இடம் : **சோலைவழி** காலம் : **மாலை**

[காவிரி நீராடும் விழாவிற் கலந்து கொண்டு அரண்மனையிலும் காவிரியிலும் ஆடற்கலையையும் நீந்தல்கலையையும் வியத்தகு நெறியிற் செய்து காட்டிய ஆட்டனத்தியை உடன்பயின்ற மாணவர்கள் புகழ்ந்து பேசுகின்றார்கள்—சரத்குமாரன் அழுக்காற்றால் அவர்களை எதிர்த்துப்பேசி இசைமுகிலோனிடம் புறங் கூறுகின்றான்.]

**மாணவன் 2 :—**

அப்பப்பா! அரண்மனையில் நேற்று மாலை
அளவில்லாக் கூட்டமடா நீவந் தாயோ?

**மாணவன் 1 :—**

எப்படியும் அடங்கிற்று கூட்டம்! வீரர்
எவ்வளவோ முறைப்படுத்திப் பார்த்து விட்டார்

**அழுமூஞ்சி :—**

இப்பிறப்பில் இனியொருநாள் ஈங்கிதைப் போல்
எவராலும் காண்பதென்ப தரிதாம் அத்தி
ஒப்பில்லாக் கலைஞன் அவன் ஆட்டத்தில்இவ்
உலகமென்ன உம்பருலகும் மயங்கும்! (98)

**மாணவன் 2 :—**

ஆலமுறு மிடற்றொருவன் ஆட்டத்தாலே
ஆருயிர்கள் ஆடுமென்பார் ஆட்டனத்தி
கோலமுறு முத்திரையோ டாடும்போது
குவலயத்தோர் உள்ளமெலாம் உவப்பா லாடும்

**மாணவன் 1 :—**

காலெடுத்தான் அத்தியென்றால் நடனமென்னும்
கலையரசி தலையெடுத்தாள் எனல்பொருந்தும்
நூலறிவெல்லாமவன் றன் கலையை நோக்க
நூற்றிலொரு கூருகா தென்பேன் ......

**அழுமூஞ்சி :—**

.................. வேந்தன் (99)
கரிகாலன் கருத்தினையே கவர்ந்தானென்றால்
கடலுலகம் புகழ்வதிலே வியப்பே இல்லை
வரிதோறும் அவன்பிடிக்கும் அபிநயத்தின்
வளமெல்லாம் புகழ்வதற்கிங் காரால் ஆகும்?

**மாணவன் 2 :—**

அரிதாகும் ஆட்டன் என்ற பட்டம் இந்த
அரசவையில் பெற்றார்யார்? ஆட்டனத்தி
தெரியாத கூத்துவகை இல்லைப் போலும்
தெளிவான பிடி, சிறந்த விறல், மெய்ப்பாடு (100)

**மாணவன் 1 :—**

ஆடல்நூல் தெரியாரும் அறிந்து துய்க்க
ஆடியந்த அரசவையே மகிழச் செய்தான்

**அழுமூஞ்சி :—**

ஓடுகின்ற காவிரியில் நீந்தி யாடும்
ஒப்பற்ற கலையிலும்யார் அவனை வென்ருர் ?
மேடையிலே ஆடுவதைப் போலவேதான்
வெள்ளத்தில் விளையாடி வியக்கச் செய்தான்

**மாணவன் 1 :—**

நாடிவரும் அலையின்மேல் நடனமாடி
நட்டாற்றில் மணலெடுத்துக் காட்டினனே (101)
காவிரியும் காதலிக்கும் அழகன் கன்னற்
கனிச்சாறு கலந்ததெனப் பேசவல்லான்

**அழுமூஞ்சி :—**

காவலருட் கரிகாலன் என்ருல் இந்நாள்
கலைஞரிலே ஆட்டனத்தி என்றுகூற
ஓவியமாய்த் தோன்றி யுள்ளான் ஒரோர் காலத்
திவர்களைப்போல் பெருமக்கள் தோன்று வார்கள்

**மாணவன் 2 :—**

பாவலர்கள் போற்றுமொரு பேறு பெற்ருன்
பள்ளியில் நாம் அவனேடு பயிலும் பேற்றைப் (102)
பெற்றுள்ளோம் ...... ...... ......

**சரத்குமாரன் :—** [அப்பொழுது வந்து]

பாராட்டு ? ...... ...... ......

**மாணவன் :** [மிகமகிழ்ச்சியோடு]

...... ...... ...... அத்திக்குத்தான்

**சரத்குமாரன் :—** [அழுக்காற்ருல்]

...... பிறந்ததுயர்க் கெனத்தெரியாப் பிணத்தைபபற்றி
கற்றவெலாம் காட்டிப் பாராட்டுகின்றீர் !
கலைஞன் ... மகா கலைஞன்! இசை முகிலோன் இன்றேல்
கொற்றவன் முன் அவன் ஆட முடியுமாடா ?
கோமாளி போற்குதித்தால் கூத்தா கும்மோ?
மாற்றில்லா மடையரதைப்புகழுவார்கள்

**மாணவன் 1 :—** [வெகுண்டு]

...... வாயடக்கிப் பேசப்பா வடக்குத்தம்பி ! (103)
கலையென்ருல் விலையென்ன என்று கேட்கும்
கடைந்தெடுத்த மடையன் நீ—எம்மைப் பார்த்து
நிலைதெரியா தேசுகின்ருய்! நெஞ்சி ருந்தால்
தேற்றந்த காட்சிகளைப் பார்த்த பின்பும்
மலைவாக மொழிவாயா ? மன்னர் போற்றி
மதிக்கின்ற கலைஞனை நீ அவமதித்தாய் ?

**மாணவன் 2 :—**

தலையான தமிழ்பயந்த கூத்தின் மேன்மை
தறிதலைகள் அறிவாரோ தமிழே வேம்பு! (104)

**சரத்குமாரன் :—**

என்கருத்தைச் சொன்னதிலே என்ன குற்றம்?

**அழுமூஞ்சி :—** [வெகுண்டு]

…… எவருன்னைக் கேட்டார்கள்?

**சரத்குமாரன் :—** [சிறிது அஞ்சி]

…… …… …… அவன்பால்நீங்கள்
அன்புகொண்ட காரணத்தால் பேசுகின்றீர்
ஆட்டனத்தி எனக்குமட்டும் பகையா என்ன?

**மாணவன் 1 :—**

முன்பிருந்தே பார்த்துள்ளேன் எவற்றிலும்நீ
முரண்பாடே கொண்டுள்ளாய்—முகிலோன் நண்பன்
என்பதனுல் பார்க்கின்றேன் …… ……

**சரத்குமாரன் :—** [சீற்றத்துடன்]

…… …… …… இல்லை என்ருல்

**மாணவன் 1 :—**

என்ன சொன்னுய்? …… ……

**அழுமூஞ்சி :—** [தடுத்து]

…… ஏஏஏ! வேண்டாம் பூசல் (105)

**சரத்குமாரன் :—**

இதுதானே உங்களரும் பண்பு? நன்று

**மாணவன் 2 :—**

எம்மையடித் தொறுத்தாலும் பொறுப்போம் எங்கள்
நிதிநிலத்தை ஊண்உடையைப் பொருளைக் கொள்ளை
நேர்ந்தாலும் பொறுத்திடுவோம்—நெஞ்சில் வஞ்சப்
பொதி சுமந்து வந்தாலும் பொறுத் தவர்க்குப்
புக்குறைய இடமளித்துப் போற்றிக் காப்போம்
மதிதிரிந்து தமிழ்வாழ்வை மாசு செய்ய
மதிப்பாரை மிதிப்பதையாம் மறக்கமாட்டோம் (106)

[அப்பொழுது அங்குவந்த இசைமுகிலோன் மாணவர்கள் நிற்கும் நிலைநோக்கி]

**இசைமுகிலோன் :—**

இங்கென்ன பூசல்சரத்குமாரா? நீயேன்
இடிவிழுந்தாற் போலதிர்ந்து காணுகின்ருய்?

**அழுமூஞ்சி :—**

வங்கத்துப் பயலிங்கே வந்து நம்பால்
வாய்வீச்சு விசுகின்ருன் கிடைக்க ஒண்ணுத்
தங்கமன்ன ஆட்டனத்தி மேலே இந்த
தறிதலைசொல் குறையைநீ தானே கேளு!

**சரத்குமாரன் :—**

பொங்கிவரும் கோபத்தைக் கிளறுதீர்கள்
[முகிலனிடம்]
போக்கற்ற பயல்யானென் றெண்ணி வீணே (107)

பழிசுமத்தி : என்னோடிங் குனையும் சேர்த்துப்
பழிக்கின்றார் நான் ஒன்றும் பேசவில்லை

**மாணவன் 1 :—**

கொழித் தெடுத்த பொய்பேசு கின்றான் ... ...

**இசைமுகிலோன் :—**

... ... ... ... ... ... வீணே
கூக்குரலேன் ? என்னசெய்தி ?

**மாணவன் 2 :—**

[எல்லோருடனும் போய்க்கொண்டே]
... ... ... ... ... ... கூறுவான்கேள்

**சரத்குமாரன் :—**

[மாணவர்கள் போனபின் இதுதான் சமயமென்று அவன் நெஞ்சிற் படுமாறு கோள்மூட்டுகிறான்]

விழித்திருந்தும் குருடன்நீ நெருநல் நேர்ந்த
விழாவில்உன் பாடலின்றேல் அத்தி ஒன்றும்
கிழித்திருக்க முடியாதென் றுரைத்தேன், என்னைக்
கெட்டவனுத் திரித்துன்பால் கூறுகின்றார் (108)

உனைப்பற்றிச் சிறிதேனும் மதிப்பில்லாமல்
உரைத்தார்கள் அதைக்கேட்டேன் உளந்தாளாமல்
முனைப்பாகப் பேசிவிட்டேன முறைக்கின்றார்கள்

**இசைமுகிலோன் :—**

முட்டாள்கள் கிடக்கின்றார் ... ... ... ...

**சரத்குமாரன் :—** [செவ்வியறிந்து]

... ... ... ... முகிலா ! இந்த
வினைக்கெல்லாம் காரணம்யார் தெரிந்தாயா? நான்
விளங்க உனக்குரைப்ப தெல்லாம் வீண்தான்; உன்னை
நினைத்தாலே நெஞ்சிரங்கி வருந்துகின்றேன்
நீசிறிதும் கவலையற்றுத் திரிகின்றாயே? (109)

அவனுற்றான் உனக்கிங்கே பெருமை என்றும்
அரசவையில் அறிமுகம்நீ ஆனதற்கும்
அவனேதான் என முழங்கிகின்றான் ; நீயோ
அரிய இசைக்கலைஞன், உனை ஆட்டக் காரன்
அவமதித்தல் அழகாடா ? அத்தி உங்கள்
அணைப்பிலிருந் துண்டுகொழுத் தாடக்கற்றான்
இவனேயிவ் வாறுரைத்தால் உலகில் நன்றி
இறந்துவிட்ட தென்பதன்றி வேறென்? சொல்லு? (110)

**இசைமுகிலோன் :—**

நன்றிகெட்ட பயலாக ஆட்டனத்தி
நடக்கின்ருன் என்ருலிங் கதுவியப்பே!

**சரத்குமாரன் :—**

அன்றுமுதல் இவ்வாறே பேசுகின்ருய்
அரசவையில் பரிசுபெற்ற செருக்கு, வாழ்வில்
என்றுமவன் உனக்கும்உன் இசைக்கலைக்கும்
எதிராளி என்பதைநீ நினைக்க வேண்டும்
ஒன்றுமின்னும் நிலைகெட்டுப் போகவில்லை
உரைப்பதைக் கேள் ... ... ... ...

**இசைமுகிலன் :**

[மருண்ட உள்ளத்தனுய் என்னசெய்வதென்று புரியாமல்]
... ... ... ... உளஞ்சரியா இல்லை பார்ப்போம் (111)

[என்று கூறிப்போகிருன் சரத்குமாரன் தன்மருந்து வேலை செய்யத் தொடங்குமென்று நினைத்துச் செல்லுகிருன்.]

---

## காட்சி 11.

நடிகர் : **சரத்குமாரன், ஆட்டனத்தி, இசைமுகிலோன், ஆதிமந்தி, மருதி.**

இடம் : **வாவியை அடுத்த பூங்கா**

காலம் : **மாலை.**

[ஆட்டனத்திக்கும் ஆதிமந்திக்கும் உள்ள காதல் வெளிப்படுவதும் மருதியின் உள்ளம் இசைமுகிலோன் விரும்பியவாறு அடையாததும் சரத்குமாரன் எண்ணமும் வெளிப்படும் நிகழ்ச்சிகள்]

**சரத்குமாரன் :—** [தனியே]

எப்படியும் இன்றவளைக் கேட்க வேண்டும்
எரிகின்ற நெருப்பினிலே எத்தனை நாள்
அப்படியே தீய்வதிதை ஆதிமந்திக்(கு)
அறிவித்தலான்றி யெனதுயிர் நில்லாது
முப்பொழுதும் என்னுளத்திற் பரந்து தீயாய்
மூளுகின்ற காதலைக்காட் டிடுவேன்—பின்னும்
தப்பிடிலோ? தக்கவழி நாட வேண்டும்
சரத்குமரன் வைத்த புள்ளிதப்ப லாமா? (112)
பகையாகத் தோன்றியுளான் ஆட்டனத்தி
பரதேசிப்பயலை என்ன செய்கிறேன்பார் ... ...
முகையாக இருப்பதைஏன் கசக்க வேண்டும்
முகிழ்த்துமல ராகுமென நினைத்தேன்—வேறு
வகையில்லைஎன நேர்ந்தால் பழிக்கும் அஞ்சேன்
வரட்டும் அந்தவக்கில்லான்—இன்னும் ஒன்றும்
மிகையாகிப் போகவில்லை ... ஆதிமந்தீ ...
[சேய்மையில் அத்திவர யாரோ வருகின்ருர்கள் எனஎண்ணி]
விரைந்தங்கே வருவதுயார்?... பார்ப்போம் (113)

[சென்று ஒரு மரத்தில் மறைகிருன் அப்பொழுது அங்கே வந்த அத்தி ஆதிமந்தியிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த வனுய்த் தனியே நெஞ்சொடு பேசுகின்ருன்]

**ஆட்டனத்தி :—**

பேசுகின்ற சிற்பமொரு பெண்ணுய் வந்து
பித்தேறச் செய்கிறதே... ஆட்டனத்தி!
மாசகன்ற மதியை மன வானத்தில்நீ
வரவழைக்கப் பார்க்கின்ருய் அவளும் உன்பால்
நேசமுடை யாளென நீ நினைக்கின் ருயா?
நீலவிழி வாய்திறந்து பேசும் போது
கூசுவதேன் என்கின்ருய்... கொம்புத் தேனை
கொள்ள நினைக் கின்ருய்உன் குறையை ஏனே (114)
மறந்துவிட்டாய் வளர்ப்பவரை அன்றி யிங்கே
வாய்த்தஉற வேதுனக்கு... கிளியே... வாவா

பாடல்

உண்மை தெரிவாயோ? கிளியே—எனக்கு
உதவி செய்வாயோ.

செஞ்சுடர்க் கில்லாத வெம்மை—அந்த
வஞ்சியிடத் தினில் உண்மை—கண்டு
நெஞ்சம் உருகி எந்நாளும்—அவள்
பஞ்செனும் சீறடி மூளும்—இந்த —(உண்மை)
காந்தத் திலில்லாத ஈர்ப்பு—மங்கை
கூந்தலில் உள்ளதைப் பார்த்து—உயிர்
போந்து நிலை தடுமாறும்—அவள்
மாந்தளிர்ச் சேவடி சேரும்— இந்த —(உண்மை)
கள்ளிடம் இல்லா மயக்கம்—அவள்
வள்ளிதழ் தம்மில் வியக்கும்—அதை
உள்ளி உறக்கமும் தேயும்—மனம்
துள்ளியவள் பதம் தோயும்—இந்த —(உண்மை)
வேலிடத் தில்லாத கூர்மை—விழி
நீலத்திருக்கும் அந் நீர்மை—கண்டென்
சீலஞ்சிதைந் துயிர் வாடும்—உளம்
காலை அடைக்கலம் தேடும்—இந்த —(உண்மை)
பறந்துசெல்லும் கிள்ளாய்!என் பாசமெல்லாம்
பகர்வாயோ உயிராகும் பாவையின்பால்?

[சிறிதுமுன்பு ஆண்டுவந்த ஆதிமந்தி ஆட்டனத்தி பாடியதையும் பேசியதையும் செவிமடுத்து ஒன்றும் அறியாதவள் போல]

**ஆதிமந்தி :—**

துறந்தினிமேல் வாழமுடி யாதென் றங்கே
தூதுசொல்லி வாராயோ கிள்ளாய்? இன்றேல்
இறந்திடுவேன் என்பதனைத் தெரிந்து கொள் நீ
எப்படிஎன் கவிதை? ...... ......

**ஆட்டனத்தி :—** [அவள் வரவிற்கு வியந்து]
...... ...... ஆ! ஆதிமந்தி! (115)
நீயேஓர் ஒப்பற்ற கவிதை மேலும்
நிகரற்ற காவியம்உள் நிறைபொருள் நீ
வாயாலே மொழிவதெல்லாம் வண்ணப் பாடல்
வற்ருத கற்பனையுன் மேனி, என்றும்
சாயாத அணிவிளங்கும் தமிழ்நீ ......

**ஆதிமந்தி :—**
...... ...... ...... என்ன?
சரமகவி எப்பொழுது பயின்றீர் தாங்கள்

**ஆட்டனத்தி :—**
ஓயாமல் உனை நினைந்து பழகி விட்டேன்
உரைப்பதெல்லாம் கவியாகத் தானிருக்கும் (116)

**ஆதிமந்தி :—**
காட்சிஐயம் துணிவுகுறிப் பறிதல் ஒன்றும்
கலவாமல் களவுசெய்யும் இலக்கணத்தின்
மாட்சியையான் இன்றறிந்தேன்—மன்னரெல்லாம்
மதிக்குமொரு கலைஞர்நீர் ...... ......

**ஆட்டனத்தி :—** [துயரத்தோடு]
...... ...... பிறந்த தற்கே
சாட்சியில்லை எனைப்பற்றி ...... ......

**ஆதிமந்தி :—** [மகிழ்வோடு]
...... ...... தவறே இல்லை
சரியான பொருத்தந்தான் அரிய காதல்
ஆட்சிசெயும் கவிதை செம்புலப்பெயல்நீர்க்
கழியாத இலக்கியம்நாம் ஆனோம் ......

**ஆட்டனத்தி :—** (117)
...... ...... ...... நம்மை
எண்ணித்தான் பாடினரோ புலவர் ......

**ஆதிமந்தி :—**
...... ...... ...... அன்பே!
என்மனத்தின் இருள்கடிந்த இரவி தாங்கள்
விண்ணிலவு யானுவேன் ஒளியா வீர்நீர்

**ஆட்டனத்தி :—**
விளையமுதம் யானுவேன் சுவையா வாய்நீ

**ஆதிமந்தி :—**
கண்ணெளியாய் யானிருப்பேன் ...... ......

**ஆட்டனத்தி :—**
...... ...... கண்ணு வேன்யான்

**ஆதிமந்தி :—**
கவியாக யானிருப்பேன் ...... ......

**ஆட்டனத்தி :—**
...... ...... சொல்லா வேன்யான்

ஆதிமந்தி :—
பண்ணிசையாய் யானிருப்பேன் ... ... ... ...

ஆட்டனத்தி :—
... ... ... ... யாழா வேன்யான்

ஆதிமந்தி :—
பாருங்கள் இம்மலரை ... ... ... ...

ஆட்டனத்தி :—
... ... ... ... வேண்டாவாடும் ... ... ... ... (118)

ஆதிமந்தி :—
குயிலிசையைக் ... ... ... ...

ஆட்டனத்தி :—
... ... ... ... கேட்பதற்காம் குளிர்ச்சியில்லை

ஆதிமந்தி :—
குளப்படியில் கயல்மீன்கள் ...... ......

ஆட்டனத்தி :—
...... ...... கோலமில்லை

ஆதிமந்திதி :—
மயிலசைவைப் ...... ......

ஆட்டனத்தி :—
... ... ... ... பார்ப்பதற்கோர் மருட்சியில்லை

ஆதிமந்தி :—
வான்விளங்கும் மதியழகை ...... ......

ஆட்டனத்தி :—
...... ...... மறையும் தேயும்
செயலரிய இயற்கையின்பால் தேடித் தேடிச்
சிந்தித்துக் காணுகின்ற இன்பமெல்லாம்
அயலகலா துன்னிடத்தில் அழிவில் லாமல்
அமைந்திருக்க வெளியே போய் வேறுகாட்சி (119)

விழிபார்க்க எண்ணினும்என் உள்ளம்மட்டும்
விரும்பாது கரும்பே !இச் சுரும்பு பாடக்
கழிவாக்கும் தேன்புளிக்கும்; அமிழ்தம் முன்னோர்
கட்டியகற் பனையாகும் கனிகள் மூன்றும்
அழுகிவிடும் ஆதலினல் அவற்றை வேண்டேன்
ஆருயிரே செந்தமிழ்போல் என்னுளத்தில்
ஒழியாமல் வீற்றிருக்கும் பேறு மட்டும்
உதவுகசெந் தமிழன்னை ...... ......

ஆதிமந்தி :— [நாணத்தோடு]
...... ...... தலைவ ! வந்து (120)

நெடுநேர மாயிற்றிங் கென்னைத்தேடி
நேராக வந்திடுவார் அன்னை ... ...

ஆட்டனத்தி :— ...... ...... ...... அன்பே!

தடுமாறுகின்றேன் என் உயிரை நானே
தவருமல் இவ்விடத்தில் ...... ......

ஆதிமந்தி :—
...... ...... தமிழை விட்டு
விடுமாறு கூறுபவர் உண்டா ......

ஆட்டனத்தி :
...... ...... ...,.. கண்ணே !
வீடுவரை நான் ...... ......

ஆதிமந்தி :
...... ...... வேண்டாம் மாற்ருர் கண்ணில்
படுமாறு வருங்காலம் ...... ......

ஆட்டனத்தி :—
...... ...... வருங்காலத்தைப்
பசியொடுபார்த் திருக்கின்றேன் வருக வாழ்க ! (121)

[ஆதிமந்தி சென்றபின்]

பாடல்

"காணுமரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅம் காண்டுமெம் அரும் பெறலுயிரே.
சொல்லும் ஆடும் மென்மெலஇயலும்
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே"

[என்று பாடிக்கொண்டே செல்கின்ருன். சிறிது முன்பே வந்து ஒரு மரத்தின் மறைவில் நின்றிருந்த மருதி வெளிப்பட்டுத் தன் உள்ளக் கிடக்கையைப் பேசுகிருள்]

மருதி :—
கலைவல்லான் ! காண்பதற்கும் இனியன்! நல்ல
கட்டிளங்காளை, யவளுக் கேற்றவன்ருன் ...
விலையில்லாமாணிக்கம் ஆதி மந்தி ... ?
"விதியே" உன்விளையாட்டைப் புரிந்திடாதே!
அலையின்றி ஆழ்கடல்நீர் இருத்தல் கூடும்
ஆதிமந்தி ஆட்டனத்தி யின்றி வாழாள்—

[அப்பொழுது இசைமுகிலோன் பின்புற மாகவந்து]

இசைமுகிலோன் :—
இலையில்லாப் பூங்கொடியைப் பார்த்துப் பார்த்திங்
கென்ன உரையாடுகின்ருய் மருதி? நீயும்— (122)
வந்திடுவாய் எனவிரை வோடாசை பொங்க
வந்தேன்என் எண்ணம்போல் நிகழ்ந்த தென்னே!

மருதி :— [வெறுப்போடு]
விந்தையென்ன? மாலையிலே சோலைப் பாங்கர்
விரும்பிவரல் எனக்கியற்கை—செய்தி என்ன ?

இசைமுகிலோன் :—
கொந்துமலர் தேடிஎதற் காக வண்டு

மருதி :—

குறிப்புமொழி வேண்டா சொல் !—

இசைமுகிலோன் :— [காதலுணர்வு வெளிப்பட]

...... ...... குயிலே உள்ளம்

நொந்துமிக வாடுகிறேன், அமுதம் ஊறும்

நோக்களித்தென் ஆவியினைக் காத்தல் வேண்டும் (123)

மாருத காதலினால் மதிகுலைந்தேன்

மருந்தும்நீ வாழ்வும்நீ மருதி !

மருதி :— [எள்ளல் நகையோடு]

...... ...... ...... ஒன்றும்

தேருமல் பேசுகின்ருய் என்றன் சிந்தை

செந்தமிழை நாடுகின்ற போது காதல்

வேருக முளைத்திடுமா என்னுளத்தில்

இசைமுகிலோன் :—

விருப்பமென்றோர் சொல்லிசைத்தால் போதும் வெட்டிக்

கூருக ஆக்கிடினும் கொம்பே ! உன்பால்

குவிந்த உளம் மீளாது ...... ......

மருதி :—

...... ...... முகிலோய் ! காலம் (124)

ஆகிறது வருகின்றேன் ...... ......

இசைமுகிலோன் :— [அவளைத் தடுத்து]

...... ...... அன்பே ஒன்றும்

அறையாமல் சென்ருல்என் ஆவிபோகும்

மருதி :— [நகைத்து]

...... சாகிறது புதிதன்று [விரைகிருள்]

இசைமுகிலோன் :— [தடுத்து]

...... ...... மருதி ! உன்னை

மருதி :— [வெகுண்டு]

தமிழ்மரபிற் பிறந்தவனு ? தடுக்கா தேபோ !

இசைமுகிலோன் :—

வேகிறதென் உள்ளம்இனி விளையாடாதே

மருதி :— [உறுதியோடு]

விருப்பமில்லை விட்டுவிடு ......

இசைமுகிலோன் :— [துயரத்தோடு]

...... ...... ...... மருதீ !

[மருதி விரைந்துபோய் விடுகிருள் எல்லாவற்றையும் மறைவில் நின்று கண்டு கொண்டிருந்த சரத்குமாரன் வெளிப்பட்டு வந்து முகிலோனைப்பிடித்து அசைத்து]

சரத்குமாரன் :—

...... ...... ...... துள்ளிப்

போகிறதே மான் அடடா ! துயரம் !...ஏன்டா

புரியாமல் அவளிடத்தில் கெஞ்சுகின்ருய் ? (125)

[தொடரும்]